
# கலைமன்றம்

மலர் 2 — 11ஜூன் '55 — இதழ் 24

## பொருளடக்கம்


| | |
|---|---|
| கார்ட்டூன் | 2 |
| விநோதப் போராட்டம் (தலையங்கம்) | 3 |
| கண்ணோட்டம் | 5 |
| காதலும், கண்ணீரும் | 7 |
| பாரதி தாசன் கவிதை அரங்கம் | 14 |
| அவளுமில்லை—அவனுமில்லை | 17 |
| கனவுக் கன்னி | 25 |
| வெட்டும் ஒட்டும் | 33 |
| கலைமன்றம் பார்லிமெண்ட் | 35 |
| புல்லுருவி | 37 |
| திருடர்கள் ஜாக்கிரதை | 47 |
| நெப்டியூன் | 49 |
| எரிமலை | 53 |
| அழகு எரிந்தது | 54 |
| தூக்கமே வாழ்க! | 65 |
| விவாத மேடை | 69 |
| நமது செய்திகள் | 73 |
| திரை உலகம் | 74 |
| சிறைக் கோட்டம் | 77 |
| கேளுங்கள் கொடுக்கப்படும் | 79 |
| புகைப் படக் கலைப்பகுதி | 80 |


பிரசுரமாகும் எழுத்தோவியங்களிலுள்ள பெயர்கள், நிகழ்ச்சிகள் யாவும் கற்பனை.



“எனது இருப்பிடத்திற்குமா தீயிடப் புறப்பட்டாய்?”

—அதிசய விநாயகர்.

விருப்புடன் வருக என வாழ்த்துபவர் வாழ்த்தட்டும்.
வெறுப்புடன் வேண்டாமென்போர் விருந்துண்டு வாழட்டும்.

# கலைமன்றம்

சென்னை | 11—6—55 | சனி

# விநோதப் போராட்டம்

'தீண்டாமை' எந்த வடிவில் எங்கு நிலவியிருந்தாலும் அதை நசுக்கி எறிய வேண்டும். தீண்டாமையைக் கடைப்பிடித்து வருவோர் எவராயினும் தக்க தண்டனைக்கு ஆளாக நேரிடுமென்று அண்மையிலே டில்லி மக்கள் சபையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இப்புதிய சட்டத்தின் தன்மையைப் பொதுமக்களுக்குப் புரியவைக்க வேண்டுமென்னும் பெரு நோக்கோடு சென்னை அரசாங்கத் தாழ்த்தப்பட்டோர் நல் வாழ்வுத்துறையினர் சுவரொட்டி விளம்பரத்திற்கென படம் (போஸ்டர்) வெளியிட்டனர்.

அவ்வளவுதான் 'இந்து'வுக்கு ஆத்திரம் கிளம்பிவிட்டது. 'அந்தப் போஸ்டரை வாபஸ் வாங்கு' என்ற கூச்சலைக் கிளப்பி, சென்னை அரசியலார் மீது சுடு சொற்களை வீசி, 29-5-55-ம் தேதி இதழிலே தலையங்கம் தீட்டித் தன் இனத்தாரைப் போராட்டத்திற்குத் தூண்டி விட்டிருக்கிறது 'இந்து'. ஜூன் 5-ம் தேதியன்று சர்க்கார் அலுவலகத்தின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்களாம். டில்லி வரை காவடி எடுத்துப் 'பறிபோன மானத்'தைத் திருப்பிப் பெறத் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

நாமும் அப்படத்தை இங்கு பிரசுரித்துள்ளோம் அப் படத்தில் காணும் 'உயர் சாதிக்காரன்' பூணூல் அணிந்திருக்கிறான்—உச்சிக்குடுமி வைத்திருக்கிறான். ஆகவே அவ் உயர் சாதிக்காரனைச் சித்தரிக்கப்

பட்டிருப்பவனைத் தங்கள் இனத்தவனாக ஒப்புக்கொண்டு உறுமுகிறது 'இந்து' வர்க்கம். ஆனால் உண்மைக்குத் திரையிட்டு மறைக்க மறையோர் கூட்டத்தால் முடியாது ஒருக்காலும்.

சுவரொட்டி காட்டும் சித்திரம் நாட்டின் இன்றைய நிலையின் விளக்கம். ஒவ்வொரு பேரூரிலும் சிற்றூரிலும் அக்கிரகாரம் தனியாகவும்—சேரி தனியாகவும் இன்றுவரை இருப்பதை 'இந்து' மறைத்துவிட முடியாது. இத்தகைய 'தனித்தனி' வாழ்வை விரும்பித் தனியாகவே அக்கிரகாரம் அமைத்து வாழ்ந்து வருகிற இனம் இந்தச் சாதாரணச் சுவரொட்டியால் மனம் புண்படுவதாகப் புலம்புவது விந்தையினும் பெரும் விந்தை யல்லவா!

இதே சுவரொட்டி, ஆச்சாரியார் அரசாட்சியே இன்றளவுமிருந்து வெளியிடப்பட்டிருக்குமானால் இந்து எழுதி யிருக்குமா? அதன் வர்க்கந்தான் போராட்டம் செய்வோமெனப் புறப்பட்டிருக்குமா இவ்வாறு? அவ்வாறு நடந்திருந்தால் அது 'தேவ மகாத்மியம்' எனக் கருதப்பட்டிருக்கும். ஆனால் நடப்பதோ காமராசர் அரசாங்கம். எனவே 'தன் வர்க்கத்தாரல்லாதாரின் அரசாங்கம்' என்றகண்ணோட்டத்துடன் நோக்கி—விசித்திரமாக விளக்கி—போர் என்று பூச்சாண்டி காட்டுகிறது இந்து வர்க்கம்.




இவ் வெறும் காட்டுக் கூச்சலுக்குச் செவி சாய்த்துச் சென்னை மாநில அரசியலார் ஒருவேளை சுவரொட்டியை வாபஸ் வாங்குவார்களேயானால் அச் செய்கை சாதி வெறியர்களுக்குக் காட்டும் சலுகை—தாழ்த்தப் பட்டிருக்கும் இனத்திற்கு இழைக்கும் தீங்கு என்று எச்சரிப்பதோடு அச்சிட்டுள்ள சுவரொட்டிகள் அனைத்தும் குறிப்பாக அக்கிரகாரங்கள் தோறும் வீடு தவறாமல் ஒட்டப்பட வேண்டும் என்றும் வேண்டுகிறோம். அப்போதுதான் தீண்டாமை ஒழிப்பு வெற்றி பெற முடியும்.




இப்போது தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் 'காலபலன்' சரியில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நான் ஜாதகம் கணிப்பது எப்போதுமே தப்பியதில்லை. சமீபத்திலே கூட எனது நண்பரொருவர் தொத்துநோயோடுகிடந்தார். அவரால் பெரிய தொந்தரவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தன. இப்படிச் சொல்லி அலுத்துக்கொண்டார்கள் அவரைச் சுற்றி சர்வ சதா கவனித்து வந்தவர்கள். ஆனால் எனக்கென்னமோ அவர் சொல்லாமல் கொள்ளாமல் 'டிக்கெட்' வாங்கி விடுவார் என்றே மனதில் பட்டது. அதே மாதிரி நண்பர் யாரிடமும் சொல்லாமலேயே கடையைச் சுருட்டி விட்டார். கேட்டதெல்லாம் தரும் கற்பக விருட்சமும்—காமதேனுவும் அவர் போயிருக்கும் இடத்தில் கிடைக்கலாம். ஆனால் அந்தத் 'தேவலோகம்' வெறும் கற்பனையாச்சே, அங்கு என்ன கஷ்டப்படுவாரோ என் அருமை நண்பர் என்ற கவலை மட்டும் எனக்குத் தீரவில்லை. ஏண்டா 'ஜாதகம்' கணித்தோம் என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

அந்தக் கவலை இன்றும் தீராத காலந்தான் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் கெட்ட காலம் என்று எழுதப் பயந்து 'காலபலன்' சரியில்லைஎன்று மாத்திரம் 'நைஸாக' எழுதினேன். "கோபம் என்ற சொல்லிலிருந்து 'கோபித்தல்' என்ற சொல்லவழங்கப்படுவது போல 'வேகம்' என்ற சொல்லிலிருந்து 'வேகித்தல்' என்ற புதுச் சொல்லை ஏன் உண்டாக்கக் கூடாது?" "வாதம் என்ற சொல்லிலிருந்து வாதித்தான் என்ற சொல் தோன்றியிருப்பது போல் 'கீதம்' என்ற சொல்லிலிருந்து கீதித்தான் என்ற புதுச் சொல்லை உண்டாக்கினால் என்ன பிழை? இலக்கணம் குறுக்கே நின்றிராவிட்டால் 'கீதம் பாடும் குயிலின் குரலே' என்று பாரதியார் பாடியதை 'கீதிக்கும் குயிலின் குரல்' என்றே மாற்றிப் பாடியிருப்பார்!" "இப்படியெல்லாம் கதைத்த கண்ருவி அறிஞர் யார்" என்று கேட்கிறீர்களா? அவர் தான் மத்திய அரசாங்க ரயில்வே உப மந்திரி அளகேசன். பழுதான ரயில்வே பாலத்திற்கும், பாழடைந்த ரயில்வே லைனுக்கும் பார்ஸலை உடைத்தும்—உடைக்காமலும் திருடும் பாக்தாத் பக்காத் திருடர்களுக்கும்—பதில் சொல்ல முடியாமல் படாத பாடு படுகிறார் அனுதாபத்திற்குரிய அழகேசன். அவருக்கு எப்படி நேரம் கிடைத்தது தமிழ் ஆராய்ச்சி செய்ய?

என்ற ஆச்சரியம் மட்டுமல்ல, தமிழ்ச் சொற்களை அக்கு வேறு ஆணி வேருகப் பிரித்து அலசி எடுத்து 'கம்போஸ்' செய்ய ஆரம்பித்து விட்டாரே தமிழ் மொழியை, என்று அதிர்ச்சியும் ஏற்பட்டது, புரூப் திருத்த ஆளே கிடைக்காது என்ற காரணத்தால்.

தடியெடுத்தவனெல்லாம் தண்டக்காரன்—பேனப் பிடித்தவனெல்லாம் எழுத்தாளன்—நாற்காலியில் அமர்ந்தவனெல்லாம் ஆசிரியன் என்று (அளகேசன் 'தியரி' கூறும் முடிவுப்படி) **'வேகித்து'** வளர்ந்து வரும் இந்த நாளில அளகேசனைப் போன்ற அமைச்சர், மொழியாராய்ச்சியி லீடுபட்டது தவறு என்று சொல்ல வரவில்லை. தமிழைப் பழிப்பவனை என் தாய் தடுத்தாலும் விடேன் என்ற என் கொள்கை நினைவுக்கு வருவதால் "அளகேசரே! ஆபத்தான வேலையில் அநாவசியமாக ஈடுபடுகிறீர்; ரயிலை 'ரிப்பேர்' செய்ய வேண்டியவர் தமிழை 'ரிப்பேர்' செய்ய வருகிறீர்—இது பயங்கரமான முன்னேற்றம்—வேண்டாம் 'ஓவர்ஸ்பீடு'—பிறகு 'ஆக்ஸிடெண்ட்' ஏற்பட்டால் பார்லிமெண்டில் இது வரை வாய் திறவாத 'இட அடைப்பு மூடைகள்' கூடப் புள்ளி விபரம் கேட்டுப் பேச ஆரம்பித்து விடும்" என்று அவருக்கு ஞாபகப்படுத்துகிறேன். சிவப்பு 'சிகினல்' கொடுத்தும் மீறி ரயில் புறப்பட்டால் நான் என்ன செய்வது? —**'பித்தன்'**


# தவருதீர்கள்

கலைமன்றம் ஜூன் 18-ம் தேதி இதழைக் காணும் தோறும் களிப்படைவீர்கள். எனவே காணத்தவருதீர்கள்.

## ஏன்?

இலக்கிய விற்பன்னர் திரு. எஸ். சிதம்பரம் எம். ஏ. ஐ. ஏ. எஸ். **'கனவு'** என்னும் மனோதத்துவக் கட்டுரை யொன்று எழுதுகிருர். அனைவரும் ஆய்ந்துணர வேண்டிய ஆராய்ச்சிக் கட்டுரை.

பிரபல எழுத்தாளர். **நாரண துரைக்கண்ணனுரின்** எழுத்தோவியமும் இடம் பெற்று இன்பம் பயக்கும்.

திரு. **'சுகி'** அவர்களும் 'நமக்குள்ளே! என்ற தொடர் கட்டுரையை கலைமன்றத்தில் தொடர்ந்து எழுதுகிருர்.

உங்கள் அபிமான எழுத்தாளர்களான **விருதை. ந. இராமசாமியும், கோவி. மணிசேகரனும்** இரு அருமையான படையல்களை வழங்குகிருர்கள்,

**கலைமன்றம்**

**ஜூன் 18-ம் தேதி இதழ் ஒரு பொக்கிஷம்.**

**படிக்க மறவாதீர்கள்**

# காதலும் கண்ணீரும்



ஏ.வி.பி.ஆசைத்தம்பி

## 6

சாவித்திரி எங்கள் வீட்டிற்கு வந்தப் பிறகு என் படிப்பு வெகுவாக பாதித்துவிட்டது.

"நீதான் பரிட்சையில் ஒழுங்காக மார்க் வாங்க மாட்டேனென்கிறாயே...வீணாக ஏன் பள்ளிக்கூடத்திற்கு வருகிறாய்—உனக்கு ஊர் சுற்றுவதற்கே நேரம் போதவில்லை", என்றாள் என் வகுப்பு உபாத்தியாயினி—அவள் என் தெருவில் வசிப்பவள். அதனால் கேட்கிறாள்.

நன்றாகப் படிக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு வீட்டுக்கு வருவேன். அதற்கும் சாவித்திரி முடிவு கட்டி விடுவாள்.

"நல்ல ஆங்கிலப்படம் ஓடுகிறதாமே.......வா போய்விட்டு வரலாம்", என்பாள். "எனக்கு நேரமில்லை நீ வேண்டுமானால் போய் விட்டு வா!" என்பேன். அதோடு விட்டுவிட்டால் பரவாயில்லையே-

"அத்தை இந்த சாந்தாவைப் பார்த்தீர்களா? எங்கு கூப்பிட்டாலும் வரமாட்டேனென்கிறாள்," என்பாள்.

அம்மாவின் சிபார்சு உடனே கிடைக்கும்.

"போய் விட்டுதான் வாயேன்!"

அம்மா இப்படி சொல்வதற்கும் காரணம் இருந்தது. சாவித்திரி வேண்டும் போதெல்லாம் அவள் அப்பாவிடமிருந்து பணம் தருவித்துக் கொண்டிருந்தாள்.

அதில் பாதியை அப்பாவே செலவழிப்பார்.

பிறகு சாவித்திரி பேசுவதற்குப் பதில் பேச்சேது?

வெளியில் போகும் போதுதான் இந்தத் தொந்தரவென்றால் வீட்டில் இருக்கும் போதும் அப்படியே!

நான் படிக்க ஆரம்பிக்கும் போதுதான் என் மேஜை அருகில் அவளுக்கு வேலையிருக்கும்.

அவளது சரளமான சுபாவத்தை நான் முழு மனதோடு ஆதரித்தேன் என்றாலும்....அளவுக்கு மீறினால் எதிலும் தொந்தரவு தானே?

உபாத்தியாரம்மாள் தினமும் திட்டிக் கொண்டிருந்தாள். நான் இதை ஜாடையாக அப்பாவிடம் சொல்லி 'டியூஷன்' வைக்கும்படி சொன்னேன். அவர் கேட்டால்தானே?

"பெண்பிள்ளைக்கு படிப்பு எதற்கு?" என்று கேட்கும் கட்சியைச் சேர்ந்தவர் அவர். ஏதோ கடனுக்காக...அம்மாவின் நிர்ப்பந்தத்தின் பேரில் என்னையும் என் அக்காளையும் படிக்க வைத்தார்.

"பாஸ் செய்தால் நல்லது—செய்யாவிட்டால் நஷ்டமொன்றுமில்லை", என்று வெளிப்படையாக அப்பா சொன்னார்.

அப்பா இப்படிச் சொல்லிவிட்ட பிறகு சாவித்திரியைத் தட்டிக் கேட்க முடியுமா?

என்னைக் கண்ட இடத்திற்கு இழுத்துக் கொண்டு போனாள்.... அவள் "டிரஸ்" செய்வதைப் போலவே என்னையும் உடுத்திக் கொள்ளச் சொன்னாள்......

பொதுவாகச் சொல்லப் போனால் நான் மிகவும் மாறுதலடைந்தேன்.

என்னையும் அவளையும் அக்காள், தங்கை என்றுதான் சொன்னார்கள் பார்த்தவர்கள்.

இப்படிக் காலம் கழிந்துகொண்டிருந்த போதுதான்...ராஜா எங்கள் கண்களில் ஒருநாள் தென்பட்டார்.

சாவித்திரி தான் முதலில் பேசினாள்.

"என்ன, வருகிறேன் என்று சொல்லிய பிறகு ஒரு தடவையாவது அந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லையே, ஏன்!"

"வேலை அதிகம்!" என்றார்.

"அதுதான் ஒரு சுற்றுப் பருத்திருக்கிறீர்களோ?" என்றாள் சாவித்திரி.

நான் சிரித்து விட்டேன்.

அவர் தன்னையே ஒரு முறை பார்த்துக் கொண்டார்.

"ஏன் சாந்தா நீ சொல்...நான் பருத்தா போய் விட்டேன்?" என்றார்.

என்னால் அவர் கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியவில்லை......முகத்திற்கு ரத்தம் பாய்ந்தது.

"அப்படி யொன்றும் இல்லையே!" என்றேன்.

"அதுதானே கேட்டேன்" என்று சமாளித்துக் கொண்டார்.

"அது கிடக்கட்டும். எப்போது வீட்டுக்கு வருகிறீர்கள்?" என்றாள் சாவித்திரி—

நானும் அதைத் தான் கேட்க வேண்டும் என்று நினைத்தேன்.

"நாளைக்கு!"

"எத்தனை மணிக்கு?"

"ஏன்?"

"நாங்கள் வீட்டிலிருப்போமோ என்னவோ......ஏதாவது வேலையிருக்காதா?"

"சரி! சரியாகப் பத்து மணிக்கு வருகிறேன்!"

"தவறாமல் வரவேண்டும்!" என்றேன் நான்

"கட்டாயம் வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பு என் உள்ளத்தில் ஒரு மாதிரியான வேதனையை உண்டாக்கியது!

* *

"இன்று ராஜா இங்கு வருகிறேன் என்று சொல்லியிருக்கிருர்...அவருக்கு சாப்பாடு இங்கேதான் அத்தை!" என்ருள் சாவித்திரி, மறுநாள் காலையில் எழுந்தவுடன்.

"அதற்கென்ன ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது!" என்ருள் அம்மா.

சாவித்திரி ராஜா விஷயத்தில் இவ்வளவு அக்கரை எடுத்துக் கொள்ளுவதென்னவோ எனக்குப் பிடிக்கவில்லை!

ராஜா என் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிருர்.

அவர் எனக்கே உரியவர்...... என்னுடன் மட்டுந்தான் அவர் பேசவேண்டும்.......வேறு எந்தப் பெண்ணையும் அவர் ஏறெடுத்துப் பார்க்கக் கூடாது என்றெல்லாம் என் மனம் எண்ணியது!

என்னையே நான் கண்டித்தேன்.

அவர் யாரோ............நான் யாரோ...ஏன் இம்மாதிரியெல்லாம் நான் எண்ண வேண்டும்?

என்னைப் போல வேறு ஒரு பெண் எண்ண மாட்டாளா?

ஏன்? சாவித்திரியும் அவரைக் காதலித்தாள் என்ருல்....எனக்கென்னமோ அவள் போக்கு அப்படித்தான் தெரிந்தது.

அவள் பணக்கார வீட்டுப் பெண்! ஒருவேளை அவள் நினைத்தால் எதுவும் நடக்கும்!

நான் ஏன் இதை யெல்லாம் நினைக்கவேண்டும்? ஒருகால்...... ராஜாவும் என்னைக் காதலித்தால்...அப்போது என் ஆசை திருப்தியடைய மார்க்கமுண்டு!

ஆனல் ஒன்று!

அக்கா ஒரு தடவை சொன்னாள்...'காதல்' ஒருவர் உள்ளத்தில் ஒருதடவைதான் பிறக்கிறதென்று!

அதைப் போல் என் உள்ளத்தில் இப்போது பிறந்துள்ள காதல், நிறை வேறு விட்டால் மீண்டுமொருதடவை மலர்வதேது!

"உனக்கேற்றவர் ராஜாதான்!" என்று என் உள்ளம் சொல்லியது.

பிரயோஜனம்!

நான்தான் என் மனதை இவ்வளவு தூரம் அலட்டிக் கொள்கிறேன். ஆனல் அவர்...?

## 7

சரியாகப் பத்து மணிக்கு சைக்களில் வந்து இறங்கினர் ராஜா. அப்பா அப்போதுதான் ஆபீஸுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.

"வாப்பா ராஜா உட்கார்!" என்று அவரிடம் சொல்லிவிட்டு, எங்களைப் பார்த்து, "ராஜாவோடு பேசிக்கொண்டிருங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

நாங்கள் வழக்கமாகப் படிக்கும் அறையில் வந்து ராஜா உட்கார்ந்தார்.

என்னைப் பார்த்ததும் ராஜா லேசாகச் சிரித்தார்.



நானும் பதிலுக்குப்புன்முறுவல் செய்தேன்.

அதற்குள் அம்மா என்னைக் கூப்பிட்டாள்.

போனேன்.

"ஏன் யாராவது எனக்குச் சமையல் வேலையில் ஒத்தாசைக்கு வரக் கூடாதா?'' என்றாள்.

நான் தானே கடமைப்பட்டவள்?

அங்கேயே உட்கார்ந்து அவளுக்கு உதவிசெய்வதில் ஈடுபட்டேன். ஆனால் மனம் ராஜா இருந்தஇடத்தைச்சுற்றி வந்து கொண்டிருந்தது.

தினமுமா அவரைப் பார்க்க முடிகிறது? என்றோ ஒருநாள் வந்திருக்கிறார்... அப்போதும் நமக்கு சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே. மனதில் எனக்கு ஒரு யோசனை தோன்றியது.

"அம்மா முதலில் கொஞ்சம் காப்பி கொடு......அவருக்குக் கொடுக்கலாம்....சாப்பாடு ஆக வெகு நேரம் ஆகும் போலத் தெரிகிறதே!'' என்றேன்.

"ஆமாம்!' 'என்று அவளும் அதைஆமோதித்து ஒருகோப்பையில் காப்பி கலந்து கொடுத்தாள்.

நான் அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். தன்னுடைய காரியம் நிறைவேற வெண்டும் என்றால் எவ்வளவு ஏமாற்றவேண்டியிருக்கிறது?

நான்போகும் போது சாவித்திரி எதிரே வந்தாள். அவளைக்

கண்டதும் என் உள்ளம் 'திக்' என்றது. காப்பியை அவள் வாங்கிக் கொண்டு போய்விட்டாள்.

"கொண்டு போய்க் கொடு! நான் தோட்டத்துப்பக்கம் போய் வருகிறேன்!" என்று அவள் சொன்ன போதுதான் எனக்கு உயிர் வந்தது.

நிம்மதியாகப் போனேன். அவர் நான் உட்காருமிடத்தில் அமர்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார்.

லேசாகத்தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "காப்பி சாப்பிடுங்கள்!" என்றேன்.

பத்திரிகையைத் தாழ்த்தி விட்டுஎன்னை பார்த்தார் அவர்! நான் தலை குனிந்தேன்.

"எங்கே சாந்தா உன்னைக் காணவேயில்லை?எங்கே போய் விட்டாய்?" என்றார்.

"அடுப்பங் கரையில் கொஞ்சம்வேலை யிருந்தது!" என்றேன்.


"வர வரப் பேசவேமாட்டேனென்கிறாய்? இதற்காகத் தான்நான் இங்கு வருவதேயில்லை!"என்றார்.

"ஏன்சாவித்திரி தான் இருக்கிறாளே. அவளோடு பேசிக் கொண் டிருப்பது தானே!" என்றேன்.

"அவளோடு பேசிக் கலந்து விட்டேன்!" என்றார்.

நான் சிரித்து விட்டேன்.

"நான் இங்கு வந்ததே உன்னைப் பார்ப்பதற்குத் தான்!" என்றார் அவர்.



எனக்கு உடம்பு ஜில்லிட்டு விட்டது.

எனக்காகவா அவர் இங்கு வருகிறார்?

அப்படி யென்றால்......என்ன அர்த்தம்?

நான் சமாளித்துக் கொண்டேன்!

"வார்த்தைகளுக்குத் தான் பஞ்ச மில்லையே!" என்றேன்.

"வாய் வீச்சுக்காரன் என்று என்னை நினைத்து விட்டாய்? அப்படி நினைத்திருந்தால் நீ...தவறு செய்துவிட்டாய் சாந்தா?"

"ஏன்?"

"நான் பொய் பேசிப் பழக்கப் பட்டவன் அல்ல...உண்மையாகச் சொல்கிறேன்......நீ இங்கு இல்லை யென்றால் எனக்கும் இங்கு வேலையில்லை.......அதை நான் இங்கு முதலில் வந்த போதே முடிவு செய்து விட்டேன்!"

நான் பூரித்துப் போனேன் சந்தோஷத்தினால் ரத்தக் குழாய்கள் வெடித்து விடும் போலிருந்தது. என்ன பதில் பேசுவதென்று எனக்குத் தெரியவில்லை. என் நிலைமையைச் சமாளிக்கவோ என்னவோ அவர் காப்பியை எடுத்துக் குடிக்கலானார்!

சாவித்திரியும் அதற்குள் வந்து விட்டாள்.

அதற்கு மேல் அவர் பேசவா போகிறார்?

நான் கோப்பையை வாங்கிக் கொண்டு திரும்பினேன்.

"எனக்காக வருகிறார்"........

"எனக்காக வருகிறார்!" இவ் வார்த்தைகள் என் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே யிருந்தன!

அடுப்பங்கரையில் எனக்கு வேலையே ஓடவில்லை. அம்மா ஒரு வேலை சொல்ல நான் இன்னொரு வேலை செய்தேன்! அதைக் கண்டு விட்ட அவள்,

"சாந்தா நீ எனக்கு உதவி செய்யாவிட்டால் போகிறது. உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும்!" என்றாள்.

என் மன நிலை அவளுக்கு என்ன தெரியும். வாழ்வில் ஒரு நாள்...

உள்ளத்தில் ஒலிக்கும் ஆனந்த கீதம் என் காதுகளுக்கு மட்டுந் தான் கேட்டது. அதனின் இன்பமான அதிர்ச்சியிலே என்னை நான் முழு முழுக்க மறந்து விட்டிருந்தேன். அந்த நேரத்தில் என் மனம் யாரைப் பற்றியும் நினைக்கவில்லை...!

அவர்...நான்!

இரண்டு பேர்.

தூங்கியும் விழித்தும் இராத நிலை......உள்ளத்தில் நிறைந்த இன்பம்...அமைதி.

என்னவோ நானும் செய்து கொண்டிருந்தேன். மூன்று மணி

நேரம் போனது தெரியவில்லை

"போய் அவர்களைச் சாப்பிடக் கூப்பிடு?" என்றாள் அம்மா.

அங்கே போய்ப் பார்த்த போது-

அவர் ஈசிசேரில் படுத்தபடியே தூங்கிக் கொண்டிருந்தார்.

சாவித்திரி! படித்துக் கொண்டிருந்தாள்.

"சாவித்திரி! படித்தது போதும்..........அவரை எழுப்பு. அம்மா சாப்பிடக் கூப்பிடுகிறாள்?" என்றேன்.

"சாப்பிட வாருங்கள்!" என்று சாவித்திரி ஒரு சப்தம் போட்டாள்.......

"அடேயப்பா!" என்று கூறிக் கொண்டு அவர் எழுந்து விட்டார்.

## 8

என் உள்ளத்தில் அழியாத ஒரு சித்திரத்தை எழுதி விட்டு ராஜா போன பிறகுதான் பல சம்பவங்கள் நடந்தன.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்கள் எங்களைப் போன்ற சாதாரணக் குடும்பத்தவர்கள்தான் என்றாலும் பூர்வீகச் சொத்து கொஞ்சம் இருந்தது. அவர்களுக்கு சேகர் என்ற மகன். சேகர் சிறு வயதிலிருந்து என்னோடு சேர்ந்து விளையாடியவன். என் அக்காவுடன் அவன் பேசி விளையாடியதில்லை...எனக்கும் அவனுக்கும் தான் சிநேகிதம். (வளரும்)

# முக்கிய அறிவிப்பு

ஸ்ரீமகள் கம்பெனியின் பிரசுரங்களாக வெளிவந்து கொண்டிருக்கும், **"கலைமன்றம்"** (இலக்கிய வார இதழ்), **"கரும்பு"** (சிறுவரின் வார இதழ்), **"கலை அரங்கம்"** (சினிமா மாத இதழ்) ஆகிய பத்திரிகைகளில் பணிபுரிந்து கொண்டிருந்தவர்களான **பால்வண்ணன், பூவண்ணன், கலைச் செல்வன்** ஆகியவர்கள் எங்கள் ஸ்தாபனத்தைவிட்டு, வெளியேறி விட்டார்கள். எனவே அவர்கள் பெயரால் கம்பெனி பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்துக்கள் வைத்துக்கொள்ளவேண்டாம் என்று பொதுமக்களையும், ஏஜண்டுத் தோழர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

சென்னை
1—6—,55

**எஸ். பிரான்ஸிஸ்,**
உரிமையாளர்.



# பாரதி கவிதை

## பிரிவு

### நேரிசை வெண்பா.



1. மத்தலைக்கும் நற்றயிராய் மாய்கின்ற சிற்றுள்ளம்
செத்தழியக் கொட்டுமேயிச் செந்தீயை மெத்தத்தான்
சுற்றம்போல் வந்திங்கு சூழ் பகையாம் ஏரொளியார்
முற்றத்தில் மொய்த்த நிலா.

2. சிலையெழிலின் மிக்குயர்ந்த செவ்வழகர் என்றன்
கலைப்புலமைக் கண்ணாளர் சென்றார்—நிலவே
நிலையில் ஒளிக் கதிரால் நீயென் உயிரைக்
குலையற்க கூற்றாக வந்து.


3. கன்னற் குரலெழுப்பிக் கூவாதே கார் குயிலே
மன்னர் பிரிந்ததுயர் மாறாது—உள்ளம்
அழியாக் கடலொலியாய் ஆர்கலிக்கும் பின்னும்
பழியிசையும் மூட்டும் பகை.

4. சில்லென்று பூத்த சிறுநெருஞ்சில், முட்கள்ளி,
வில்லம்பு, கற்றாழை, வேலிவற்றைப்—பொல்லாதார்
பூம் படுக்கை என்றுரைத்துப் போட்டாரோ நள்ளிரவும்
தாம் தூங்கா தல்லலுறும் கண்.

5. அந்தியிலே வந்தெரிக்கும் அத்தென்றல் மேனியெலாம்
வெந்தீயாய்ச் சுட்டெரிக்கும் செவ்வுணவோ—பந்தை
விழுங்கலென நெஞ்சில் அடைத்துவிடும் சற்றே
எழுங்காம வெந்நோய் இடர்?



# தாசன் அரங்கம்



7 - AUG 19[illegible]6
MADRAS

6. பாகே! பனிநீரே! பைந்தொடியே! செந்தமிழே!
தோகாய்! எழிற்பாவாய்! தொல்கலையே!—நாகார்
இசைப்பாவே! பண்ணே! எனமாயப் பொய்யால்
வசையுற்றேன் வாடுகிறேன் நொந்து.


7. கன்னத்தில் தட்டியதும் கண்மலரை முத்தியதும்
என்னாகத் தொய்யில் எழுதியதும்—முன்னாள்
ஒழுகியதை ஓர்ந்தின்று என்னாவல் நெஞ்சே!
பழங்கதையைப் பார்க்காதே இன்று.

8. காமக் கலையறியக் காதல் அழகொழுக
நாமணந்த நல்லுண்மை நாநிலத்தில்—கோமகனே
ஏன் மறந்தாய்? ஞாயிரும்புண் ணீராயென் நல்லுடலும்
தானழியத் தானோஐ சாற்று.

9. முத்தணையும் பொன்முலையை முத்தி முயங்காது
பித்தேறிப் பொன்திரட்டப் பேரன்பர்—புத்தகத்தை
வித்தி விளைக்காத வெற்றுழவன் ஒப்பத்தான்
பித்துருக்கப் போனாரோ பின்?

10. போதலரும் போதினிலே போய்வருவேன் பொற்
[றொடியே
காதலறம் காத்திருப்பாய் கண்மணி நீ—தாதலரும்
பூ முல்லை சான்றென்றார் பூண்முலையாய் பூத்ததுகாண்
பூமுல்லை பொய்த்தாரே இன்று.

—ஞான-ஜெயலட்சுமி.



# மே தினச் சிறுகதைப் போட்டி

குறித்த காலத்தில் வெளியிட இயலாமல் காலம் தாழ்த்தி வெளியிட நேரிட்டமைக்காக வாசகர்கள் பொறுத் தருள்வார்களென்று நம்புகின்றோம். ஏராளமான கதை கள் போட்டியில் கலந்து கொண்டன. யாவற்றையும் நன்கு படித்துணர்ந்து கூடி விவாதித்தற்குப் பின்னர் இம் முடிவை வாசகர்கட்கும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

**முதற் பரிசு**

கதையின் பெயர்: **எல்லைக்கப்பால்**

எழுத்தாளர்: **என். பி. சுப்பிரமணியம்**

பாசிங்காபுரம்,
பொதும்பு அஞ்சல்
(மதுரை மாவட்டம்)

**இரண்டாம் பரிசு**

கதையின் பெயர்: **மனித மிருகம்**

எழுத்தாளர்: **இதயன்**

எல். என். ரோடு,
மாதுங்கா (ஜி. ஐ. பி)
பம்பாய் 19.

## பிரசுரத் தகுதி பெற்றவை:

1. **இருண்ட வாழ்வு** (ஆதி. சு. கருப்பையா, போத்தனூர்)
2. **பிணம் பேசியது** (அழகிரி. விசுவநாதன், மைசூர்)
3. **வாழ வேண்டுமா?** (ஆ. செயராமன், பெங்களூர்)
4. **இடமாற்றம்** (காதலழகன், பெரியகுளம்)
5. **மலர்ந்த மொட்டு** (வளவன, சென்னை)
6. **ஓர் இரவு** (பொற்கோ, கொக்கேரி, தஞ்சை மாவட்டம்)
7. **திணையில் பனையா?** (வேலை. எஸ். எழில், வேலூர்)
8. **அன்பும் அழகும்** (வ. மு. சுந்தரராசன், சென்னை)

இக்கதைகள் யாவும் கலைமன்றம் இதழ்களில் அவ்வப்போது பிரசுரமாகும். ஆர்வமுடன் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றி கலந்த பாராட்டுதல்

—தேர்வுக் குழுவினர்.



# அவளுமில்லை.. அவனுமில்லை

நிழல்

-பதி-

மங்களபுரியின் மத்தியில் அமைந்திருந்த மாதா கோவிலின் மணி பத்தடித்து ஓய்ந்து கொண்டிருந்தது.

மையிருள்!

சில இடங்களிலே மின்சார விளக்குகள் ஒளிவிட்டு இருளை விரட்டிக் கொண்டிருந்தன. மக்கள் கூட்டம் அங்குமிங்கும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அமைதி......சிறிது, சிறிதாகப் படர்ந்து கொண்டிருந்தது.

திடீரென்று மக்களிடையே பரபரப்பு......அங்கு மிங்கும் ஓடினர். அவர்களை விரட்டிக்கொண்டே ஒரு அறிவிப்புப் பறந்து வந்தது.

"சிறிதுநேரத்தில் புயல் வீசலாம். ஆகையால் மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்."...... கண நேரத்தில் இதைக் கக்கிவிட்டு ஒரு போலீஸ் லாரி தீப்பொறி போல் பறந்தது.

எங்கும் புயல்......புயல்.........என்றே பேச்சு.

மக்கள் மந்தை சிதறடிக்கப்பட்டது. வாகனங்கள் தீப்பொறி போல் விரைந்தன.

ஊரெல்லாம் ஒரே ரகளை.

இயற்கையை எதிர்க்கச் சக்தியற்ற மனித வர்க்கம், உயிரைப் பாதுகாக்க எங்கெங்கோ ஓடின......... ஒதுங்கின......பதுங்கின.

கடைகள் மூடப்பட்டன. மோட்டார்கள், வண்டிகள், வாகனங்கள் இவற்றின் போக்குவரத்து தடைப்பட்டது.

வீதியெங்கும் பீதியின் சூழ்நிலை. கணநேரத்தில் பயங்கர அமைதி... மயான அமைதி.

மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும், ஒரு நோயாளியைச் சுற்றி, வைத்தியரும், சுற்றத்தாரும் பயங்கர முடிவை எதிர் நோக்கிக் கொண்டிருப்பதைப் போல் ஊரே மனக் குழப்பத்தில் பதிந்து கிடந்தது.

*　　*　　*

மகரவீதிக் கோடி வீட்டிலே குடியிருக்கும் பொன்னியும் அப்படித்தான். இந்தப் பீதி இன்று மட்டும் அவளுக்குப் புதிதல்ல. தினமும் அவள் உள்ளத்தை உலுக்கி, வாழ்வை அரித்துக்கொண்டிருக்கும் நிரந்தரப் பீதி.

யாவரும் தங்கள் உயிரை இழக்கப் பயந்து பாதுகாப்புடன் அடங்கிக் கொண்டனர். ஆனால் பொன்னி......?

அவள் சாவை வெறுக்கவில்லை...! வரவேற்றாள். அதன் 'அனுக்கிரகம்' எப்போது கிட்டுமென்று ஏங்கிக் கொண்டிருந்தாள்.

நிமிடத்திற்கு...நிமிடம் அவள் உள்ளத்தில் அர்த்தமற்ற ஒரு

பயம் அலட்டிக் கொண்டே இருந்தது.

கடந்த இரண்டு நாட்களாக யார் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாளோ, அவனுடைய வரவையே அன்று பார்த்துக்கொண்டிருந்தாள். ஜுரம் கண்ட அவள் உடலில் நடுக்கம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

மணி பதினொன்று!...யாவரும் எதிர்நோக்கும் சூருவளியை அப்போது காணோம்.

கதவைச் சிறிதாகத் திறந்து கொண்டு, வீதியின் ஊடே தன் பார்வையைச் செலுத்தினாள். ஒரே இருள்.

தூரத்திலே மின்னிக்கொண்டிருந்த மின்சாரக் கம்பம் மட்டும் அந்த வீதியில் அனாதையாகத் தனித்து நின்றது.

மனித இனத்தின் ஊசலாடலே அற்றுக் கிடந்தது.

சிறிது நேரம் பொறுமையோடு இருந்த அவள் இதயம் தேக்கி வைத்திருந்த பெருமூச்சை உதறியது. அடக்க முடியாத நெஞ்சத் துடிப்போடு கதவைத் தாழிட்டாள்.

விளக்கை இலேசாக இறக்கி விட்டுப் படுக்கையை நோக்கி நடை வைத்தாள்.

லொட்...லொட்...லொட்.... ...
அதோடு அந்தச் சப்தம் செத்து விட்டது. கதவைத் திறந்தாள்.

அவன் நுழைந்தான். அவள் உடல் வெடவெடத்தது. பயத்தின் உணர்வு மின்சார ரசம்போல் அவள உடலின் ஒவ்வொரு அங்கங்களிலும் ஊடுருவி ஓடியது.

தள்ளாடித் தள்ளாடி...வீட்டின் மூலையில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் போய்ச் சாய்ந்தான்.

ஒரு செம்பில் நீரை மொண்டு அவனிடம் நடுக்கத்துடன் நீட்டினாள்.

"ஏண்டி உனக்குக் கொஞ்சமாவது புத்தியிருக்கா? வந்த கால் கூட ஆறல அதுக்குள்ளே நீட்டிறயே......'!

"அப்ப சாப்பாடு போடட்டுமா?" நடுக்கத்துடன் கேட்டாள்.

"சீ! நாயே! உன் கூப்பாடே, பெரிய கூப்பாடாப் போச்சு வந்து வராததுக்குள்ளே. கேள்விமேலே கேள்வி..." என்றான்.

"அப்படி நான் தப்பா ஏதும் சொல்லவில்லையே...," என்றாள்.

"தப்பாவது, கொட்டாவது... முட்டாள். உன்னோடு பெரிய எளவாப் போச்சு...சரி சாப்பாட்டைப் போடு..." என்றான் அலட்சியமாக.

பரபரப்புடன் பொன்னி அடுக்களைக்குள் நுழைந்து சாதத்தைப் போட்டாள்...... போட்டு விட்டு ஒதுக்கமாகக் கதவண்டை நின்று கொண்டாள்.

தடுமாற்றத்துடன் எழுந்து வந்து இலைமுன் உட்கார்ந்தான்.

கைகள் சோற்றை அள்ளி எங்கோ கொண்டு வைத்தன. ஒரு வாய்ச் சோறுதான் அள்ளி வைத்திருப்பான். குமட்டல் வந்தது.

"சோற்றைப்பாரு...... சோற்றை......" என்று சிடுசிடுத்துக் கொண்டே கொக்கரித்துச் சிரித்தான் ....அந்தச் சிரிப்பு பொன்னியைத் தாக்கி நடுங்கச் செய்தது.

சாப்பாட்டை ஒரே எத்தாக எத்திவிட்டு, முழந்தாளில் கையை ஊன்றி எழுந்தான். எழுந்து கொண்டிருக்கும்போதே கீழே சாய்ந்தான். கணவன் விழுவதைக் கண்ட பொன்னி "ஐயோ" என்று பதறிக்கொண்டே ஓடி அவனைப்

பிடித்தாள். ஏதோ பிதற்றிக் கொண்டே "விடு...விடு" என்ருன்.

பொன்னி விடாமல் அவனை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

படாரென்று அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான்.

வேதனை மீறிடப் பீறிட விலாவிலேயே மிதித்தான்.

அப் பேதையின் அழுகுரல் அடுக்கடுக்காக அவ்விரவில் சிதறிச் சென்றது.

மனிதாபிமானம் மடிந்து போகவில்லை! சுற்றுப்புறத்தி லுள்ளவர்

---

*** மதுவிலக்கு அமுலிலுள்ள நாடு இது. ஆனுல் மதுவுண்ட வழக்கிற்கோற் அளவில்லை.**

*** போதை காட்டிய பாதையிலே போவோர் தொகையோ அளவற்றவை.**

*** அத்தகைய பயங்கரப் பாதையிலே போய்க் கொண்டிருப்போனின் உத்தம மனைவி பொன்னி. அந்த அபலையின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டப் படுகிறது இங்கே.**

---

அவள் கிறுகிறுத்துக் கீழே சாய்ந்தாள். கீழே விழுந்தவள் மெதுவாக எழுந்தாள்.

"பணம்... பணம்... கொடு...... உம்........" என்று சொல்லிக் கொண்டே கண்களை அகல விரித்தபடி விகாரமான பாவத்துடன் அவளை நெருங்கினுன்.

"இல்லை" என்ற பதிலைச் சட்டென்று சொல்லச் சக்தியற்ற அவள் பயத்தால் பின்நோக்கியே போய்க் கொண்டிருந்தாள்.

நெருங்கி வந்துகொண் டிருந்த அவன் குபீரென்று பாய்ந்து அவள் கையைப் பற்றினுன். அவனின் இரும்புப் பிடியில் சிக்கிய அவள் தன்னை விடுவிக்க முடியவில்லை. ஒரே ஆட்டாக ஆட்டி அவளைக் கீழே தள்ளினுன்.

வெட்டுண்ட வாழைபோல் கீழே சாய்ந்தாள். "ஐயோ"...என்ற பயங்கர இடிமுழக்கம் போன்ற அபயக் குரல் அந்த இரவின் அமைதியையே கிழித்துச் சென்றது.

அவன் விடவில்லை. தன் வெறி அடங்கு மட்டும் அடித்தான்.

கள் எழுந்து வந்தனர். கதவைத் தட்டினர். திறக்கப் படவில்லை. எல்லோரும் சேர்ந்து கதவை உடைத்து உள்ளே புகுந்தனர்.

அவள் இரத்தக் குளத்திலே சுருண்டு கிடந்தாள்.

அவன் வெறிகொண்ட புலி போல் அந்தக் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்துகொண்டு சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்தான்.

அவள் கிடக்கும் பரிதாப நிலையைக் கண்ட அவர்கள் இதயம் குமுறினர்.

* *

அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். இடை இடையே ஏதோ முணகும் குரல் கொப்பளித்துக்கொண்டே வந்தது

பொன்னியின் இதயத்தில் எழுந்த மன அலை ஓயவில்லை. கண் விழித்துப் பார்த்தாள். உடலெல்லாம் ஒரே வலி! தாங்க முடியாத வேதனை.

ஜுரம் அவளைத் தாக்கித் தகர்த்தது!

இருந்தபோதிலும் ஏதோ ஒரு உணர்ச்சியால் வேதனையைப் பொருட்படுத்தாமல் எழுந்து பாலுவின் படுக்கையண்டை வந்தாள்.

ஐயோ! அவன் படுத்திருந்த நிலை!...

அவனைச் சரிப்படுத்திவிட்டு நின்றாள். ஜுரவேகம் அதிகரித்தது. நிலைகொள்ள முடியாமல் படுக்கையை நோக்கி நடந்தாள்.

"வ்ஓ...வ்ஓ..." பயங்கர சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள் பொன்னி.

"பொன்னு... பொன்னு......" என்று யாரோ தூரத்திலிருந்து அவளை அழைக்கும் சப்தம் கேட்டது.

பேந்த விழித்துக் கொண்டே நின்ற பொன்னியின் காதுகளில் குமட்டி வாந்திபண்ணும் சப்தம் கேட்டது. எதையோ பறிகொடுத்தவள்போல் ஓடிப் பார்த்தாள். நாற்றச் சேற்றிலே தலைகுப்புறக் கிடந்தான் பாலு. அலங்கோலமான அவலட்சண தோற்றத்துடன் கிடந்த கணவனை ஓடி வாரித் தூக்கினாள்.

"ஐயோ..." அவளால் சகிக்க முடியாத நாற்றம். அவன் பண்ணிய வாந்தியின் நாற்றத்தோடு கலந்து வந்த அந்த நாற்றத்தை அவள் அதுவரை நுகர்ந்ததே இல்லை. அந்தப் பயங்கர நாற்றம் அவள் மூக்கைத் துளைத்தது.

அவனைத் தூக்கி மறுபடியும் படுக்கையில் கிடத்திவிட்டு அவன் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

இரவு மணி மூன்று.

அதுவரைக் கண்ணீர் மழை பொழிந்த அவள் இமைகள் இறுகத் துடித்தன.

*

விடிந்து பார்த்தாள். அவன் இல்லை! ஆம். அவன் சென்றுவிட்டான். தினமும் தஞ்சமெனக் கிடக்கும் இடத்திற்கே போய்விட்டான்.

ஏதோ ஒரு நோக்கத்துடன் சென்றிருக்கின்றான். அந்நோக்கம் சிதறடிக்கப்பட்டவுடன், நசுக்கப்பட்ட சர்ப்பம்போல் நடு இரவில் வீடு திரும்புவான். தன் தோல்வியில் உருவான சலிப்பையும், வெறுப்பையும் தன் மனைவியிடம் கக்குவான். அப்போதுதான் அவன் மனம் நிம்மதி யடையும். இதுதான் அவன் தினமும் நடத்தும் நாடகம்.

அவன் வாழ்வு ஒரு சூதாட்டம். அந்தச் சூதாட்டத்தில் சிக்கி சீரழியும், சோபை இழந்த சொக்கட்டான் அவள்.

தன் வாலிபத்தையும், ஜீவனையும், ஏனோ அந்த அற்பனுக்கு அர்ப்பணித்துவிட்டாள். அவனைக் கணவனாக ஏற்றதிலிருந்து ஒரு நாளாவது 'இன்பம்' என்ற அந்தச் சொகுசானதை அவள் கண்டதில்லை.

பூ வைத்திருப்பவர்களைக் கண்டால் அவளுக்குப் புல்லரிப்பு! பொட்டிட்டவர்களைக் கண்டால் அவளுக்குப் பொசு பொசுப்பு!! சிரிப்பவர்களைக் கண்டால் அவளுக்குச் சிடு சிடுப்பு!!!

அவள் வாழ்வில் நல்லதுண்டா! பொல்லதுண்டா......! சதா...... வேதனை...விசாரம்.

பொன்னி வருந்தினாள்...மனம் துவண்டாள். என்று தன் கணவன் பாலு தவறான பாதையில் சென்றானோ, அன்றிலிருந்து பொன்னி

யின் மனதிலே வேதனைக் கீரல்கள் படர்ந்துகொண்டே வந்தன.

[அவன் படுத்தும் பாட்டுக்கு அவள் ஆளானாலும், அதை வெளியில் சொல்லிக் கொள்வதில்லை]

துன்பத்தையும், இன்பத்தையும் கணவனோடு சமமாகப் பகிர்ந்து வாழ்வதே வாழ்க்கையில் பெண்மையின் உயரிய இலட்சியம் என்பதை அவள் மனதிற் கொண்டவள்.

ஒரு நாள் இரவு பாலு இரண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டினான். பொன்னி ஏதோ அலுப்பினால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். கதவைப் பலமாக இடித்தான். கதவு திறக்கச் சிறிது நேரமானது.

பொன்னி கதவைத் திறந்தாள். அலங்கோலமான நிலையில் அகங்காரத்தோடு பேசிப் பொன்னியை உதை உதை என்று உதைத்துவிட்டான்.

அன்றிலிருந்து ஆரம்பமான கொடுமைப் படலம் அனுதினமும் நடைபெற்று வந்தது.

கணவனின் அந்தரங்கங்களை அறியமுடியாமலிருந்த பொன்னி. அன்று தன் கணவன் தவறவிட்ட சீட்டுக் கட்டிலிருந்து அவனைத் தெரிந்துகொண்டாள்.

ஆம்! கணவன் ஒரு சூதாடி...!

அவளால் அந்தத் துக்கத்தைத் தாங்கமுடியவில்லை. கணவனின் கயமைத் தனத்திற்கு வழிகாட்டும் அந்தச் சீட்டுக் கட்டை வைத்துக் கொண்டாள். அழுதாள்...முட்டினாள்...மோதினாள். இப்படிப் பல நாட்கள்.

வேதனை—விசாரம்—இவைகளையே அவள் தன் வாழ்வில் கண்டிருக்கிறாள்.

அவன் சூதாடி என்பதை உலகம் அறிந்தது. வீடு சிரித்தது...... வீதி சிரித்தது......

துன்பத்தையே அவளுக்குப் பரிசாக அளிக்கும் கணவனைப்



பற்றி உலகம் பேசுவதை அவள் பொறுக்கமாட்டாள்.

பொன்னிக்காக அந்த வட்டாரத்தில் அனுதாபப்படும் ஒரே பெண் தங்கம்தான். பொன்னி தன் குடும்ப நாடகத்தில் தினமும் ஏற்று நடிக்கும் சோக பாத்திரத்திற்காக அனுதாபப்படும் தங்கத்தால் அதைத்தவிர வேறொன்றும் செய்ய இயலவில்லை.

அன்று அமாவாசை! மையிருள்! கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள். கண்டிப்பான உத்தரவுடன் அவன் வெளியேறி இருந்தான்.

"எனக்கு வேண்டியது பணம். எப்படியாவது தேடி வைத்திரு. நான் வருகிறேன்" என்று பாலு சொல்லிவிட்டுச் சென்ற அந்த காரமான வார்த்தைகள் அவள் உள்ளத்தில் அடிக்கடி பட்டு மறைந்தன.

ஆம்! அவனுக்கு வேண்டியது நூறு ரூபாய். அதை அவள் தேடவேண்டும். எப்படியும் தேட வேண்டும். உழைத்துச் சம்பதிக்க அவளால் முடியாது. பிச்சையெடுத்துப் பழக்கமில்லை. பிறரிடம் கேட்டுப் பழக்கமில்லை. ஆனாலும் அவள் எங்கிருந்தோ இரண்டு மூன்று நாட்களுக் கொருமுறை அவனுக்கு ஐந்து கொடுத்துத்தான் வந்தாள். இது யாருக்கும் தெரியாது. தெரிந்து கொள்ளும்படி அவள் நடந்துகொள்ளவுமில்லை.

பணம்! பணம்!...பணம்! பணம் என்ற பயங்கரமான பதம் அவனை வாட்டியது. அதற்குக் கருவி அவள் தான் அவனது பணப்பசியை முற்றிலும் தீர்க்க முடியாவிட்டாலும், சிறிது, சிறிதாகவாவது தீர்த்துக்கொண்டு வந்தாள். ஆனால் அன்று அவன் கேட்டுச் சென்ற தொகை நூறு. அன்று திடீரென்று குளிர் ஜுரம் அதிகமானது. உடல் அளவுக்குமீறிக் காய்ந்தது. தலைவலி—உடல்வலி—அதோடு உள்ள வேதனை.

* *

என்றும்போல் அன்று அவள் தன் கணவனின் வருகைக்காகக் காத்திருக்கவில்லை. அவள் உள்ளத்திலே ஓர் மாற்றம். கவலைகள் காற்றாய்ப் பறந்தன. கஷ்டங்கள் அவளை விட்டுப் பறந்தன. துன்பம் துண்டிக்கப்பட்டது. அவள் தன் கடமையை நிறைவேற்றிவிட்டாள்.

இரவில் அவன் வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தான். நாய்கள் அவனைச் சுற்றிக் குரைத்துக் கொண்டே வட்டமிட்டன.

வீட்டை அடைந்தான். என்றும்போல் அவன் அன்று கதவைத் தட்டவில்லை.

கதவு திறந்திருந்தது. மெதுவாக அடியெடுத்து உள்ளே வைத்தான். விளக்கு மங்கிப் பழுப்பு நிறத்தில் எரிந்து கொண்டிருந்தது.

விளக்கைத் தூண்டினான். கட்டிலில் அவள் முக்காடிட்டுப் போர்த்திப் படுத்திருந்தாள்.

"பொன்னி... பொன்னி......" என்று பிதற்றினான். தூரத்திலிருந்து ஒரு நாய் ஓ...வென ஊளையிட்டது. விளக்கைக் கையில் தூக்கிக் கொண்டு பொன்னியின் தலைமாட்டில் எதையோ துளாவினான்.

"பளிச்" சென்று மின்னியது. அவன் வாட்ட முகத்திலே ஒரு மகிழ்ச்சி ரேகை மின்னி மறைந்தது.

பளிச்சிட்ட அந்தப் பொருளைத் தூக்கினான்: அதன் கீழே ஆறு பத்து முழு ரூபாய் நோட்டுக்கள், அதன் ஊடே ஒரு வெள்ளைக் காகிதம். இவ்வளவையும் ஒரு உடைந்த குருச்சி தாங்கி நின்றது.

பணத்தை அவன் பேய்க் கரங்கள் தாவிப் பற்றின. மின்னிய அந்தப் பொருளைத் தூக்கி விளக்கின் ஒளியிலே உற்று நோக்கினான்.

ஆம்! அதுதான் அவர்களை தம்பதிகள் என பிணைத்ததாலி. கணவன் மனைவி, என்பதற்கு சாட்சி வகிக்கும் தங்கத் தாலி......

பணத்தையும், தாலியையும் கண்களிலே ஒற்றிக் கொண்டான். அவன் மனம் பூரித்து வலிந்தது. சிரித்தான்; எதையோ நினைத்துச் சிரித்தான்.

பையில் திணித்துக் கொண்ட பணத்தை மறுபடியும் எடுத்து எண்ணினான்.

பத்து... இருபது... முப்பது... அடுத்தாற்போல் ஊடே காணப்பட்ட அந்த வெள்ளைக் காகிதத்தை அசிரத்தையுடன் கீழே நழுவ விட்டான்.

ஆம்! அக்காகிதம் அவனுக்குத் தேவையல்லதான். அதைப் புரட்டி அவன் பார்த்திருந்தால்.

அதில்...............?

அன்பரே!

உங்களை என்றும்போல் எதிர்நோக்கி வரவேற்க முடியாமற் போனமைக்கு வருந்துகிறேன். பெண்களின் கடமைகளில் முக்கியமானதைச் செய்து முடித்துவிட்டதாக நம்புகிறேன். தாங்கள் கோரியபடி முழுத் தொகையும் கொடுத்து உதவ முடியாமற் போயிற்று. அதற்குமேல் முடியவில்லை. இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டேன்

இதோ! இங்கு இருக்கும் அறுபது ரூபாய்களையும், நான் சம்பாதித்த வழி உங்களுக்குத் தெரியுமா? உழைத்தல்ல, உதிரத்தை விற்று. சர்க்கார் ஆஸ்பத்திரியில் உள்ள என் சிநேகிதை ஒருத்தியின் உதவியால் என் "இரத்தத்தை" இரத்த நிதிக்கு ஈந்து அந்நிதி உதவிய பணத்தைக் கொண்டுதான் சிறுகச் சிறுகக் கொடுத்து வந்தேன். அப்படிச் சம்பாதிப்பதைவிட இந்த அபலை வேறு எவ்வகையில் சேர்க்க முடியும். ஒரு கணவனுக்கு இந்தத் தியாகங்கூட ஒரு மனைவி செய்யாவிடில் அவள் பெண்ணா? இறுதியாகத் தங்களுக்கு என் உயிரைத் தவிர தியாகம் செய்ய என்னிடம் ஒன்றுமில்லை. கடைசியாக இந்த அறுபது ரூபாய்களும், தாலியைச் சேர்த்துப் பிணைத்திருந்த சங்


## மாணவர்களுக்கான நூல்கள்

| | |
|---|---|
| ஸ்ரீமகள் இங்கிலீஷ்-தமிழ் கையகராதி | 2 80 |
| ஸ்ரீமகள் தமிழ்க் கையகராதி | 1 80 |
| நீதிநூல் தொகை I | 1 80 |
| " " II | 3 80 |
| திருக்குறள் சிறப்புரை | 1 40 |
| திருக்குறள் (தீப்பெட்டி அளவு) | 0 80 |
| ராமுலு ஆங்கில ஆசான் | 1 80 |
| நேரு இந்தி ஆசான் | 1 80 |
| வீர பாண்டியன் கட்ட பொம்மன் | 1 00 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

கிலியை விற்றுக் கிடைத்தன. இனி எஞ்சி யிருப்பது சின்னஞ் சிறு தாலி! அன்பரே! எந்தத் தாலியைக் கொண்டு என்னை உயிரென மதித் தேனே, அதே உயிருக்குச் சம மான தாலித் துண்டை உங்களுக் குத் தருகிறேன். எந்தக் கரங்கள் அந்தப் புனிதப் பொருளைப் பூட்டி யதோ! அதே கரங்களில் அதை ஒப்படைக்கின்றேன். உங்கள் உயிரை நீங்களே பெற்றுக் கொள் ளுங்கள். நான் வருகிறேன். என் பயணம் நீண்டது. எல்லையற்றது. மரணம் என்னை அழைக்குமுன் நானே அதனிடம் தஞ்சம் புகுகிறேன்.

இங்ஙனம்

வாழமுடியாத அபலை பொன்னி.

பொன்னி இறுதியாக அக் கடி தத்தை எழுதி இருந்தாள். ஆனால் அவன் அதைப் படிக்கவில்லை. ஒருக்கால் படித்திருந்தால்......? அவனுக்கு ஏற்பட்டிருக்கும் பணப் பசியில அவன் எங்கே அதைக் காணப் போகிறான்.

அவன் அதைப் படித்திருந் தாலும், அவன் பொன்னியைக் காணமுடியுமா?

முடியாது...? ஏன்...?

அவள் இல்லை...... அவள் இங் கில்லை... வெகுதூரம் சென்று விட்டாள். அவள் செல்லும் பாதையில் கொடுமை இல்லை...... கயமை இல்லை...துன்பமில்லை...... துயரமில்லை. ஆழ்ந்த அமைதி அவளை அணைத்துக் கொண்டது.

அந்த இரவு ஒரு அபலையை பழி வாங்கிக் கொண்டது. அவனுக்குத் தெரியாது..................அவன் அதை அறிய எத்தனிக்கவில்லை,

ஆனால்......

தன் கையில் சிக்கிய ரூபாய் நோட்டுகளையும், தாலியையும் இறு கப் பற்றிக்கொண்டு பயங்கரமான ஒரு சிரிப்புடன் வீட்டை விட்டு வெளியேறினான். அதுவரைப் பொறுமையுடன் இருந்த வான மண்டலத்தில் சாட்டை போல் ஒரு மின்னல் சுழன்றது. தொடர்ந்தே அமைதியை அதிர அடித்தது ஒரு இடி. மேகப் பட லங்கள் பயங்கரமான இருளைத் தாங்கித் திரண்டு அங்கு மிங்கும் அலைமோதின.

அவன் தன் நடையை வேகமா கக் கட்டினான்......

எதிர்பாராத விதமாகக் காற்று சீறிச் சுழன்றது. ஒரே இரைச்சல். மனதை மருட்டும் பயங்கர இடி யோசை! மின் வீச்சு! பேரிரைச் சல்! மரங்கள் முறிந்து வீழ்ந்தன. கூரைகள் பறந்தன.

அந்த இரவின் அமைதி செத் தது.

பாலு ஓடினான். வேகமாக ஓடி னான். சூதாட ஓடினான். பணப் பசி அவனை இழுத்துச் சென்றது. தன் வேகத்தைத் தடைப்படுத்தும் இருளையும், பேய்க் காற்றான புயலை யும் கிழித்துக் கொண்டு, வில்லி லிருந்து விடுபட்ட அம்புபோல் பாய்ந்து சென்றான்.

இரண்டாவதாக வானையே இரண்டு துண்டாக்கிக் காட்டும் ஒரு மின் வெட்டு, தொடர்ந்த உலகமே உடைந்து வீழ்வதைப் போன்ற இடியோசை, பயங்கரக் காற்று தன் கரத்தைச் சுழற்றி அந்த ஆலமரத்தை வளைத்துக் கீழே தள்ளியது. அதோடு துளி அமைதி. ஆம். **அவனும் இல்லை.** பாலு ஆலமரத்தின் கீழ விரைத் துக் கிடந்தான். **அவளும் இல்லை.** இருவருமே இல்லை.



# கனவுக் கன்னி

ஆர். விசுவநாதன்

எங்கும் காரிருள். நடு இரவு. வான மண்டலத்திலே இங்கொன்றும் அங்கொன்றுமாக மின்னிக் கொண்டிருந்த விண்மீன்களின் ஒளியிலே தெருவின் குறுகிய பாதை அரை குறையாகத் தெரிந்தது. நடந்தேன். நடந்து கொண்டேயிருந்தேன்.

கண்களை மூடிக் கொண்டு நடப்பதைப் போன்ற பிரமை என் உள்ளத்தில் ஏற்படவே அகலக்கண்ணிமைகளை விரித்து இருளைக் கூர்ந்து பார்த்தபடி நடந்து கொண்டிருந்தேன். ஒரு திருப்பத்தில் காலில் ஏதோ தட்டுப்பட்டது. கால்கள் என்னை அறியாமலே தடுமாறின. நின்று விட்டேன். உடல் முழுதும் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது. வலது தோளின் மேல் யாரோ பலமாகக் கையை வைத்து அசையாதபடி பிடித்துக் கொண்டிருப்பதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லை. பேச வாயெடுத்தேன். நாப் பேச மறுத்தது. தோளின் மேல் இருந்த அந்தக் கையைத் தட்டி விடலாமென்று என் கையை உயரத் தூக்க முயற்சித்தேன். ஆனால் கைகள் ஜீவனற்றுத் துவண்டு கிடந்தன. உடலெல்லாம் ஜில்லிட்டு உணர்வு மறைந்து கொண்டே போக வாரம்பித்தது. கேட்கும் சக்தியிருப்பதற்கு அடையாளமாக "என்னைத் தெரியவில்லையா?" என்ற குரல் ஒலித்தது.

என்னால் பதில் கூற முடியவில்லை. கண்களை அகல விரித்து விண்மீன்களின் ஒளியால் பின்புறமிருந்து வந்த குரலை நோக்கிக் கேட்டேன். திகைத்து நின்றேன். அந்த அகால நேரத்திலே தனியே சென்று கொண்டிருக்கும் ஒரு ஆடவனை மறித்துப் புன் சிரிப்புத் தவழ அழகுருவம் கொண்ட ஒரு பெண்ணுருவம் பேசுவதென்றால்......?

என்னால் சிந்திக்க முடியவில்லை. அவளையே பார்த்துக் கொண்டு நின்றேன். அவள் என்னைக் கண்டு சிரித்தாள். "அழ வேண்டிய பெண்கள் சிரிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்களே என்ன ஆச்சரியம் என்று திகைத்து விட்டீர்களா?" என்று அவள் கேட்டபோது நான் சிரிப்பதாகப் பாவனை செய்ய முற்பட்டேன். ஆனால் ஏனோ முடியவில்லை.

அவளை மீண்டும் நன்றாகக் கண்ணுற்றேன். உணர்ச்சி வசப்பட்ட உள்ளத்தின் பிரதிபலிப்பு. அழகுக்கு அழகு செய்தாள் அவள். நான், பிரமித்து விட்டேன்.

அசையாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த என்னைக் கண்டதும் அவள் சிரிக்கவில்லை. முகத்

தைத் தொங்க விட்டுக் கொண்டாள். என் காலடியையே பார்த்தாள் போலும். என்றால் அடி எடுத்து வைத்து அசைய முடியவில்லை.

இருண்ட நேரத்தில் எல்லா உயிர்களும் நிம்மதியை அணைத்து உறங்கும் வேளையில் அந்தப் பெண் எப்படி வந்தாள் என்று எனக்குத் தோன்றவில்லை.

அவள் பேசிக் கொண்டே வந்தாள்.

“உலகத்தில் எல்லோரும் எவ் வகையில் வாழத் தெரிந்தவர்கள். ஆனால் வாழுகிறார்கள். நான் மட்டும் வாழ முடியாமல் தவிக்கிறேன். என்றால் வாழ்க்கையை நடத்த முடியும் என்ற நம்பிக்கை ஒரு காலத்தில் மிகுந்திருந்தது. என்னையே அப்பொழுது நான் பார்த்துக் கொள்வேன். எழிலரசி பூர்ணமாக என்னிடம் அடைக்கலம் புகுந்திருந்தாள். அந்த வகையில் பெருமைப்படும்படி என் உருவ அமைப்பு எனக்கே வியப்பை உண்டுபண்ணியது. எழில் துள்ளிக் குதித்துக் களி நடனம் புரிந்தது. உணர்ச்சி அதற்குப் பின்னிசை பாடியது. உடல் அசைவு அதற்கு ஒத்துத் தாளம் போட்டது. நான் ஆடினேன். பலருக்கு மத்தியில் நான் ஆட விரும்பவில்லை. கலை என்று நோக்கும் கண்களின் விஷமப் பார்வைக்காக ஆடினேன். நான் ஆடினால் ஊரே ஆடுமாம். எல்லார் உள்ளங்களும் ஆடுமாம். கண்ணிமைகளும் ஆடுமாம். பணக்காரப் பிண்டங்களின் பணப் பையும் ஆடுமாம்.

“இப்படி அம்மா சொன்னாள். அதற்கு ஒத்து அந்தச் சோணு சொன்னான். என்னை வைத்து வாழ நினைத்த பிரகிருதிகள் தான் அவர்கள். அம்மா...பாவம். அவள் என்ன செய்வாள்? வாழத் தெரியாமல் தவிக்கும்போது சிறு வயதிலேயே அவளைப் பலவாறு வாழ வைத்திருக்கிறார்கள். என்னையும் அவர்களுக்குக் காணிக்கை செலுத்தத் துணிந்து விட்டாள் என் தாய்.

“நான் வாழ விரும்பினேன். அவல வாழ்வு அல்ல...அன்பு வாழ்வு...காசுக்காக அல்ல...கடமைக்காக......

“விளையாட்டுப் பொருளாக நான் வாழ விரும்பவில்லை. வீணர்களின் விஷமப் பார்வையிலிருந்து என்னை மீட்டுக் கொள்ளத் தயங்கவில்லை.

“அம்மா பதறினாள். சோணு துடித்தான். ஆனால் நானோ ஓடி ஆடி மகிழ்ந்தேன். அத்துடன் மட்டுமா? ஆடினேன். அழகாக ஆடினேன். அவருக்கெதிரே ஆடினேன். பாடினேன். பாங்காகப் பாடினேன். அவருக்கு மட்டும் பாடினேன். பேசினேன். காதல் மொழி பேசினேன். கண்டவர்களிடம் அல்ல. கண்கண்ட தெய்வமாக என்னைக் கை கொடுத்து வாழ வைக்கத் துணிந்து வந்த ஆண்டவனிடம் பேசினேன். அவரும் பேசினார். என் பாடலைக் கேட்டு மகிழ்ந்தார். ஆடலைக் கண்டு அசந்து போனார்.

“வாழத் தெரிந்தவள் என்ற இறுமாப்பிலே என்னையே நான் அவருக்குக் கொடுத்தேன். அவர் கொடுத்தது எவ்வளவோ?

“ஆண்டு இரண்டு போயின. அவரும், நானும் ஒருவரானோம். துன்பத்தை நாங்கள் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. எப்படியோ அம்மா

வும் இதற்கெல்லாம் இடம் கொடுத்துக் கொண்டுதானிருந்தாள்.

"ஒருநாள் அவர் வந்தார்... வாடிய முகத்துடன் வந்தார்.

"ஏன் முக வாட்டம்?" என்றேன்.

"பால் முறிந்து விட்டது" என்றார்.

"எனக்கு அவர் சொல் விளங்கவில்லை.

"புரியாமல் பேசுகிறீர்களே" என்றேன்.

"அவர் என்னருகே வந்தார். என் கன்னங்களை வருடிக் கொண்டே பேசினார்.

"மாதவி... நான் எப்படி அதைச் சொல்வேன்?" என்றார் உருக்கமாக.

"என்ன தயக்கம்... தடையின்றிச் சொல்லுங்கள். பயம் ஏன்?" என்றேன்.

"நீ வாழத் தெரிந்தவள்...... நானே வாழத் தெரியாத நீசன்" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" ஆவேசம் மிகுந்திருந்தது என் குரலில்.

இவைகள்தான் அதற்கு முக்கியம்."

"அப்படியானால்..." நான் திகிலுடன் கேட்டேன்.

"நாம் பிரிக்கப்பட வேண்டியவர்கள் தானும்... மாதவி......அந்தப் பேரிடியை என்னால் தாங்க முடியவில்லை......மாதவி......நீ தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்......"

"என்ன! நீங்களுமா அப்படிச் சொல்கிறீர்கள்?"

"மாதவி......என் தாய்...என் தெய்வம்."

"தெய்வம்...பாழும் தெய்வத்துக்குக் கண்களில்லையா?"

"உண்மைதான்."

"எங்கே... அந்தக் கண்ணில்லாத் தெய்வத்தின் பாதத்தைப் பிடித்து என் வாழ்வுக்கு மன்றாடுகிறேன். என்னை அழைத்துச் செல்லுங்கள்... உங்கள் அன்னையிடம்..." என்று நான் உள்ள உறுதியுடன் அவரிடம் கூறினேன். என் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

"ஆனால் ஏனோ அவர் முகம் வாட்டமுற்ற பாவனையில் இல்லை.

---

**❀ கைவிடப்பட்டாள் கன்னி—கணிகை அல்ல.**

**❀ கணிகை வம்சத்திலே பிறந்துவிட்டாள் என்பதற்காக அவளும் கணிகைதானா?**

**❀ அவள் புறக்கணிக்கப்படும் போது புயலானாள்—அவன் அழிந்தான்.**

---

"நான் சொல்லவில்லை மாதவி—அப்படி அம்மா சொல்கிறாள். என்னைப் பெற்றெடுத்த தெய்வம் சொல்கிறது."

"தெய்வம் நீதி தவறாதே."

"அந்தத் தெய்வம் கண்மூடி உலகத்திலே உழலும் தெய்வம். நீதி தெரியாது... சமூகம், சுற்றம் அவர் பேச்சின் தோரணையும் என் உள்ளத்தைச் சிதற அடித்தது.

"பயனில்லை மாதவி... அன்னை அசைய மாட்டார்கள். உன் கதறல் அவர்கள் காதுகளுக்கு எட்டாது. ஒரே முடிவு செய்து விட்டார்கள். நான் என்ன செய்வேன்

மாதவி...! என் உள்ளத்தை வேறு ஒருத்திக்கு எப்படித் திறந்து காட்டுவேன். மகிழ்ந்து வாழ்ந்த நாள் போய் விட்டது. இருள் சூழ்ந்து விட்டது. விடிவெள்ளி தோன்றாத வாழ்வு என் வாழ்வு..........நான் சாகத்தான் போகிறேன். மாதவி! உன் காதலன்! அன்புப் பிரியன் சாகப்போகிறான். நான் இருந்தென்ன? இறந்தென்ன? மாதவி! வருத்தப்படாதே! என்ன நினைத்தும் பலன் இல்லை. மனிதப் பண்பு இல்லாத சூழ்நிலையில் வாழ்வேது? நான் போகிறேன். எங்கோ போகிறேன். நான் செத்துத்தான் ஆகவேண்டும்."

"எவ்வளவு உருக்கமாகப் பேசினார் தெரியுமா? என் மனம் உருகிவிட்டது. ஓடோடி அவரை உறுதியாகப் பிடித்து அணைத்துக்கொண்டேன். அழுகை மேலிட்டது. அன்பனின் பிடியிலே தியாகச் சிந்தனை மேலோங்கியது.

"நீங்கள் எதற்காகச் சாகவேண்டும்?-இந்தப் பாவியின் வாழ்வை மலர வைத்ததற்காக நீங்கள் மடிய வேண்டுமா? வேண்டாம் அன்பரே வேண்டாம். உங்கள் தாயின் கட்டளையை நிறைவேற்றுங்கள்" என்று நான் கூறியதும்,

"மா...த...வி நீயா பேசுகிறாய்? என் பொற்சித்திரமா பேசுகிறது. என் இன்ப ஓவியமா பேசுகிறது. அப்படிச் சொல்லாதே மாதரசி. உன் உள்ளம் நொந்தால் என் உயிர் பிரியாதா? நீ துடிக்க நான் மகிழ்வதா? மாட்டேன். மாட்டவே மாட்டேன். நான் முடிவுக்கு வந்துவிட்டேன். அதுதான் சாவு. சாவிலேதான் எனக்கு வாழ்வு. அங்கேதான் நிம்மதி," என்ற என் காதலரின் குமுறும் எரிமலைச் சொற்றொடர் என மனதைமேலும் இளகச் செய்தது.

"அப்படிப்பட்ட உத்தம நெஞ்சத் துணைவன் கிடைக்க என்ன பேறு செய்திருக்க வேண்டும். காதலிக்காகச் சாவும் காதலனைக் கண்டயின்பும் உண்மைக் காதலி தன் துயர வாழ்வைக்கண்டு பின் வாங்குவாளா? நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். அவருடைய வாழ்வு தழைப்பதற்காக நான் கோவலனின் மாதவிபோன்று மாசற்ற பெண் திலமாக, தியாகச் சின்னமாக வாழ்வது என்று முடிவுசெய்தேன். அவருக்கு ஆறுதல் கூறினேன். பிடிவாதமாக மறுத்தார். என் கண்ணீரைக் காட்டினேன். கலங்குவதுபோலக் காணப்பட்டார். கொஞ்சம் தயங்கினார். கடைசியில என் தியாக எழுச்சிதான் வென்றது.

"அவர் புனர் வாழ்வு பெற்றார். நான் தியாக வாழ்வு பெற்றேன். வாழ்ந்தேன். திடீரென்று ஒருநாள் என் உள்ளத்திலே அவருடைய ஆனந்த வாழ்வைக் காணவேண்டுமென்ற ஆவல் பிறந்தது. உறுதி தளருமோ என்று பயந்தேன். மறுகணம் உள்ளத் திறன் பெற்றேன். அத்துடன் அவரது வாழ்க்கைத் துணைவியை கட்டாயம் பார்த்துத்தான் ஆகவேண்டுமென்ற ஆவல் பிறந்தது. அவருடைய சொந்த ஊருக்குப் பயணமானேன். முன்பு அவர் என்னிடம் சொல்லியிருந்த விலாசம் நினைவில் வந்தது. அவர் வீட்டின் முன் இறங்கினேன். அவர் வீடு மாடி வீடாக யிருந்தது. நான் உள்ளே சென்றேன். வேலைக்காரன் எதிரே வந்தான்! அவனி



டம் "மாதவி வந்திருப்பதாகச் சொல்" என்றேன்.

"அவன் உதட்டைப் பிதுக்கினான். அத்துடன் "இன்னிக்குத் தேவைக்கி ஒரு பொம்பளை முந்தியே வந்துட்டது. இரண்டு பேருமா மேலே குடிச்சுக் கும்மாளம் போட்டுக்கிட்டு இருக்காங்க. நீங்க நாளைக்கு வாங்க. உங்களை நாளைக்குத்தான் வரச் சொல்லியிருப்பாரு. நீங்க சொன்னநாள் தவறி வந்திட்டீங்க" என்று பல்லைக் காட்டிக் கூறினான்.

"என் நெஞ்சைப் பிழிவதுபோல இருந்தது அவனது பேச்சு.

"என் சிங்காரமா இப்படி நடக்கிறார்?" என்றேன் வியப்புடன் வேதனைக்குரல் கலக்க.

"ஆமாம்வா, ஆமாம். இந்த பொளப்பே வெறும் மானங்கெட்ட பொளப்பாப் போச்சு. நீங்க கவலைப்படாதீங்கம்மா. உங்க சிங்காரம் இன்னிக்கு வேறொருத்திக்கிச் சிங்காரிச்சிக்கிட்டு இருக்காரு. உங்களுக்கு நாளைக்கு."

"அந்த வேலைக்காரன்கூட கொஞ்சம் தடுமாற்றமாகக் காணப்பட்டான். அவனும், அவனது : எஜமானன் குடித்து மீதம் வைத்திருக்கும் சரக்கைக் கொஞ்சம் பதம் பார்த்திருக்கிறான் போலிருக்கிறது. அவன் சொல்வதை நான் நம்பத் தயாராகயில்லை. ஓடினேன், நேராக மாடிக்குச் சென்றேன். பார்த்தேன். இந்தப் பாவி கண்களால் பசுத்தோல்போர்த்த புலி

## வெளிவந்துவிட்டது!

மாணவர்களின் ஆங்கில
தமிழ் பொக்கிஷம்!
சிறந்ததொருபடைப்பு!

### ஸ்ரீமகள் பாக்கெட்
### இங்கிலீஷ்- தமிழ் அகராதி

**English-English**
**Tamil Dictionary**

20000 க்கு மேற்பட்ட ஆங்கில வார்த்தைகளுக்கு விளக்கம் நிறைந்த ஆங்கிலப் பதங்களும்—அதற்கேற்ற தமிழ்ப் பொருளும் இதில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இது உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் தொகுக்கப் பெற்ற ஆங்கில அகராதியாகும்.

விலை ரூ. 2—8—0

**ஸ்ரீமகள்**
**கம்பெனி**
த. பெ. எண்—275
சென்னை—1


யின் உண்மை சொருபத்தைப் பார்த்தேன்.

"என் இதயம் நின்றுவிடும் போலிருந்தது. அவ்வளவும் நடிப்பா? இருக்கவே இருக்காது. அப்படி இருக்கவே மாட்டார். என்று திட்டமாக நம்பினேன், அந்த நிமிடம்!

மீண்டும் வேலைக்காரனிடம் பேச்சுக் கொடுத்தேன். "அவருடைய அம்மா எங்கே? உனக்குத் தெரியுமா?"

"அவன் சிரித்தான். "அம்மாவா? என் எஜமானருடைய அம்மா செத்துப்போயி எத்தனையோ வருஷமாச்சே" என்றான் அவன்.

"அவருடைய மனைவி?"

"என்ன சொல்றீங்க...எனக்குப் புரியலையே!"

"அவர் புதிதாகக் கல்யாணம் செய்துகொண்டாரே! அந்த உத்தமி எங்கே?"

"கண்ணாலமாவது! மண்ணாவதும்மா! யார் சொன்னா உங்களுக்கு? கண்ணாலமானா ஏன் இப்படிக்கேடுகெட்டு அலையுறாறு. கால் கட்டுக் கட்டினா இந்த நிலைக்கு வந்திருப்பாராம்மா? அவருதான் நித்திய கல்யாணியாச்சே" "போதும் நிறுத்தப்பா."

"என் தலையிலே இடி விழுந்தது. பேரிடி... ஊர் திரும்பினேன். பாசாங்கு, நடிப்பு நடித்து என்னை ஆட்கொண்ட அந்தக் கயவன்தான் இவ்வுலகில் வாழத் தெரிந்தவன். நான் வாழத்தெரியாத பேதை.

"ஆமாம், அந்தப் பேதையின் இதயக் குமுறலை அவன் உணர வேண்டும். என்னை மோசம்செய்த அவனைப் பழிவாங்க வேண்டும் என்று சபதம் செய்தேன். ஊர் வந்தேன்.

"அன்பான பிரிய நாதருக்கு என்று ஒரு கடிதம் எழுதினேன்.

காதலோவியம் அவனை அலறி அடித்துக்கொண்டு ஓடிவரச் செய்தது. வந்தவன் நன்றாக நடித்தான். பழையபடி நான் ஆடினேன். பேசினேன். உணவிலே விஷம் வைத்தேன்.

"என்னைப்போல எத்தனை உயிர்களைத் துடிக்க வைத்துப் பாடுபடுத்தியிருக்கிறானே பாவி சாகட்டும் என்று மகிழ்ந்தேன்.

"விஷம் தலைக்கேறியது. மிரள மிரள விழித்தேன். நான் உண்மையை அப்பொழுதுதான் அவனிடம் கூறினேன்" என்னைக்கொல்ல அந்த நிலையிலும் தடுமாற்றத்துடன் ஓடிவந்தான். நகர்ந்தேன். மாடிப்படிகளில் விழுந்து உருண்டான்.

"இதோ பாருங்கள்; அங்கே கிடக்கிறானே அவன்தான் என் மாஜி காதலன். காதகன். என்னையே பார்க்கிறீர்களே! உங்கள் காலடியில் பாருங்கள்." என்றாள் அந்த மாதவி என்ற பெண்ணுருவம்.

நான் குனிந்து பார்த்தேன். முன் என் காலில் தட்டுப்பட்டது அந்தப் பிணம்தானா? இருளில் சரியாக அவன் யார் என்று தெரிந்துகொள்ளமுடியவில்லை. நிமிர்ந்து அவனைப் பார்த்தேன். பேச வாயெடுத்தேன். நா அசைந்தது. குரல் எழுந்தது. உணர்ச்சி மீண்டது.

."நீ எங்கே அந்தப் பிணத்தைத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறாய்?,' என்று கேட்டேன்.

"நான் தூக்கிவரவில்லை. உயிர் போவதற்குமுன் படிகளில் உருண்டவன் எழுந்து ஓடிவந்தான். துரத்தி வந்தேன். வரவேண்டிய இடத்துக்கே வந்துவிட்டான். அதற்குள் செத்தும் விட்டான்"


நமக்குமுன் உயர்ந்த தத்துவ ஞானிகளும், அரசியல் அறிஞர்களும் வாழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாக எங்கெங்கோ நாடுகளிலோ பிறந்திருந்தாலும் அவர்கள் உலகப் பொதுச் சொத்து. அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய உரைகளைத் தமிழிலே தருகிறோம் தமிழ் மக்களின் பார்வைக்கு. கீழ்க் காணும் நாடுகளில் வாழ்ந்த அறிஞர்களின் பொன்மொழிகள் பல இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கைக்கு அடக்கமாகவும், கணிசமான விலையிலும் கிடைக்கும்.

அமெரிக்கநாட்டுப் பொன்மொழிகள்

தமிழ் நாட்டுப் பொன்மொழிகள்

ஆங்கில நாட்டுப் பொன்மொழிகள்

பிரஞ்சு நாட்டுப் பொன்மொழிகள்

டால்ஸ்டாய் பொன் மொழிகள்

கார்க்கியின் கருத்துரைகள்

ஒவ்வொன்றும் விலை 8 அணா

அழகிய மூவர்ண அட்டைப் பைண்ட்

ஸ்ரீமகள் கம்பெனி
த. பெ. எண். 275
சென்னை-1

## சரியான கணக்கு

ஜோஷ் மலீஹ் ஆபாதி—பண்டித பிராக் கோரக்பூரி—இஸ்ராருல் ஹக் மஜாஸ்—மூவரும் ஒரு நாள் மதுபானம் செய்து கொண்டிருக்கையில், தனது மூன்றுவது 'பேக்'கை குடித்து விட்டு ஜோஷ், தனக்கே உரித்தான பட்டாணியக் கர்ஜிக்கும் குரலிலே, 'இன்னும் எனது யௌவனம் மாறவில்லை. எனது வயது இருபத்தைந்து, முப்பது வருஷங்களுக்குள். என்ன சொல்கிறீர்கள், பிராக்!' என்றார்.

'இதில் சந்தேகமேன்?' அலகாபாத் கலாசாலை பேராசிரியர் பிராக் பலமாக் ஆமோதித்தார். 'எனது வெளித் தோற்றத்தைக் கவனிக்கவில்லை என்றால் நானும் வாலிபன்!'

'ஆம்!' ஜோஷின் பிரகாசமான கண்கள் பிராக்கின் முதுமைபடர்ந்த முகத்தினை ஆராய்ந்தன.

ஒன்றுமறியாதவர் போல இளைஞர் மஜாஸ், இருவரையும் நோக்கிப் பகர்ந்தார். 'இதே கணக்குப்படி நான் இன்னும் பிறக்கவேயில்லை'

—நரேஷ் குமார் ஷாத்

என்று சொல்லிச் சிரித்தாள். எனக்குத் திகில் ஏற்பட்டது. சுற்றிலும் பார்த்தேன். இருளிலேயே கண் பழகியதால் சுற்றிலும் நன்றாகத் தெரிந்தது. அந்த இடம் சுடுகாடு. மயான பூமி. பயங்கரமான இடம்.

அவள் சிரித்துக்கொண்டே சொன்னாள். "நான் போய்வருகிறேன்."

"எங்கே?" என்று கேட்டேன் பாதித் தயக்கத்துடன்.

"அதோ அவன் போன இடத்துக்கு..."

"என்ன சொல்கிறாய்?"

"சாகப்போகிறேன் என்று சொல்கிறேன்."

"வேண்டாம் மாதவி. நான் சொல்வதைக் கேள். உயிரை விட்டுவிடாதே. வேண்டாம் மாதவி! மா...த...வி"

* * *

கண்கள் பளிச்சென்று விழித்தன. கால்கள் துவண்டன. கைகள் துடித்தன. என் உடல் பொத்தென்று கட்டிலைவிட்டுக் கீழே விழுந்தது. விழுத்துப் பார்த்தேன். சுற்றிலும் பார்த்தேன். பொழுது விடிந்து கொண்டிருந்தது.

எழுந்து படுக்கையில் உட்கார்ந்தேன். வாசலில் என் தாயிடம் பால்காரன் பேசும் குரல் கேட்டது. கவனித்துக் கேட்டேன்.

"விபரம்தெரியாத பொண்ணு, தாய்க்காரி தொழிலை நடத்தச் சொல்லி கட்டாயப் படுத்தினான்னு தற்கொலை பண்ணிக்குமா...? அதுவும் சுடுகாட்டுக்குப்போயா......! அதைச்சொல்லிக் குத்தமில்லேம்மா... அந்தக் குலத்திலே பிறந்த குத்தம்..."

பால்காரன் இப்ப சென்றுவிட்டான். விடியும் வேளையில் நான் கண்ட கனவை நினைத்துப் பார்த்தேன். பால்காரனின் பேச்சு என் சிந்தனையில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

ஈனத்தொழிலை வெறுத்துத்தன் வாழ்வுக்கு முடிவு தேடிக்கொண்டாள். பெண் குலத்துக்கே பெருமை தேடித்தந்த அவள் வாழ்கிறாள், எல்லோர் இதயத்திலும் வாழ்கிறாள். செத்தபின்னும் வாழ்கிறாள்.

"பயங்கரச் சூழ்நிலையின் மத்தியில் அவளால் வாழ முடியாவிட்டாலும் உண்மையிலேயே செத்தபின்னும் வாழத் தெரிந்தவள், அவள்தான்"

"என் என் கனவுக்கன்னி மாதவியும் கூடத்தான் வாழ்கிறாள்."





7 AUG 1956

100-க்கு 80 பேர் எழுத்தறிவில்லாதிருக்கையில் ஜனநாயகம் வளர்வதெப்படி?

—ஒரிஸா கவர்னர்.

**அந்த 80 பேர் தேர்ந்தெடுத்த அரசியலார்தானே ஆட்சி புரிகிறார்கள்—பிறகு எப்படி......?**

*　　　*

பிரச்சனைகளைத் தீர்ப்பதில் பத்திரிகைகளையும் கலந்து கொள்வதவசியம்.

—உள்நாட்டு மந்திரி பந்த்.

**கலந்து கொள்ளாவிட்டாலும் கவலையில்லை கழுத்தை நெறிக்காமல் இருந்தால் போதும் என்கிறார் ஜாமீன் கட்டிக் கட்டி அலுத்துப் போன அனுபவ ஆசிரியர்.**

*　　　*

பதவி ஆசையினால் காங்கிரஸ்காரர்கள் அறிவை இழந்து விடக்கூடாது.

—லால் பகதூர் சாஸ்திரி.

**இது காலங் கடந்த உபதேசம் என்று கருதுகிறாராம் அரசியலலை ஆராய்ச்சியாளர்.**

*　　　*

பெண்களைத் தமிழர்கள் மதிப்பதில்லை.

—மத்திய மந்திரி தத்தார்.

**மதிக்க மாட்டார்கள், ஆனால் பூஜிப்பார்கள் என்பது மந்திரியாருக்குத் தெரியாது பாவம்!**

*　　　*

தாண்டன்ஜி போன்றவர்கள் வடக்கே இருந்துகொண்டு இந்தி ஏகாதிபத்யத்தின் சார்பில் கூச்சல் போடப் போட இங்கே தமிழ் மொழியின் மீது பற்றும் அதைக் காப்பாற்றுவதற்காக உத்வேகமும் அதிகமாகிறது.

—சங்கப் பலகை.

**கடந்த கால இந்திப் போராட்டங்களின் போது சங்கப் பலகை 'அண்டர் ரிப்பேரில்' கிடந்ததோ?**

*　　　*

நூறு ஏக்கராவது உயர்ந்த பட்சம் வைத்துக் கொள்ள நில உரிமை வேண்டும்.

—திருச்சி நிலச்சுவான்தார்கள்.

**கேட்பதிலுமா தரித்திரம். ஒரு ஆயிரமாயிரமாகக் கேட்டால் என்ன?**

*　　　*

'ஆந்திரர்—தமிழர் எல்லைத் தகராறு பிரச்சனையில் விட்டுக்

கொடுக்கும் மனப்பான்மை வேண் டும்.'

—ஆந்திர முதல்வர் கோபால் ரெட்டி.

'வாங்கிக் கெடுக்கும் மனப்பான்மை வந்து விடக்கூடாதே ஆந்திரருக்கு' என்று ம. பொ. சி. பதட்டமடையலாம்.

*    *

மந்திரிகளுக்கு வாலிபம் திரும்பு கிறது. அதனால்தான் பெண்களின் அழகைப் பற்றிப் பேசுகிறார்கள்,

—செய்தி.

தவறு. வாலிபம் போகிறது. வயோதிகத் தில்தான் பிதற்றல் வரும்.

*    *

'எங்கள் கணவனை (காங்கிரசை) கண்ணடித்து மயக்கி விட்டாள் திராவிடக் கழகத் தாசி.'

—தமிழரசுக் கழகம்.

உன்னைத்தான் உன் கணவன் 'டைவர்ஸ்' செய்து விட்டானே. பிறகு ஏன் இந்தக் கவலை?

*    *

'சாப்பிடுவதுதான் உங்கள் வேலையா?' என்று கடலூரில் காங்கிரஸ்காரர்களைக் கேட்டார் காமராஜர், கோபமாக.

—செய்தி.

ஆம்! ஏப்பம் விடுவதும் எங்களுடைய மற்றொரு வேலைதான், என்று நல்லவேளை பதில் சொல்லாமல் விட்டார்களே.


விற்பனையாகிறது!

# பாரதியார் கவிதைகள்

மகாகவி சுப்பிரமணிய பாரதியின்

தேசீய கீதங்கள், தெய்வப் பாடல்கள், பல்வகைப் பாடல்கள், முப்பெரும் பாடல்கள் ஆகிய நாள்கு பாகங்களும் அடங்கியது.

648 பக்கங்கள். அழகிய முகப்பு

ஸ்ரீமகளின் சிறந்த பதிப்பு!

**விலை ரூபாய் ஆறு**

தபாற் செலவு தனி

வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு.

**ஸ்ரீ மகள் கம்பெனி**

சென்னை-1 — கோயமுத்தூர் — மதுரை.

# கலைமன்றம்
## பார்லிமெண்ட்

பேராசிரியர்
சி. இலக்குவனர்
எம். ஏ., எம். ஓ. எல்.
மாசனக் கல்லூரி,
ஈரோடு.
25-5-55

பேரன்புடையீர்,

வணக்கம். கலைமன்றத்திற்கு ஏதேனும் எழுதிவர முயலுகின்றேன். அடுத்த இதழிலிருந்து என்னுடையதும் தொடர்பாகக் கிடைக்கும்.

அன்புள்ள,
சி. இலக்குவன்.

[இனி உயர்தரமான இலக்கிய விருந்திற்குக் குறைவேதுமில்லை, நமது பேராசிரியர் தொடர்பாக எழுதும்போது—ஆ—ர்.]

*  *

நாரண. துரைக்கண்ணன்,
ஜீவோதயம்,
சென்னை—24.
25-5-55

அன்புமிக்க சகோதரருக்கு,

நலம். கலைமன்றத்தின் செயலும்—சேவையும் அறிந்து பெருமகிழ்ச்சி கொண்டேன். கலை மன்றத்திற்கு வாரந்தோறும் கதை, கட்டுரைகள் எழுதிவருவேன், நீங்களும், அன்பர் மதுரமும் விரும்புவதுபோல்.

அன்புள்ள,
துரை.

[வாசகர்கள் நல்வாய்ப்புப் பெற்றுர்கள். நாமும் பெரும் பேறு பெற்றோம்—ஆ—ர்.]

*  *

48, கடைவீதி,
பொள்ளாச்சி,
28-5-55.

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். 28-5-55-ம் தேதி கலைமன்ற இதழில் வெளியாகியிருக்கும் 'வேண்டாம் அத்தான்' என்ற கடிதம் 'திருமதி மீனு' எழுதியது என்பது சரியல்ல. ஆண், பெண்ணுடையில் தோன்றியிருக்கிறுர்.

எம். விஜயசாரதி

*  *

பவழநிலையம்
பொள்ளாச்சி,
28-5-55

அன்புடையீர்,

விவாத மேடையில் பெண்கள் மட்டுந்தான் கலந்து கொள்ளலாம் என்ற கட்டுப்பாடு இருப்பின் என் பெயரையும் 'பொள்ளாச்சித் தங்கம்' என்ற புனைப் பெயரில் எனது மறுப்புக் கடிதத்தைப் பிர சுரிக்கவும்.

பி. என். தங்கராசன்'

[வருந்துகிறோம். இவ் இரு மடல்களையும் கண்டு. 28-ம் தேதி இதழில் பிரசுரமான 'வேண்டாம் அத்தான்' என்ற கடிதம் எழுதி யவர் பெண்ணல்ல, ஆணும். இவ் வாறு இலக்கிய உலகில் பெண் போர்வையைப் போர்த்திக் கொண்டு நடமாடுவது சர்வ சாதா ரணமாகிவிட்டது. இந்த சர்வ சாதாரணமான வேலையை 'பொள் ளாச்சி மீனு' நம்மிடமும் காட்டி விட்டாள். இம்மாதிரி 'இலக்கியத் திருட்டு விபச்சாரம்' இனியேனும் நடவாமல் தடுப்போம். இவ்வார இதழில் தங்கம் என்ற பெண் போர்வையிலே திரு. பி. என். தங்கராசன் எழுதிய கடிதத்தைப் பிரசுரித்து விட்டோம். இத்தோடு 'வேண்டாம் அத்தான்' விவகாரம் முடிவடை:கிறது. அடுத்து வேறொரு 'விவாதக் கட்டுரை' வெளிவரும். விவாத அரங்கில் ஆண்—பெண் யாவரும் கலந்து கொள்ளலாம்—ஆடை மாற்றாமல் —ஆ—ர்.]

பிறையாறு
26-5-55

அன்புடைய ஐயா அவர்கட்கு,

சில வாரமாக தி. மு. கழகச் செய்திகள் ஏன் பிரசுரம் செய்வது கிடையாது? கலைமன்றம் தி. மு. கழகத்திலிருந்து மாறிவிட்டது என்று பல தோழர்கள் சொல்லு கிறார்கள். விபரம் அறிய ஆவல் படுகிறார்கள்.

[நமது தோழர்கள், செய்திகள் தானே தருவார்கள். வதந்திகளை யுமா பரப்புகிறார்கள்? ஆச்சரியமே. மாறுதல் என்பது அமைப்பிலே தான். வளரும் கொள்கையிலே அல்ல. நேரடியாக நமக்குக் கிடைக் கும் செய்திகள் இடம் பெற்றே தீரும். இதர ஐயப்பாடுகளுக்கு கலை மன்றமே தக்கதோர் சான்று-ஆ-ர்]

சின்னியம்பாளையம்
24-5-55.

கலைமன்ற ஆசிரியருக்கு,

வணக்கம். 21-5-55-ம் இதழ் மிகச் சிறந்த முறையில் வெளி வந்தது பற்றி மெத்த மகிழ்ச்சி.

வாசகர்கள் கேட்ட கேள்வி களுக்கு வாசகர்களே பதில் எழுது மாறு ஒரு பகுதியை ஆரம்பியுங் கள். இதுவே என் ஆசை. பூர்த்தி செய்வது, உங்கள் பொறுப்பு. வணக்கம்.

மு. நல்லதம்பி,

[வாசகர்களே கேள்விகள் கேட்பதற்குப் பதிலாகக் கலைமன் றமே பத்து கேள்விகளைக் கேட் கும். அக் கேள்விகளுக்கு வாசகர் கள் பதில் தருவார்கள். 'கேட் டோம்—கொடுத்தார்கள்' என்ற தலைப்பில் அப் பகுதி கூடிய விரை வில் ஆரம்பமாகும்—ஆ—ர்.]




அழகிய பௌர்ணமி நிலா ஆகாயத்தில் பவனி வந்து கொண்டிருந்தது; வசந்த ருதுவின் பொன்னான இரவுகளில் ஒன்று; சாலையிலுள்ள காட்டு வாகை மரங்களின் பூக்களின் வாசனை கம்மென்று வீசிப் பரவிக் கொண்டிருந்தது.

எனக்குத் திருமணமாகி ஒரு மாதந்தானாகிறது. என் இளம் மனைவியுடன் இன்பப் பேச்சில் திறந்த மாடியில் உலகை மறந்திருந்தேன். அவளது வெற்றிலைக் காவி படிந்த இதழ்களின் மேல் நிலவொளி பட்டுப் பொன்னோ பவளமோ எனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தாபமிகுதியால் அவளென்னை நெருங்கி அணைத்துக் கொண்டாள். நான் அவளை நோக்கிக் குனிந்து.......

டக்! டக்! கென்று யாரோ கீழே பலமாகக்கதவைத் தட்டும் ஒலிஎன்னைத்தடுத்து நிறுத்தியது. “அடா! சனியன்களே ஒரு நிமிடங்கூட எனக்கு ஓய்வு தரமாட்டீர்களா?” என்று அங்கலாய்க்கலானேன். ஏன்தான் இந்த டாக்டர் தொழிலில் இறங்கினேனோ என் புத்தியை என்ன செய்வது? ஒருவன் உலகில் வேறெந்தத் தொழிலையும் செய்து நிம்மதியாக ஜீவனம் நடத்தலாம். டாக்டர் தொழில் இருக்கிறதே அதில் இறங்கி விட்டவன் ஒன்றில் தொழிலுக்குத் தலை முழுக்குப் போட்டுவிட வேண்டும். அல்லது கல்யாணம் செய்யாத பிரமச்சரியக் கட்டையாக இருந்துவிட வேண்டும். இதுதான் என் சாதாரண அபிப்பிராயம்.

எப்போதுதான் ஆகட்டும் இரவு மணி இரண்டாகத்தானிருக்கட்டும் யாராவது ஒரு நோயாளி வந்து கதவைத் தட்டிக் கொண்டிருப்பான். டாக்டரும் ஒரு மனிதன் தானே அவனுக்கும் பெண் சாதி பிள்ளைகள் இருக்குமல்லவா என்ற எண்ணம் உயிருடன் போராடிக் கொண்டிருக்கும் எந்த ஆத்மாவிடம் ஏன் எழப் போகிறது?

நான் இறங்கி வந்து வெளிக் கதவைத் திறந்தேன். ஒரு வாலிபன் மட்டும் நின்று கொண்டிருந்தான். அவன் நோயாளியல்ல; எவ்வித வேதனைக் குரலும் அவனிடமிருந்து வெளிவரவில்லை. அவனை நான் உடனே அடையாளம் கண்டு கொண்டேன்.

“மன்னிக்க வேண்டும். என் வரவு உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்,” என்று ஆரம்பித்தான் அவ் வாலிபன்.

“இல்லை; வெகு நேரத்திற்கு முன்பே எதிர்பார்த்தேன். இப்

## அன்று வாழ்ந்தோம்.

உலகில் வேறெந்த மொழியிலும் இல்லாத வகையில், வாழ்க்கைக்கே தமிழ் மொழியில் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது—அது தான் தொல்காப்பியம்; இன்றைக்கு சுமார் 2 அல்லது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், தொல்காப்பியம் எழுதப்பட்டதாக ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்; அந்தக் காலத்திலேயே வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்திருப்பதென்றால்—அதற்கு முன் எத்தகையதோர் பண்பட்ட வாழ்கையை மக்கள் பெற்றிருந்தால்—அது சாத்தியமாகும் என்பது நமக்கு தெரிய வருகிறது; தொல்காப்பியமே, அதற்கு முன்பிருந்த பல நூல்களைப் படிததறிந்து எழுதப்பட்டதாக அதிலேயே காணக் கிடக்கிறது.

இன்று நாம் காணும் பொருள்களுக்கெல்லாம் பெயர் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இப்படி எத்தனையோலட்சோபலட்சம் சொற்கள் உருவான பிறகுதான் அவை பரவி வளர்ந்து, மொழிக்கு இலக்கணம் வகுக்கப் பட்டிருக்க வேண்டும். இதற்கே எத்தனையோ நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்குமெனக் கூறப்படுகிறது; அந்த நிலையில், மொழிக்கு மட்டுமின்றி அந்த மொழி பேசும் மக்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுக்கப் பட்டிருந்தது என்றால், அதன் சிறப்பு எத்தகையது? அதன் 'தொன்மை' எத்தனை பெருமைக்குரியது? அன்று வாழ்ந்தோம் என்பதற்குரிய சான்று இவைதான்.

—நாவலர் இரா. நெடுஞ்செழியன்

போதுதான் வந்திருக்கிறாய்!" என்றேன் நான் நிதானமாக.

"நிஜமாகவா? பகலில் வருவதற்கே நான் பயந்து போயிருந்தேன்.

"அதனால்தான் இந்த நேரத்திலே......"

'பயப்படுவதற்கு ஒன்றுமில்லையே தம்பி! உட்கார். நிதானமாகப் பேசலாம்!' என்று சொல்லி நாற்காலியை இழுத்துப் போட்டேன்.

'இந்தச் சங்கதியை யாரிடமும் நீங்கள் வெளியிட்டு விடக்கூடாது. என் பிராணனே இதில்தான் அடங்கியிருக்கிறது!' என்று சொல்லி பல பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான் அவன்.

'பணத்திற்கென்ன இப்போ அவசியம்? இந்த ரகசியந்தானே? இதை நான காப்பாற்றுகிறேன். டாக்டர்களிடம் இப்படி விஷயங்கள் வருவது மிகவும் சகஜம். அவற்றைக் காப்பதுதான் அவர்களின் தர்மமும் தொழில் தத்துவமுமாகும்!' என்று சொல்லி ரூபாயைப் பெற்றுக்கொள்ள மறுத்தேன்.

'சிகிச்சைக்கென்றாகிலும் வைத்துக் கொள்ளுங்களேன்!'

'இல்லை, மிஸ்டர்! இந்தத் தொகையுடன் திருப்தியடைகிற சாதாரணப் பேர்வழியல்ல நான். நோய் குணமாகட்டும் இரண்டு மடங்காகப் பில் போடுகிறேன்,' என்று நான் ஹாஸ்யமாகச் சொன்னபோது அவனும் என்னுடன் சேர்ந்து சிரிக்க முயன்றான். உயிரற்ற அந்தச் சிரிப்பினால் ஆழமான அவனது துன்பமே வெளியாயிற்று.

பரிதாபத்திற்குரிய அவ் வாலிபன் எனக்கு எதிரே அமர்ந்திருந்

தான். அவன் மேல் எனக்கு அனுதாபமுண்டாயிற்று. அவன் ஒருவன் மட்டுந்தானு? அவனைப் போன்ற ஆயிரக்கணக்கான மனிதர்கள் இத்தகைய துன்பத்தை மறைவாக அனுபவித்து வருகிறார்களே என்று என் மனம் தர்க்கம் செய்தது. பகலில் நடந்த சம்பவம் ஆரம்ப முதல் என் சிந்தனையில் ஓடியது.

மாலையில் வழக்கம் போல் எனது பிரத்தியேக மருத்துவ நிலையத்தில் சிகிச்சை செய்து கொண்டிருந்தேன். வக்கீல் சந்திரசேகரனின் வேலையாள் வந்து அவரது வீட்டில் யாரோ சுகவீனமாயிருப்பதாயும், வந்து கவனிக்க வேண்டுமென்றும் அழைத்தான். மறுகணமே என் இதர நோயாளிகளையெல்லாம் மறந்து விட்டுப் புறப்படத் தயாரானேன். சந்திரசேகரன் மிகவும் பிரபல்யமானவர், செல்வந்தர். அவர் வீட்டில் சந்தர்ப்பம் கிடைப்பதன் மூலம் கையில் பணம் புரளும் என்பது மட்டுமல்ல அதனல் என் தொழிலும் சாமர்த்தியமும் பிரபல்யமாகும் என்பதும் கவனிக்கத் தக்கது.

காரை விட்டிறங்கியதும், வக்கீல் வாசலுக்கு வந்து வரவேற்றார். முன் கூடத்தில் அவரது நண்பர்கள் வருத்தத்துடன் அமர்ந்திருந்தனர். வாசல் நிலையில் வேப்பிலைக் கொத்துக்கள் தொங்க விடப்பட்டிருந்தன. உள்ளே ஒரு அறையில் பெண்களின் பேச்சுக் குரல் கேட்டது. அங்கே நான் அழைத்துச் செல்லப்பட்டேன்.

"பாருங்கள் டாக்டர்! அம்மன் முத்துப் போட்டிருக்கிறது; எந்தத் தெய்வத்திற்கு நாங்கள் தவறு செய்தோமோ!" என்று சொல்லி

## இடையில் வீழ்ந்தோம்

"சங்க காலத்துப் புலவர்களால் வர்ணிக்கப்படுகிற எந்த மன்னனும், தன்னாற்றலையும், தன்னறிவையும் நம்பித்தான் ஆட்சி செலுத்தியதாகவும், போர் தொடுத்து வெற்றி கண்டதாகவும் கூறப்படுகிறதே தவிர, எந்த மன்னனும், 'வாயு' வாஸ்திரத்தையும், 'அக்கினி'யாஸ்திரத்தையும் நம்பியதாகக் கூறப்படவில்லை;

"ஒரு காலத்தில் பண்புடன்—நெறி முறையுடன் — தன்னாற்றல், தன்னறிவுடன் வாழ்ந்தனர்.

"ஒரு காலத்தில், மலர்ச்சியுற்று மணம் பரப்பிக் கொண்டிருந்த தமிழகம்—இடைக்காலத்தில் வீழ்த்தப்பட்டது; இன்று, மீண்டும் தலை தூக்க வேண்டும் — முன்பு பெற்றிருந்த மலர்ச்சியை திரும்பப் பெற வேண்டும்—மறுமலர்ச்சி யடைய வேண்டும்",—என்று விரும்புகிறோம்.

"ஆஸ்திரேலியாவுக்கும், அமெரிக்காவுக்கும் முதல் மலர்ச்சியே இப்போதுதான்; ஆனல், கிரேக்கமும், எகிப்தும் ஒரு காலத்தில் மலர்ந்திருந்தவை; இடையில், மதத்திற்கு அடிமைப்பட்டு, மணம் குன்றி, மங்கி மடிந்தவை; இன்றைக்கு, முன்னூறு அல்லது, நானூறு ஆண்டுகளுக்கு முன்பே மறுமலர்ச்சி — மீண்டும் மலர்ச்சி பெறத் தொடங்கியவை; ஆனல், தமிழகத்திற்கு, மறுமலர்ச்சியே இந்த இருபதாம் நூற்றாண்டில்தான் துவங்கி யிருக்கிறது—இடைக்காலத்தில் விழ்ந்தோம்.

—நாவலர் இரா. நெடுஞ்செழியன்

வகையில் இதைச் செய்தால் என்ன? கொலைகாரன், என்றைக்காவது ஒரு நாள் சர்வாதிகாரியின் மனைவி ஏதோ கள்ளக் காதல் புரிந்தாளாம். அதற்காக அவளைக் கொல்லும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. நான் கொன்றேன் என்று சொல்லக் கூடுமல்லவா? ஏன் அந்த வீண் தொல்லை. காதும் காதும் வைத்த மாதிரி வேறு வகையில் நடத்திவிட்டால்?

ஆன்:- ஆம்! நல்ல யோசனை தான். நஞ்சு மிக நல்லதுதான். அது என்னிடம் இல்லையே!

தீ:- என்னிடம் இருக்கிறது.

ஆன்:- எங்கே?

தீ:- என் வீட்டில்.

ஆன்:- என்ன நஞ்சு?

தீ:- கொடிய நஞ்சு. நான்தான் உங்களிடத்தில் முன்பு கூறினேனே. என் நண்பர் எனக்காக வழங்கிய பரிசுப் பெட்டியில் அனுப்பி வைத்தது வீட்டில் இருக்கிறது. ஒரே ஒரு விநாடி. தீர்ந்துவிடும்.

ஆன்:- ஆம். அதுதான் சரி. நல்ல யோசனை. அது நம்மோடே மறைந்து விடும். வீண் பேச்சுக்கு இடம் இருக்காது. இதோ பார் தீஸ்ப் உன்னைத் தவிர மற்றவர்கள் மேல் எனக்கு நம்பிக்கையில்லை. என் பெயர்-புகழ்-நிலை-மானம் யாவும் காப்பாற்றப்பட வேண்டுமானல்-நீ சொன்னதுதான் நல்ல யோசனை. எப்படி இவள் இறந்தாள் என்பதே யாருக்கும் தெரியாத புதிராக இருக்கும். இந்தச் சாவுச் சடங்கு யாருக்கு என்பதே மக்களுக்குத் தெரியாது. கோட்டையிலே யாரும் அறியாமல் அடக்கம் செய்துவிடலாம். வெளிக்கு ஒன்றும் தெரியாது. ஆம். அதுதான் சரியான யோசனை.


நமக்ன் உயர்ந்த தத்துவ ஞானிகளும், அரசியல் அறிஞர்களும் வாழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாக எங்கெந்த நாடுகளிலோ பிறந்திருந்தாலும் அவர்கள் உலகப் பொதுச் சொத்து. அவர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய உரைகளைத் தமிழிலே தருகிறோம் தமிழ் மக்களின் பார்வைக்கு. கீழ்க் காணும் நாடுகளில் வாழ்ந்த அறிஞர்களின் பொன்மொழிகள் பல இதில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. கைக்கு அடக்கமாகவும், கணிசமான விலையிலும் கிடைக்கும்.

அமெரிக்கநாட்டுப் பொன்மொழிகள்

தமிழ் நாட்டுப் பொன்மொழிகள்

ஆங்கில நாட்டுப் பொன்மொழிகள்

பிரஞ்சு நாட்டுப் பொன்மொழிகள்

டால்ஸ்டாய் பொன் மொழிகள்

கார்க்கியின் கருத்துரைகள்

ஒவ்வொன்றும் விலை 8 அணு

அழகிய மூவர்ண அட்டைப் பைண்ட்

ஸ்ரீமகள் கம்பெனி

த. பெ. எண். 275

சென்னை-1

வியப்பைத் தாங்கச் சக்தியற்று என் உடல் நடுங்கியது.

அது அம்மை நோயல்ல; மேக நோய்! ஆங்கிலத்தில் 'சிபிலிஸ்' என்றழைக்கப்படும் கிரந்திநோய். அம்மை நோயைப் போல தேகத்தில் சிறு சிறு கொப்புளங்களைத் தோற்றுவிப்பதுதான் அந் நோயினுடைய வெளி அடையாளம். ஆனால் இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை டாக்டர்களாகிய நாங்கள் எளிதில் கண்டுகொள்ள முடியும். மற்றவர்கள் சாதாரணமாக அம்மை நோயென்றே இரண்டையும் குழப்பிக் கொள்வார்கள்.

அப் பெண்ணின் முகத்தை நான் கூர்ந்து நோக்கினேன். பயமோ கலக்கமோ இன்றி அமைதியாக விளங்கியது அம் முகம்.



அதைப் பார்த்தால் அவளிடம் எவ்வித துர்நடத்தையும் இருக்காது என்றுதான் யாரும் தீர்மானிக்க முடியும்.

இந்த நோயும் வெறுமனே தானாக வரக் கூடியதல்ல; நோயாளியான எந்த ஆடவனுடனாவது நிச்சயம் அவளுக்குத் தொடர்பிருந்திருக்க வேண்டும். அப்படியானால்.........

தோற்றத்தைக் கண்டு பெண்ணின் நடத்தையை நிர்ணயிக்க முடியாதென்பது உண்மைதானா? சாதாரணக் குடிசைகளைச் சுற்றி மட்டுமல்ல; பெரிய மனிதர்களின் பங்களாக்களைச் சுற்றியும் சாக்கடை ஓடுகிறதென்பதின் அர்த்தம் சரிதான் போலும். மினுக்காகத் திரியும் பெரிய இடத்துப் பெண்களின் அந்தரங்க வாழ்க்கை......?

என் உள்ளத்தில் ஒருவித அருவெறுப்புண்டாயிற்று. பெண்ணை, பெண் இனத்தையே சபித்தேன்.

"டாக்டரையா என்ன யோசிக்கிறீங்க: நோய் வேறொன்றுமில்லே; போன மாதந்தான் பிரமாதமாகக் கல்யாணம் நடந்தது. பந்தலில் இப் பாவிப் பெண் தங்க விக்கிரகம் போல விளங்கினாள். யார் யார் கண் போட்டாங்களோ? எல்லாமாகச் சேர்ந்து என் பேத்திக்குப் பிடிச்சிக் கிட்டுது" என்று தன் வழக்கமான பாணியில் முறையிட்டாள் ஒரு பாட்டி.

துப்பறியும் என் உள்ளத்திற்கு இப்போது மற்றொரு தடையம் கிடைத்து விட்டது. கடந்த மாதந்தான் இப் பெண்ணிற்குக் கல்யாணம் நடந்தது. உண்மை! நானும் அதை அறிவேன்; அப்படியானால்......?

வேட்டை நாய்க்கு மூக்கில் வியர்த்து விட்டால் அருகில் எங்

காவது முயல் பதுங்கி இருக்கும். என் பார்வைச் சுற்றிலும் நின்ற மனிதர்களின் மேல் ரோந்து சுற்றியது. பெண்களைக் கடந்து ஆண்கள் பக்கம் நோக்கினேன். ஒரே ஒரு வாலிபன் மட்டும் என்னைக் கவனியாது நோயாளியின் பக்கமே குனிந்து நின்றான். சிறிது நேரத்தில் தலையை உயர்த்தி தன் மருண்ட விழிகளால் என்னை நோக்கினான். மறுகணமே தன் பார்வையைக் கீழே தாழ்த்திக் கொண்டான். நான் மீண்டும் மீண்டும் அவனையே நோக்குவதை அறிந்ததும் அவனது அழகிய முகம் பயத்தால் வெளிறியது. 'டாக்டர்! என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்!' என்று மன்றுடுவது போல் அவன் பார்வை பரிதாபமாக மாறியது. ஏதோ ஒரு அந்தரங்கத்தை மறைக்க முயல்கிறான் என்பதை அறிந்து கொண்டேன். அது என்ன என்பதும் எனக்கு விளங்கி விட்டது.

பரிசோதனைகளை முடித்து விட்டதாகப் பாசாங்கு செய்துகொண்டு வக்கீலுடன் வெளியே வந்தேன். அவர் தம் நண்பர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். உங்கள் மருமகனைப் பார்க்க வேண்டுமே என்று என் விருப்பத்தை வெளியிட்டதும் அழைத்து வரும்படி ஒரு ஆளை அனுப்பினர். நபர் நோயாளியின் பக்கத்திலோ வீட்டின் எந்தப் பகுதியிலுமோ இல்லை என்று பதில் வந்ததும் என் சந்தேகம் உறுதியாயிற்று.

'ஏதாவது மருந்து கொடுக்கிறீர்களா டாக்டர்!' என்று கேட்டார் சந்திரசேகரன்.

'ஊசி போடலாமென நினைக்கிறேன்.'

'அம்மை நோய்க்கு ஊசி போடலமா? அப்படி வழக்கம் கிடையாதே?'

'இது தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதுமுறை. நாளைக் காலைக்குள்ளாகவே நல்ல குணம் காணலாம் பாருங்கள்,' என்று சமாதானம் சொன்னேன்.

"புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதா? யாரால்? எப்போது?" என்று கேள்விக் குறிகளாக எய்தார் அவர்? குறுக்குக் கேள்விகள் கேட்பதற்கு வக்கீலுக்குமா சொல்லித் தெரியவேண்டும்?

'டாக்டர் நோபிள்! அமெரிக்காவில்' என்று ஆணித்தரமாக ஒரு பதிலைத் தூக்கி எறிந்தேன். ஆகா! வக்கீல்களைப் போலவே டாக்டர்களுக்கும் பொய் சொல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள் குறைவில்லை என்ற என் தத்துவார்த்தம் எவ்வளவு பெரிய உண்மையாகிறது! அத்தகைய ஒரு மருந்தைக் கண்டுபிடிக்கவேண்டிய புண்ணியவான் இனித்தான்உலகில்பிறக்க வேண்டியிருக்கிறது. அதற்குள்ளாகவே அவனை நான் வக்கீலுக்கு அறிமுகம் செய்து வைத்து விட்டேன்.

இரவு எட்டு மணிவரை நோயாளிகளைக் கவனிக்கும் போதும் என் கண்கள் அடிக்கடி வாசல் நோக்கிய வண்ணமாயிருந்தன. எதிர்பார்க்கப்பட்ட அந்த நபர் சந்திரசேகரனின் மருமகன் வருவதாயில்லை. தூங்கச் செல்லும்வரை அவன் வராததால் என் உள்ளத்தில் பல வித எண்ணங்கள் எழுந்து குழப்பின. தன் ரகசியங்கள் வெளியாகி விடுமெனப் பயந்து அவன்......? தற்கொலை......தலை மறைவாகுதல்......

எவ்வள்வு தீமைக்குரிய நோய் இது? குடும்ப வாழ்வின் அஸ்தி வாரத்தையே புல்லுருவி போல மறைந்திருந்து அரித்துக் கொண் டல்லவா இருக்கிறது? கௌரவ மும் ஒழுக்கமுமிக்க நல்ல மனிதர் களின் வாழ்க்கையையும் கூட...... நோயின் துன்பத்தை அனுபவிப் பது இருக்கட்டும். அவன் மறைந்து போய் விட்டானால் அதன் பிறகு அவ்விளம் பெண்ணின் வாழ்வு...? இந்தத் தண்டனையைப் பெற அவள் செய்த தவறுதான் என்ன?

திருமணம்! ஊர் ஒப்ப உலகறிய புனிதமெனப் போற்றி அவள் கழுத்தில் போடப்பட்ட மாங்கல் யத்தின் மகிமை!

இப்போது என் எதிரே அமர்ந்திருந்த வாலிபன் மேல் அனுதாபத்தை விடக் கோபமே என் உள்ளத்தில் மிஞ்சி நின்றது. ஆயினும் இந்தப் பின்னிரவிலா வது வந்து சேர்ந்தானே என்ற ஆறுதல்.

'டாக்டர் சார்! அவள் ஒரு களங்கமுமற்றவள்; கறை படாத கண்ணுடி போன்றவள். நான்தான் அவள் நோய்க்குக் காரணம்; அவள் இதை அறிந்தால்......? என்னைக் காப்பாற்றுங்கள் சார்' என்று மன்ருடினன் அவன்.

'ஏன் இந்த மாதிரித் தவறு களுக்கு இடம் கொடுக்கிருய்?' என்று விசாரித்தேன்.

அவன் கூறிய விபரம் பின் வரு மாறு:—

அவன் பெயர் சுந்தரேசன். சந் திரசேகரனுக்குத் தூரத்து உறவு. அவர் மகள் சாந்தியுடன் இளமை முதல் ஒன்ருகப் பழகி வந்தான். மொக்குகள் மலராக விரிவது போல கால மாறுதலில் அவர் களின் அன்புக் காதலாக விரிந் தது.

உறவினர் எதிர்த்தார்கள்; அந் தஸ்தில் குறைந்தவன்! ஏழை! என்ற குற்றச் சாட்டு. சாந்தியைத் தானடைய வேண்டும் என்ற எண் ணம் சுந்தருக்குத் தீராததாகி விட் டது. தானும் ஒரு வக்கீலாகி விட் டால் அந்த எண்ணம் ஈடேறலாம் என்று நினைத்துத் தன் தகப்ப ஞரை வற்புறுத்தி மிகுந்த சிரமத் துடன் இணங்க வைத்து விட் டான்.

ஊரில் சாந்தியின் மேல் பல பெரிய மனிதர்களின் கண் விழுந்தி ருந்தது. சந்திரசேகரன் மிகவும் செல்வாக்கானவர், பணக்காரர்; அத்துடன் சாந்தி அவரின் ஒரே மகள். பெரும் பெரும் பண்ணை யார்கள்கூட அவளைத் தன் மருமக ளாக ஏற்றுக்கொள்ளத் தயாராய் நின்றனர்.

---

- வழி தவறிய வாலிபன், வருங்காலத்திற்காக வளரும் சமுதாயத்தைச் செல்லறிக்கச் செய்யும் கரையான்—நன் மரத்தை நாசமாக்கும் புல்லுருவி.
- தன் தவறுகளால் தேடிக் கொண்ட தொத்து நோய் அவனை மட்டிலும் பிடித்திருப்பதல்ல.......
- பிறருக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுகிருன் வரையாது வழங்கும் வள்ளலைப் போல.

வக்கீல் வேலைக்குப் படித்துக் கொண்டிருக்கும்போது விடுமுறை கழிந்து ஒரு தடவை சென்னைக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தான் சுந்தர். அது இரவு வண்டியாதலால் கூட்டம் அதிகமில்லை. ஒரு வயோதிகர் மட்டும் அவன் ஏறியிருந்த பெட்டியில் எதிர்த்த ஆசனத்தில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றதும் ஒரு இளம் பெண் அவசரமாக வந்து அதில் ஏறிக் கொண்டாள்.

சுந்தர் மரியாதையாகச் சிறிது விலகி உட்கார்ந்தான். அவள் ஒரு குடும்பப் பெண்ணைப் போலத்தான் தோன்றினாள். ஆனால் அந்த இரவிலும் தனியே வந்திருந்தாள். மிகவும் கட்டான உடல் அமைப்பும், அழகும் பொருந்தியவள். எந்த வாலிபனும் அவள் தோற்றத்தில் மயங்கத்தான் வேண்டும்.

சிறிது நேரம் அமைதியாக இருந்தாள். அவள் முகத்தில் ஏதோ கவலைக் குறி நிரம்பியிருந்தது. கால்களிரண்டையும் பலகையின் மேல் வைத்து மடங்கிய முழங்கால் மீது தலை சாய்த்து வழிந்து நின்ற கண்ணீரை மறைவாகத் துடைக்கலானாள்.

அதைக் கண்டதும் சுந்தரின் மனம் இளகியது. வீட்டில் கணவனுடன் ஏதோ சண்டை நடந்திருக்கும் என எண்ணலானான். ஏற்கனவே கவர்ச்சிக்கப்பட்டிருந்த அவன் மனம் அதிகமாக அவள் பக்கம் திரும்பியது.

அடுத்த ஸ்டேஷனில் காப்பிச் சாப்பிட்டபோது சுந்தர் அவளுக்கும் ஒன்று வாங்கிக் கொடுத்தான். அவள் காசை நீட்டியபோது பெற்றுக்கொள்ள மறுத்தான். பதிலாகக் கண்களால் அவள் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள். பழக்கம் முற்றி வளர்ந்தது.

சென்னைக்கு வந்திறங்கியும் சுந்தருக்கு அவளைப் பிரியமனமில்லை. கணவனுடன் சண்டையில் தாய் வீட்டிற்குத் திரும்பி வந்துகொண்டிருப்பதாக அவள் சொல்லியிருந்தாள். அவள் தங்குமிடத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலில் அவளைப் பின் தொடர்ந்து செல்லலானான்.

வாலிபர்களிடம் இத்தகைய பலவீனம் மோசமானதுதான். ஆனால் பலர் அதற்கு அடிமையாகி விட்டிருக்கின்றனர். அவர்கள் உள்ளத்தே எவ்வளவு தீவிரமான காதல் எரிந்து கொண்டிருந்த போதிலும் காமத்தின் வெதுவெதுப்பான உஷ்ணத்தை அவர்களால் உதறித்தள்ள முடிவதில்லை.

முதலில் வந்து வரவேற்ற ஒரு வயோதிக மாதைத் தன் தாயாரென அப் பெண் அறிமுகம் செய்து வைத்தாள். இன்னுமிரு பெண்களிருந்தனர். அவர்கள் சகோதரிகளாக இருக்க வேண்டுமென அவனே யூகித்துக் கொண்டான்.

வெகுநேரம் மிகவும் பயத்துடன் தான் தயங்கிக் கொண்டிருந்தான். ஆனால் மாடியில் தனி அறையாதலாலும் கீழிருந்து யாரும் அங்கு வராததாலும், ஆடும் அழகு மயில் போல் அந்த அழகி அவனுடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்ததாலும் அவனுள்ள வாலிபத்தின் தீ மூண்டெழுந்தது. அதில் தன் இளமையைப் பொசுக்கிக் கொண்டான் தீமைக்குப் பலியாகி விட்டான்.

வீட்டை விட்டு வெளியே புறப்படத் தயாரான போதுதான் சட்டைப் பையின் கனம் குறைந்திருப்பதை உணர்ந்தான். பணப் பையைக் காணோம்; கோபமாகக் கத்திக்கொண்டு பணத்திற்காக அப் பெண்ணிடம் தகராறு செய்த போது ஒரு முரட்டு மனிதன் வீட்டின் ஒரு அறையினுள்ளிருந்து வந்து சுந்தரைத் தன் வலுவான கரங்களால் பிடித்து உதைத்து கடிகாரத்தையும் பேனாவையும் பறித்துக் கொண்டு வாசலுக்கு வெளியே தள்ளி விட்டான். பருமனான கிழவி வெற்றிலையை மென்றவாறே அலட்சியமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இதர பெண்களின் ஏளனச் சிரிப்பொலியும் கேட்டது. அதன் பிறகுதான் அவன் உணர்ந்தான் அது விபச்சார விடுதியென்பதை!

பணத்தை இழந்ததற்காக மட்டுமல்ல, புத்தியை, ஒழுக்கத்தை, மானத்தை, யாவற்றையும் இழந்துவிட்டதற்காக சுந்தர் மிகவும் வருந்தினான். சாந்தியின் மாசற்ற முகம் அவன் முன்புத் தோன்றித் தவறை சுட்டிக் காட்டித் துன்புறுத்தியது. துக்கத்தால் மள மளவென்று கண்ணீர் பெருகியது... காலங் கடந்த கண்ணீர்! அவன் பாவக் கறையை அது போக்கவில்லை. அடுத்த வாரத்திலேயே மேல் வலியும் வறட்சியும் அரையாப்பும் தோன்றி நோய்க்கு அறிகுறி காட்டின. தேக முழுவதும் நீர்க் கொப்பளங்களும் தோன்றின. அது பெண் நோய்!...பரத்தையர் தரும் பரிசு.

நல்ல திறமையான டாக்டர் வந்து கவனித்ததால் சில நாட்களிலே குணமுண்டாயிற்று. சகஜமாக எழுந்து நடமாடலானான். டாக்டர் தவறாது இன்னும் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென எச்சரித்திருந்தார். அவன் அதைச் சட்டை செய்யவில்லை; அந்த நோய் மறைந்து போய் விட்டது. அவனும் அதை மறந்துபோனான்... ஆனால்...?

அந்த நோயின் தன்மையே அதுதான்; தரை மட்டத்தில் வெட்டப்பட்ட மரத்தின் வேர்ப் பாகங்களில் ஜீவன் மறைந்திருந்து புதுத் தளிர்களைத் தோற்றுவிப்பதைப் போல மூன்று வருடங்களாக அவனுள் மறைந்திருந்து பிறகு பலனை காட்டி விட்டது.

இதற்கிடையில் வக்கீல் படிப்பை முடித்துக்கொண்டு சந்திரசேகரனிடமே ஆரம்பப் பயிற்சியாளனாக

**“கலை மன்றம்” வாரந்தோறும் சுதேசமித்திரன், ஹிக்கின்பாதம்ஸ் ரயில்வே ஸ்டால்களிலும் கிடைக்கும்.**

**—மானேஜர்**

அமர்ந்தான். ஒரே கல்லில் இரண்டு காய் விழுந்தது. தொழில் துறையில் பெயர் விளங்கி வந்ததுடன் சாந்தியை அடையும் காதல் பாதையிலும் வெற்றி கிட்டியது. அந்தஸ்தைக் காட்டி பிறர் தடுத்த போதிலும் அவனது ஊக்கத்தையும் வாக்கு வன்மையையும் மெச்சி சந்திரசேகரன் தன் மகளை அவனுக்கே கொடுத்து விட்டார்.

'டாக்டர்! இதுதான் என் கதை! கல்யாணமாகி ஒரு மாதந்தானாகிறது. இந்த அயோக்கியனை அவள் அன்புடன் காதலித்ததற்காக நானளித்த பரிசு! அனிச்சத்தையொத்த மெல்லிய மலராளை நான் களங்கப்படுத்தி விட்டேன். அமுத கிண்ணத்தில் விஷத்தைக் கலந்தேன். எனக்கு என்ன தண்டனை வேணடுமானாலும் கிடைக்கட்டும்...என் இரத்தத்தை...உயிரையே வேண்டுமானாலும் தருகிறேன்; என் சாநதியைக் காப்பாற்றுங்கள். அந்த அழகு விக்கிரகத்தின் மேல் படிந்திருக்கும் தூசியைத் துடைத்தெறியுங்கள் டாக்டர்;' என்று கதறினான் சுந்தர்.

'அதுதான் மிஸ்டர்! இந்த நோயின் தீமையே அதுதான்; தன் ஒருவனோடுத் தீருவதில்லை. அமைதியான குடும்ப வாழ்க்கையையே நாசமாக்கி விடும்.'

'டாக்டர் சார் நான் அதை உணர்ந்து விட்டேன். அநத விஷத்தை இனித் தீண்டவே மாட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள்; என் சாந்தியைக் குணப்படுத்துங்கள்' என்று மீண்டும் கெஞ்சினான்.

முதலில் நீ பூரணமாகச் சிகிச்சை பெற தயாராயிருக்க வேண்டுமென்றேன், சம்மதித்தான். அடுத்ததாக இனி எக் காரணத்தை முன்னிட்டும் இதர பெண்களைத் தீண்டக் கூடாதென்றேன். சரி என்றான்.

அவனை அனுப்பி விட்டு மேல் மாடிக்குத் திரும்பி வந்தபோது என் மனைவிப் போர்வையால் உடலை மூடிக்கொண்டு அயர்ந்த நித்திரையி லிருப்பவளைப் போல் படுத்திருந்தாள். அவள் தூங்கி இருக்க முடியாது. வசந்தத்தின் பௌர்ணமி நிலவிலே வாழ்க்கைத் துணைவனுடன் தேன் நிலவைச் சுவைக்க வேண்டிய இளம் பெண்ணுக்குத் தூக்கமேது? அவளது பிணக்கைப் போக்கிச் சமாதானம் செய்வதற்குள் ஒரு முழு இரவே தேவையாகி விட்டது.

## முகப்பின் அழகு

உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு

(குறள் 238)



# திருடர்கள் ஜாக்கிரதை

பெ. சரோஜா ★★

**இக் கதையைப் படிக்கும்போது இப்படி யொரு மன்னன் இருந்தானே என்ற எண்ணம் ஏற்படலாம். என்னமோ இருந்திருக்கிறுன். இது வொரு சிறுவர் பகுதிதானே.**

இங்கிலாந்தைச் சார்ந்த ஐந்தாம் சார்லஸ் ஒருநாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்ருன். அவனுடன் அவனது முக்கிய படைகளும் உடன் சென்றிருந்தன.

வெகுதூரம் காட்டினுள் பிரயாணம் செய்த சார்லஸ், களைத்துப்போய் ஒரு பாழடைந்த மண்டபத்திற்கு வந்துசேர்ந்தான். அந்த மண்டபத்தில் ஏற்கனவே நான்குபேர்கள் இருந்தார்கள். அந்த அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் அவர்களுக்கு என்ன வேலை இருக்கும்? வழிதவறி அங்கு வருபவர்களிடம் கொள்ளை அடிப்பது தான் அவர்கள் வேலை.


சார்லஸ் அரசன் வேட்டை உடையில் இருந்ததால் அவர்கள் அவனை அடையாளம் கண்டு கொள்ளமுடியவில்லை. ஆகவே அவனிடமே கொள்ளையிடுவது என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

அரசன் பாழ் மண்டபத்தில் வந்து உட்கார்ந்து கொண்டதைக் கவனித்த அவர்கள் உடனே தரையில் படுத்துக்கொண்டு, தூங்குபவர்களைப் போலப் பாவனை செய்தார்கள். அரசன் "யாரோ தூங்குகிருர்கள்! பிரயாணிகள் போலும்" என்று நினைத்து ஏதோ யோசனையிலாழ்ந்துவிட்டான். அவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பது அரசனுக்குத் தெரியாது. சில நிமிடங்கள் சென்றிருக்கும். தூங்கிக் கொண்டிருந்தவர்களில் ஒருவன் எழுந்து அரசனிடம் வந்தான்.

"ஐயா! நான் இப்பொழுது ஒரு அருமையான கனவு கண்டேன். கனவில் வந்த தேவதை உமது தொப்பியை எடுத்துக்கொள்ளச் சொல்லிற்று" என்று சொல்லி விட்டு, சார்லஸின் தொப்பியை எடுத்துக்கொண்டன்.

இரண்டாமன் எழுந்து வந்தான். தேவதை அவன் கோட்டை எடுத்துக்கொள்ளச் சொன்னதாகச் சொல்லி அரசனிடமிருந்து கோட்டைக் கழற்றிக்கொண்டான். மூன்ருவதாக எழுந்துவந்தவன் "கனவில் வந்த தேவதை உமது உள் சட்டையைக் கழற்றிக் கொள்ளச் சொற்லிற்று" என்று சொல்லிக்கொண்டே அதைக் கழற்றி எடுத்துக்கொண்டான்.

நான்காவதாக வந்தவன் அரசனின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும், அதன் நுனியில் பொன்னுலான ஒரு ஊதல் பிணைக்கப் பட்டிருப்பதையும்க ண்டான்.




"தேவதை என்னை இந்த ஊதலையும், சங்கிலியையுமே எடுத்துக் கொள்ளச் சொல்லிற்று" என்று சொல்லி அரசனின் கழுத்திலிருந்த சங்கிலியை எடுக்கப்போனான்.

சார்லஸ் பார்த்தான். அவர்கள் கொள்ளைக் கூட்டத்தினர் என்பதைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என்று விரும்பினான். ஆகவே ஊதலை எடுக்கவந்தவனைப் பார்த்து "உனக்கு இதை ஊதத் தெரியாது. ஆகவே இதை ஊதுவது எப்படி என்பதை நான் காட்டுகிறேன். பின்னர் எடுத்துக்கொள்ளலாம்" என்று சொலலிக்கொண்டே ஊதலை வாயில் வைத்து ஊதினான்.

ஏதேனும் ஆபத்தில் சிக்கிவிட்டால்தான் அரசன் அந்த ஊதலை ஊதுவான். அரசனைத் தேடிக் கொண்டிருந்த படைகள், ஊதல் சப்தத்தைக்கேட்டு அரசன் ஏதோ ஆபத்தில் சிக்கியிருக்கிறான் என்பதைத் தெரிந்துகொண்டு அங்கு ஓடிவந்தனர்.

தன் பரிவாரங்கள் அங்குவந்து சேர்ந்ததும் அரசன் கீழே படுத்துக்கொண்டு, தூங்குபவனைப் போல் பாசாங்கு செய்தான். பின்னர் எழுந்து "எனது பரிவாரங்களே! இங்கே நான் ஒரு கனவு கண்டேன். அற்புதமான கனவு! அந்தக் கனவிலே ஒரு தேவதை வந்தது. இதோ இங்கிருக்கும் எனது நான்கு நண்பர்களும் பெரிய கொள்ளைக்காரர்களாம். அவர்களைத் தூக்கில் போட்டுவிடுங்கள்' என்று சொல்லிற்று. ஆகவே அவர்களைக் கொண்டுபோங்கள்!" என்றுசொல்லி, கொள்ளைக்காரர்களைக் காண்பித்தான்.

கொள்ளைக்காரர்களுக்கு அப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. அரசனின் சாமர்த்தியமும் தெரிய வந்தது.

இது சார்லஸ் வாழ்க்கையில் நடந்த ஒரு உண்மைச் சம்பவமாகும். சார்லஸின் ஆட்சியில் திருட்டுகள் அதிகம் ஏன் நடக்கவில்லை என்பது தெரிகிறதா?

# நெப்டியூன்

[ துரை அரசன் ]

புகை மண்டலம் வானை மறைக்கும் அளவுக்குப் பூஜைகள் நடத்தப் பட்டன. என்றும் இல்லாத விசேஷம் அன்று—கிரீஸ் நாட்டில். காரணம். பல நூறு ஆண்டுகளுக்கு முன், கிரீஸ் நாட்டு மக்களுக்கு ஒரு கடல் தேவன் தேவைப் பட்டான். மிக மிக அவசரமாகத் தேவைப்பட்டான். உடனே பூஜைகள் நடத்தினர்—யாருக்காக? தெய்வங்களுக்குத் தலைவனாகிய ஜீயஸுக்காக-ஜீயஸும் காட்சி தந்தார்

பக்தர்கள் ஆரவாரித்தனர்—பார்த்தார் ஜீயஸ். ஆண்டவனாக இருந்தும் அடியார்களின் ஆவலை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

'என்ன வேண்டும் பக்தர்களே?' என்று கேட்டார்.

'கடல் தேவன் வேண்டும்!' என்றான் ஒரு துணிவுள்ள பக்தன்.

'கடல் தேவனா? எதற்காக?' ஜீயஸ் புரியாமல் கேட்டார். தெய்வங்களின் பட்டியல் அதிகரித்து எங்கே தன்னுடைய பதவிக்கு மோசம் வந்துவிடுமோ என்ற பயம் அவருக்கு!

'கடலை யடக்கி ஆள ஒரு தேவன் வேண்டும் பிரபோ!' என்று ஒரு பக்தன் சொல்லவுமே, கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் அதை ஆமோதிக்கும் வண்ணம் இரைந்தார்கள். வேறு வழி யில்லாமல் ஜீயஸ் தன் காதலிகளில் ஒருத்தியுடன் கூடி ஒரு மகனை ஈன்றெடுத்தார்.

மகிழ்ச்சியோடு மக்கள் அவனை ஏற்றுக் கொண்டார்கள் கடல் தேவனாக!—அவன் தான் நெப்ட்யூன்.

இந்தக் கதை விசித்திரமானதல்ல—வேடிக்கையானது. ஏனென்றால் பயனற்ற ஒன்று. ஆனால் நெப்ட்யூன் என்ற பெயரில் ஒரு கோள் கண்டுபிடிக்கப் பட்ட விதம் இருக்கிறதே—அது மிக மிக விந்தையானது. விஞ்ஞானத்தின் வன்மைக்கும்—வான நூல் சாஸ்திரிகளின் திறமைக்கும் அது ஒரு எடுத்துக்காட்டு. அதை அறிந்துகொள்ள வேண்டாமா?

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி.

லண்டனிலே—ஒரு சாதாரணமான தெரு! அந்தச் சாதாரணத் தெருவிலே ஒரு சாதாரணமான வீடு—அந்த சாதாரணமான வீட்டிலே—ஒரு சாதாரணமான அறை! அந்தச் சாதாரணமான அறையில் உலகம் போற்றும் வானநூல் சாஸ்திரி ஜே. ஸி. ஆடம்ஸ் சிந்தனை தோய்ந்த முகத்தோடு அமர்ந்திருந்தார். அவரது கண்களிலே ஒரு அசாதாரணமான அறிவு ஏக்கம் எப்போதும் குடிகொண்டிருந்தது. அன்று அது மிக அதிகமாக இருந்தது. காரணம்—அவரது கணித முறையில் ஒரு தவறு ஏற்பட்டு விட்டது. யூரேனஸ் என்ற கோளின் சுற்றும் பாதையை ஆடெம்ஸ் எந்த முறையில் கணித்தாரோ, அந்த முறையில் ஒரு சிறு தவறு ஏற்பட்டு விட்டது. இதையறிந்த ஆடெம்ஸ் அந்தத் தவறுக்குக் காரணமென்ன

என்று ஆராய்ந்தார்.

யூரேனஸ் என்ற கோளின் 'செல்லும் பாதை' தான் தரப் பட்டிருக்கிறது. ஆடெம்ஸ்தான் முதன் முதலாக இந்தக் கோளின் பாதையை வரையறுத்துக் கூறி னுர்—கணித முறைப்படியும், வான நூல் சாஸ்திரப்படியும். [அப் போது நெப்ட்யூன் கண்டுபிடிக்கப் படவில்லை.] ஆனல் என்ன காரணத் தாலோ யூரேனஸ் முதல் பாதி தூரம் ஆடெம்ஸின் கணித முறைப்படி சென்று, பின்னர் B என்று குறிப்பிட்ட இடத்தி லிருந்து விலகி C வரையிலும் வந்து, மறுபடியும் A யுடன் போய்ச் சேர்ந்துகொண்டு, பின் னர் ஆடெம்ஸின் நிர்ணயப்படி தன் பழைய இடத்தை யடைந் தது. இதுதான் அது சென்ற ணத்தை மனதில் நிலையாகக் கொண்டு பல நாட்கள் அவர் ஆராய்ந்ததில், அவருக்குச் சாதக மான பல விவரங்கள் தெரிய வரவே, அவைகளைக் குறிப்பெடுத் துக் கொண்டார். இந்த நேரத்தில் திடீரென்று யூரேனஸில் சிறிது அதிர்ச்சி ஏற்பட ஆரம்பித்தது காரணம் என்னவென்றால் அது, தன் பாதையில் இடையூருக இருக் கும் கோளின் அருகே சில சமயங் கள் சென்று விடுவதால் அதிர்ச் சிக்கு ஏதுவாகிறது. இதையறிந்த ஆடெம்ஸ் நிச்சயமாக ஒரு கண்டு பிடிக்கப்படாத கோள் யூரேன ஸின் பாதையில் இருக்கிறது என்று முடிவு கட்டி, தன் முடி வினைச் சிறந்த ஆங்கில வானநூல் சாஸ்திரியாகிய ராயல் என்ப வருக்கு எழுதியனுப்பினர். ஆனல்

---

**அஞ்ஞான இருளிலே மூழ்கிக்கிடந்தனர் அன்றைய நாட்களிலே, மக்கள்.**
**இன்றைய நாட்களில் மட்டுமென்ன? அஞ்ஞான இருள், அகன்றபாடில்லை.**
**அவ் அஞ்ஞான இருளை அகற்றி வருவது விஞ்ஞானம்—**
**அது ஆக்கத்திற்கே யன்றி, அழிவுக்கல்ல.**

---

முறை. ஆகவே ஆடெம்ஸின் கணிப்பில் பெரிய தவறு ஏற்பட்டு விட்டது. உடனே பற்பல வான நூல் சாஸ்திரிகள் அவரைக் கேலி செய்ய ஆரம்பித்தனர். இதைக் கண்ட ஆடெம்ஸ் யூரேனஸின் பாதை முறிவுக்குக் காரண மென்ன என்று ஆராய்ந்தார். அப் போது அவருக்கு ஒரு சிறு உண்மை புலப்பட்டது. 'தான் கணித்த பாதையில் யூரேனஸ் செல்லாமல் இருப்பதற்கு இடை யூருக வேறு ஒரு கோள் அங்கே இருக்கும்!'—இதுதான் அவரு டைய புதிய எண்ணம். இந்த எண் ராயலோ "நீங்கள் முதன் முதலாக யூரேனஸின் பாதையையே தவ ருகக் கணித்து விட்டீர்கள். யூரே னஸ் செல்வது வேறுபாதையில்; ஆகவே புதிய கோள் இருக்கிறது என்பது பைத்தியக்காரத்தனம்", என்று சொல்லிவிட்டார்.

ஏமாற்றமடைந்தார் ஆடெம்ஸ். அவரைவிட மிகச் சிறந்த கணித வானநூல் சாஸ்திரியே குற்றம் கூறும்போது ஒத்துக்கொள்வதும் அதன் காரணமாக ஏமாற்ற மடை வதும் சகஜம்தானே!

ஆனல் இதே சமயத்தில் பிரான்சில் இருந்த ஒரு வான

நூல் சாஸ்திரியும் யூரேனஸின் செல்லும் பாதையை ஆராயத் தொடங்கினர்.

அவரது பெயர் லெவர்ரியர். அவருக்கு ஆடெம்ஸ் தன் முயற்சிகளில் தோல்வியடைந்தது தெரியாது. தன் அறிவின் துணை கொண்டு யூரேனஸின் பாதையில் தவறு கண்டுபிடித்து, யூரேனஸின் பாதை முறிவுக்கு அருகாமையில் புதிய ஒரு கோள் இருப்பதாக அவர் உணர்ந்தார். யூரேனஸின் திடீர்—திடீர் அதிர்ச்சியானது அவரது கருத்துக்கு ஆதாரமாக இருந்தது. உடனே தனது முடிவை பல பல புத்தகங்களின் மூலமாக வெளியிட்டார். உலகமெல்லாம் அவரது முடிவு பரவியது. 'புதிய கோள் ஒன்று இன்னும் கண்டுபிடிக்கவில்லை' என்று ஒவ்வொரு வான நூல் சாஸ்திரியும் பேசிக் கொண்டான். இதையறிந்தார் ஆடெம்ஸ். எந்த இடத்தில் புதிய கோள் இருப்பதாக அவர் சொன்னரோ, அதே இடத்தில் புதிய கோள் ஒன்று கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்று லெவர்ரியர் சொன்னது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. உடனே தன்னுடைய முடிவுகளை யெல்லாம் விளக்க நல்ல பல சாதனங்களுடன் அவர் ஒரு நாள் பிரான்சுக்ுப் புறப்பட்டு, பாரீஸில் லெவர்ரியரைச் சந்தித்தார். இருவரும் தங்களது முடிவுகளை ஆராய்ந்து பார்த்தனர். இம்மியளவும் வேறுபாடு இல்லை. எனவே யூரேனஸின் பாதையில் புதிய கோள் இருப்பதாக முடிவு செய்து ஜெர்மனியில் இருந்த கேல்லி என்ற வான நூல் சாஸ்திரியை வரவழைத்து புதிய கோளைப் பற்றிக் கலந்து பேசினர். முதலில் கேல்லிக்கு நம்பிக்கையில்லை. புதிய கோளைக் கண்டுபிடிக்கும் பயனற்ற முறையில் இறங்கி நேரத்தை வீணக்க முடியாது என்று அவர் கூறிவிட்டார். ஆனல் அன்போடு லெவர்ரியரும், ஆடெம்ஸும் வேண்டிக் கொள்ளவே அன்று இரவு மூன்று மணி நேரங்கள் தான் அதற்காகச் செலவிடுவேன் என்று சொல்லி விட்டு, கேல்லி அந்த இருவரையும் அழைத்துக் கொண்டு வான ஆராய்ச்சி நிலையத்துக்குச் சென்றார். ஆராய்ச்சி ஆரம்பமானது.

யூரேனஸின் பாதையை மூவரும் தெளிவாகக் கவனித்துக் கொண்டு வந்தனர். யூரேனஸ் கண்மண் தெரியாத வேகத்தில் சுழன்ற வண்ணம் தன் பாதையில் (ஆடெம்ஸும்—லெவர்ரியரும் கணித்தது) வந்துகொண்டிருந்தது. ஆனல் என்ன காரணத்தாலோ ஒரு இடத்தில அது மெதுவாகச் சுழல ஆரம்பித்தது. பின்னர் பழைய வேகத்தை அடைந்து சிறிது தூரம் முன் சென்றது. அப்போது அதனுடைய அசைவில் அதிர்ச்சிகள் உண்டாயின! உடனே கேல்லி கூர்மையாகக் கவனித்தார். யூரேனஸ் முன்னும் செல்லாமல்—பின்புறமாகவும் வராமல் நின்ற இடத்திலேயே சுழன்று கொண்டிருப்பதைக் கண்டார். அவரது ஆவல் அதிகமானது. காரணம்-எந்தக்கோளும் தன் பாதையில் செல்லாமல் ஒரு இடத்திலேயே நில்லாது. ஆனல் யூரேனஸ் சிறிது நேரம் நின்றது. அதற்குக் காரணம் என்ன? யூரேனஸின் மிக அருகாமையில்

ஆகர்ஷண சக்தியை வெளிப்படுத்தும் வேறு ஒரு கோள் இருப்பது தான். கேல்வி கூர்மையாகக் கவனித்தார். அப்போது ஆடெம்ஸ் கேல்வியின் தோள் மேல் கை போட்டுக் கொண்டு கவனித்த வண்ணம் இருந்தார். ஏதோ ஒரு கவனத்தில் இருந்த கேல்வி ஆடெம்ஸைக் கையை எடுக்கும்படி கத்தி விட்டு, தன் வேலையில் இறங்கினர். எப்படியாவது ஒரு கோள் அந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பதுதான் அவரது ஆசை. நன்ருகப் பார்த்தார். யூரேனஸ் நின்கிறது சுற்றிக்கொண்டு—! சிறிது நேரம் ஆயிற்று! யூரேனஸ் சற்றுப் பின்னடைந்தது. அப்போது அதனிடத்தில் அதிர்ச்சியில்லை. ஆனல் அதற்கு எதிர்ப்புறமாக எங்கோ ஒரு அதிர்ச்சி ஏற்படும் சப்தம் மிக மிகத் தெளிவாகக் கேட்டது. கேல்வி மிகக் கவனமானர். அதிர்ச்சியின் சப்தம் அதிகமானது. யூரேனஸ் கொஞ்சம் கொஞ்சமாகப் பின் சென்றது. அப்போது யூரேனஸின் பாதையில் இருந்த தடையான ஒரு கோள் மெதுவாகத் தலையை நீட்டியது. பார்த்தார் கேல்வி. அவரது கண்களில் ஒளி அதிகமானது. லேசாகத் தெரிந்த அந்தக் கோள் முழுவதுமாகத் தெரிந்தது. இப்படி ஆறு நிமிடங்கள் சென்றன! அந்தப் புதிய கோள் பின்பு பின் நோக்கிச் சென்றது. அதனிடத்தில் அப்போது அதிர்ச்சியில்லை. ஆனல் அதற்கு எதிர்ப்புறமாக இருந்து அந்த அதிர்ச்சி ஏற்பட்டது. காரணம்—யூரேனஸில்தான் அதிர்ச்சி. பின் சென்ற யூரேனஸ் முன்னல் வந்தது. சிறிது நேரம் பழைய இடத்திலேயே நின்று பின்பு சடாரென்று கீழ் நோக்கி உருண்டு வந்து வாயு வேகம், மனே வேகமாய்ச் சுழன்று சென்று முடிவில் முன்னர் ஆடெம்ஸும், லெவர்ரியரும் கணித்த பாதையைப் பிடித்தது. புதிய கோள் இருக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அதற்கு 'நெப்ட்யூன்' என்று பெயரும் தரப்பட்டது. உலகம் இதைக் கண்டு மிக மிக அதிசயித்தது. சில நாட்களில் நெப்ட்யூனைப் பற்றிய முழு விபரங்களும் மிக மிகத் தெளிவாக வெளியிடப்பட்டன. அதோடு ஆடெம்ஸ்—லெவர்ரியர்—கேல்வி ஆகிய மூவரின் வன்மையும் புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டன.

* * *

பதினெட்டாம் நூற்ருண்டிலேயே அவர்கள் நெப்ட்யூனைக் கண்டுபிடித்து விட்டனர்.

## திருமதி மேத்தாவுக்குச் சிவப்பிந்தியப் பெயர்

அமெரிக்காவில் இந்தியத் தூதாராக இருப்பவரின் மனைவி திருமதி சௌதமினி மேத்தா வா-டா-மின்-கூன் என்னும் பெயர் புனையப்பெற்ருர். "பிணிதீர்க்கும் வெண் பூ" என்பது அப் பெயரின்பொருள்.

அமெரிக்க "கேம்ப் பயர் கேர்ல்ஸ்' (Camp fire girls) என்னும் சங்கத்தில் அந்த அம்மையார் சேர்ந்த போது இந்தப் புதுப் பெயர் அவருக்கு வழங்கப்பட்டது. தாழ்த்தப்பட்டோர் சேவா சங்கத்தில் அவர் தொண்டாற்றியதைப் பாராட்டி, மவுண்ட் வெர்னன் மாவட்டக் கவுன்ஸிலில் அவருக்குக் கௌரவ அங்கத்தினர் பதவி அளிக்கப் பட்டிருக்கிறது.




**சிதறிய பொறிகள்:**

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கென சென்னை சர்க்கார் தயாரித்துள்ள திட்டங்களின் இலட்சிய எல்லையின் அளவு மிக மிகக் குறைவானது; இந்த மாநிலத்தின் நிர்ப்பந்தமான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அந்த அளவு போதுமானது அல்ல;

"பெரும் தொழில்களைப் பொறுத்த மட்டில் சென்னை மாநிலம் வருந்தத்தக்க அளவு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; சுதந்திரத்திற்குப் பிறகும்கூட சென்னை புறக்கணிக்கப்படுவது, வருந்தத்தக்கதாகும்.

"பெரும் தொழில்கள் நாட்டின் பல பாகங்களிலும் பரவலாக நிறுவப்பட வேண்டுவது மிக அத்தியாவசியமானதாகும்;

"தேவையான எல்லா மூலப் பொருள்களும் கிடைக்கும் இடத்தில் தான் ஒரு தொழில் துவங்க வேண்டுமென்பது வெறும் கட்டுக் கதை; அந்த எண்ணம் தவறானது என்பது ஜப்பானிலும், இதர தொழில் மயமான நாடுகளிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

—என்று சென்னை சர்க்கார், தொழில் திட்டம் பற்றி யோசனை கூற நியமித்த குழு குறிப்பிட்டிருக்கிறது.

* * *

சட்டசபைகளுக்கு காங்கிரஸ் அபேக்ஷகர்கள் பொறுக்கப் பட்ட பொழுது, நீண்ட காலம் சிறைவாசம் செய்தது ஒரு முக்கிய யோக்கியதையாகக் கருதப் பட்டது. காங்கிரசிடம் திடமான விசுவாசம் உள்ளவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்பதற்காக அச்சமயம் அவ்விதம் செய்யப்பட்டது சரிதான். ஆனால் இப்பொழுது அவ்விதம் கருதவேண்டாமென நான் யோசனை கூறுகிறேன். நலல புத்திசாலிகளாகவும், திறமையுள்ளவர்களாயும், முழு நேரம் வேலை செய்யக் கூடியவர்களாயும் இனி அபேக்ஷகர்களைப் பொறுக்க வேண்டும். பார்லிமெண்டு மெம்பரென்றால் ஓயாது வேலை செய்வதாக இருக்கவேண்டும். பார்லிமெண்டு கூட்டங்கள் வருஷத்தில் ஏழு மாதங்கள்போல் நடைபெறுகிறது. நீண்ட அனுபவத்தினாலும் தேர்ச்சியினாலும் வக்கீல்கள் நல்ல பார்லிமெண்டு மெம்பர்களாக விருக்கக் கூடும். ஆனால் அவர்கள் கவனம் பார்லிமெண்டிற்கும் கோர்ட்டிற்குமிடையே பிளவுபட்டிருக்கக் கூடாது.

—மந்திரி தத்தர்



# அழகு எரிந்தது

T.A. துரைராஜன்

## 4

### ராணி:

நல்ல பொருத்தம் பார்த்துத் தான் எனக்கு ராணி என்ற பெயர் வைத்தார்கள்! ராணி, நல்ல அழகான ரத்னச் சுருக்கமான பெயர். தேசத்திற்கு ராணியாகப் பிறந்தவள்; தன்னிச்சைப்படி நடக்க முடியாதாம்! மனதிற்குகந்த மணவாளனைத் தேடி அடையும் சுதந்திரம் கிடையாதாம்! மத்தியானச சாப்பாட்டிலிருந்து மணவாளன் பொருத்தம் வரை, மககள் மன்றம் இருக்குமாம். அப்படித்தான் என் நிலை. என் சொந்த விருப்பு வெறுப்புக்கு யாரும் மதிப்புக் காட்டவில்லை. எனது வாழ்க்கை எப்படி அமையக் கூடாது என்று எண்ணினேனோ அப்படியே அமைத்து விட்டார்கள். என் அம்மாவும், சிவராஜுவும். அரசாளப் பிறந்த ராணிக்கு மக்கள் மன்றம் அபலை ராணிக்கு அம்மாவும், சிவராஜுவும் மக்கள் மன்றமாக நின்றனர்.

நான் பெண். எனக்கும் இதயம் என்ற வஸ்து ஒன்று இருந்தது. நரம்பும், தசையும் சேர்ந்துள்ள உயிர் ஜீவன் என்பதையே சிவராஜ் மறந்து விட்டார்.

படகுக்குப் பாய் மரம்போல், எங்கள் குடும்பத்திற்கு உதவினார் சிவராஜ். கணக்கற்ற தடவை கையைப் பிசையாமல் கடன் கொடுத்து உதவியிருக்கிறார். என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்ததே அவர்தான்! இதில் எதையும் நான் மறுக்கவில்லை. சுவற்றைக் கட்டி முடித்தவர்தான். சுவற்றைக் கட்டியதோடு நிறுத்தியிருக்க வேண்டும் அவர் கடமையை. சித்திரம் வேறு வரைய வந்து விட்டாரே! சுவற்றைக் கட்டுபவன் ஒருவன். அதிலே சித்திரம் வரையப் போகிற

வன் மற்றொருவன் என்று ஏனோ அந்த அறிவாளி அறியவில்லை.

தெய்வச் சிலையைச் சமைத்த வன், ஆலயத்திலே அந்தத் தெய் வத்தைத் தொட்டு பூஜை செய்ய முடியாதென்று கூடத் தெரிந்து கொள்ளவில்லை சிவராஜ்.

பணம் சக்ரவியூகம் போல் உத வியது, அந்த ஊருக்கு உழைப்பவ ருக்கு. அந்த வியூகததிலே தான் நான் சிக்கி விட்டேன்.

சிவராஜுக்கு என்னுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் அநேகம் கிடைத்திருக்கிறது. நெருங்கி உறவாடவும் செய்தார். என்னோடு பேசிப் பழகியவர். என் இதயத்தோடு பேசி இணைந்திருந் தால் நான் இசைந்திருப்பேனே அவருடைய இச்சைக்கு! பொம் மையை விலை கொடுத்து வாங்கு வது போலல்லவா என்னை வாங்கி விட்டார்.

ஜவுளிக் கடைக்காரன் வாச லிலே வைத்திருக்கும் பொம் மைக்கு வித விதமான உடை உடுத்தி அழகுபடுத்தி வைப்பது போல் என்னைச் சிங்காரித்து மகிழ்ந்தார். வண்ண உடையும் வயிறாரச் சோறும் காற்றைக் கிழித்துச் செல்ல காருமா தேவை வாலிபப் பெண்ணுக்கு?

என்னுடைய இதய வீணையின் நரம்புகளைத் தட்டி மீட்டியிருந்தா லல்லவா அவருடைய இசையோடு கலந்திருப்பேன் நான்.

காதல் காவியம் பாடினார் வாயால்; அந்த அமர காவியம் அவர் கண் அசைவிலே அல்லவா அரங்கேற வேண்டும்.

சிவராஜ் நல்ல அழகன்தான். படித்தவர் மட்டுமல்ல, பணக்கார ருங்கூட. என் கண்ணசைவிலே, எனக்கு என்ன வேண்டும் என்று அறிந்து அள்ளிக் குவித்திடுவார். என்ன செய்வது. என் கருத்தைக் கவரும் கனிவு அங்கே யில்லையே!

அந்த நாளை, என் வாழ்நாள் முழுதும்எண்ணியெண்ணிச்சாகும் நாளை நான் எப்படி மறக்க முடி யும்! என் இதய வீணையின் நரம்பு கள் படீர் என்று அறுந்த நாளல் லவா அது.

கட்டிலை வண்ண மலர்களால் வடிவழகாக்கி விட்டிருந்தார்கள். அதைப்பார்த்ததும் எனக்குபபிரே, தத்தை எடுத்துச் செல்ல மலர் களால் அலங்கரிப்பார்களே பாடை, அதன் நினைவுதான் ஏற் பட்டது. இந்தப் பாடையில் இடம் பெறப்போகும் பிரேதம்?

ஆட்டைப் பலியிடப் போகும் முன்னர், கொட்டுக்கள் எட்டுத் திக்கும் எட்ட, மணியோசை அலை யோசை போல் ஒலிக்க, பூசாரியின் ஓங்காரச் சப்தம், இசை முழங்க, ஒரு தனி சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறார்கள். போதாததற்குக் குளிர்ந்த நீரைக் கொட்டி அந்த அப்பாவி ஆட்டை நடு நடுங்க வைத்து நினைவிழக்கச் செய்து எப் படி ஒரேமூச்சில் வெட்டிச்சாய்த்து விடுகிறார்கள். பலியாட்டைப் படுத் திய பாட்டைப் போல்தான் என் னையும் மலர் மணம் மனதைக் கிறு கிறுக்க வைக்க, வாசனைப் பத்தி மணம் போதையூட்ட, மங் கிய ஒளி மனதிலே திகில் ஏற் படுத்த, புதுச் சேலையின் மொற மொறப்பு, உடலுக்கு ஒரு தனிக் கிளர்ச்சியை ஏற்படுத்த, பலியிட்டு விட்டார்கள்.

ஒவ்வொரு நள்ளிரவும் எவ்வ ளவு நேரம் நினைவிழந்து தூக்க மிழந்து தவித்திருக்கிறேன். என்

## கருவேல மரம்

கருவேல மரத்துச் செடிகளைப் பிடுங்கி நடுவதின்மூலம் வளர்ப்பது அவ்வளவு வெற்றிகரமானதாக இல்லை; ஏனென்றால் இதன் வேர் துல்லியமானது; இது அடர்த்தியாக வளருவதுமில்லை. ஆகையினால் இதை விதைபோட்டு வளர்ப்பது தான் நல்லது. வெள்ளத்தால் ஆற்று வண்டல் படியும் நிலத்திலும், கரிசல் பூமியிலும் கருவேல மரம் இயற்கையாக வளருகிறது. இதை வறட்சியான நிலங்களிலும் வளமற்ற நிலங்களிலும் பயிர் செய்வது உசிதமல்ல. கருவேலஞ் செடிகளைப் பயிரிடும்போது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குக் களையெடுக்க வேண்டும்.

கருவேலம் விதை ஒரு ஆண்டு வரையும், அதற்கு மேலுங்கூட முளை கிளம்பாமல் பூமியில் புதைந்து கிடக்கும்; இதை முளை கிளம்பும்படி செய்வதற்காக சுடு தண்ணீர் முறையைக் கையாள்வது நலமென்று கூறப்படுகிறது. கருவேலங் காய்களை ஆடு மாடுகள் தின்றுவிட்டுச் சாணம் போடும்போது, வெளிப்படும் விதைகள் இலேசாக முளைத்து விடுகின்றன.

பொதுவாகக் கூறுவோமேயானால், கருவேலஞ் சாகுபடியை 20 முதல் 50 அங்குல மழை பெய்யும் உஷ்ணப் பிரதேசங்களில் பயிரிடலாம்.

ளைப் பற்றியோ, என் உணர்ச்சிகளைப் பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் அமைதியாகத் தூங்குவார் சிவராஜ். அந்த நிலையில் எனக்குத் துணை. அறையிலே ஆடாது பிரகாசித்துக் கொண்டிருக்கும் குத்து விளக்குத்தான்.

எரியும் திரியைக் 'கண்டதும் என் நினைவிலே விசித்திரமான எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்து விடும். திரி எவ்வளவு தியாகம் செய்கிறது.' அறையிலே சூழ்ந்திருக்கும் இருளைப் போக்கதான் எரிந்து ஒளியேற்றுகிறது. அறைக்கு ஒளியேற்றும் செயலிலே தன்னையே பலியிட்டுக் கொள்கிறது திரி. கொதிக்கும் எண்ணெயில் மிதந்துகொண்டு திரி காட்டும் சுடரின் அழகை வியந்து எண்ணற்ற விட்டில்கள் பறந்து வந்து குலவுகின்றன. அதே சமயம் அந்த அற்புதத் திரி தன்னையே எரித்துக் கொள்கிறது என்ற உண்மையை யாருமே உணர்வதில்லை.

எனக்கும் எரியும் திரிக்கும் என்ன வித்தியாசம்! என் குடும்பத்திலே சூழ்ந்த வறுமை இருளை ஓட்ட என் வாழ்வை எரித்துக் கொள்கிறேன். தினசரி எரித்துக் கொண்டிருக்கிறேன். முதல் விட்டில் சிவராஜ். இன்னும் எவ்வளவு விட்டில்கள் வந்து மோதப் போகிறதோ.

என் முகத்திலே ஆனந்த ரேகையை ஓட்டி ரசிப்பதில் ஆனந்தம் காட்டினரே தவிர என அகத்தில் அன்பு ரேகையை ஓட்ட முயற்சிக்கவேயில்லை சிவராஜ்.

மடாதிபதிகள் மண்டல மண்டலமாகப் பவனி வருவதுபோல் ஒவ்வொரு ஊருக்கும் எங்கள் பவனி நடந்தது. ஒரு சமயம் ஆக்ராவிலே தாஜ்மஹாலைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

"அமரக் காதலின் நினைவுச் சின்னத்தைப் பார் ராணி! ஷாஜகான் தன் மனைவிக்காகக் கட்டிய கலைக்

கோயில் இது" என்று உணர்ச்சியாகப் பேசினர் சிவராஜ்.

தாஜ்மஹாலின் சௌந்தர்யத்திலே சொக்கி எங்கோ, கனவுலகத்தில் மிதந்து கொண்டிருந்த என்னைக் கர கரவெனத் தலைக்குப்புற நினைவுலகிற்கு விழ வைத்து விட்டன அவருடைய அந்த வார்த்தைகள். என் மன உணர்ச்சி அப்படிப் பலத்த தாக்குதலுக்கு ஆளாகும் என்றிருந்தால் அந்த வார்த்தைகளை அவர் சொல்லியிருக்க மாட்டார்.

பாதுஷா, ஷாஜகானுக்கு எத்தனையோ அழகிகளும் அடிமைப் பெண்களும் அவருடைய அந்தப்புரத்திலே இருந்திருப்பார்கள். ஆனால் காதல் நினைவுச் சின்னம் ஏற்படுத்தியது கட்டிய மனைவி மும்தாஜுக்குத்தானே தவிர, அந்த அபாக்கியவாதிகளான அந்தப்புர அடிமைகளுக்காக அல்ல. இந்த ராணி சிவராஜின் மும்தாஜ் அல்லவே!

"என் காதலியின் அழகு முகத்தை ஒருமுறை என் கரங்களிலே தாங்கும் வாய்ப்பை அந்தக் கடவுள் எனக்கு அளித்தால் அவருக்கு இந்த உலகம் அழியும் காலம் வரை கடமைப்பட்டிருப்பேன்" என்று செதுக்கி வைத்தான் சலீம் அனார்கலியின் கல்லறைமீது. ஆனால் அதே சலீம் சில வருஷங்களுக்குள் நூர்ஜஹானின் அழகுப் போதையிலே மதி மயங்கி மன்னன் என்பதைக்கூட மறந்து, "வாழ்வின் கிண்ணம் வறண்டுபோகு முன் இந்த மதுக் கிண்ணத்தை நிரப்பு கட்டழகியே" என்று கதற ஆரம்பித்தான். அந்த வர்க்கம்தானே சிவராஜ்.


## கதைப் பெட்டகங்கள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கசந்த கரும்பு | ... | 1 | 8 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | ... | 0 | 12 |
| இருண்ட வாழ்வு | ... | 0 | 12 |
| கொலைகாரி | ... | 0 | 12 |
| அவள் வாழ்வு | ... | 0 | 8 |
| மனைவி | ... | 0 | 12 |
| முள் | ... | 1 | 0 |
| வழுக்கி விழுந்தவள் | ... | 1 | 0 |
| தளபதி | ... | 1 | 0 |
| இலட்சியப் பெண் | ... | 1 | 0 |
| அரண்மனை அழகிகள் | ... | 1 | 8 |
| நல்ல பெண்மணி | ... | 2 | 4 |
| ஒருதுளி இரத்தம் | ... | 2 | 0 |
| காயகல்பம் | ... | 2 | 0 |
| சண்முகவடிவு | ... | 0 | 12 |
| கோகிலசுந்தரி | ... | 0 | 12 |
| மின்னல் | ... | 1 | 0 |
| வானம்பாடி | ... | 1 | 8 |
| எகிப்துநாட்டு எழிலரசி | ... | 1 | 0 |
| காதல் சிரித்தது | ... | 0 | 8 |
| சிலம்பு | ... | 0 | 12 |
| அந்தப்புரம் | ... | 0 | 12 |
| திருடர்கள் ராஜ்யம் | ... | 0 | 6 |
| வாழமுடியாதவர்கள் | ... | 0 | 12 |
| பெரியஇடத்துப் பெண் | ... | 0 | 8 |
| தப்பிவிட்டார்கள் | ... | 0 | 6 |
| வாழ்க்கைப் போர் | ... | 1 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**

**சென்னை-1.**


பற்றிய ஒரு வெறுப்பு, பயம் எல்லாம் தோன்றி என் உள்ளத்தை அவர் உள்ளத்தோடு உறவாட விடாமல் செய்து விட்டன.

அன்பு, ஆசை, அழகு அத்தனையும் அந்த அபாக்கியவானிடமிருக்கிறது. இருந்தும் என்னவோ விவரித்துச் சொல்ல முடியாத


இந்தக் காலத்து ஆண்களில் அநேகர் வீணையை மீட்ட முயலும் மனிதக் குரங்குகள் போல் தான் பெண்களிடம் நடந்துகொள்ளுகிறார்கள் என்ற எண்ணத்தை என் நினைவிலிருந்து அகற்றவே முடியவில்லை.

கன்னங்கரிய இருளிலே, துணிந்து செல்ல முயலும் குழந்தையைப் பயமுறுத்தி, அதன் பிஞ்சு மனத்தில் அச்சத்தை ஏற்படுத்தி விட்டால், பிறகு அது இருளில் மட்டும் அல்ல, பகலில் வீட்டுக்குள்ளே போகக்கூடப் பயப்படும். அப்படித்தான் என் மனதிலே எப்படியோ சிவராஜைப் ஒரு தனி உணர்ச்சி என்னை அவரை விட்டுப் பிரித்துக் கொண்டேயிருந்தது.

அன்றிரவு சிதம்பரத்தில் மேல் மாடியில் நடந்த சம்பவம் என் உள்ளத்திலே குழப்பத்தை ஏற்படுத்தியது. சரசு என் தோழி. அவளுடைய உரிமையை, அவள் கவனிக்காமல் இருந்தாலும் நான் உரிமைப்படுத்திக் கொண்டது எவ்வளவு பெரிய தவறு?

தானாக எடுத்துக் கொள்ளா விட்டாலும், பிறருக்குச் சொந்தமான பொருளை வாங்குவதே தவறுதானே! என் அன்புத் தோழி என் ஆபாச நடத்தையால் அணு அணுவாகச் சாகிறாள்.

கலையுலகத்திலே கலந்து விட்ட கட்டழகி நான். கணவன் என்ற ஒரு பாதுகாவலன் இல்லாமலே நான் காலங் கடத்த முடி



யும்! அப்படி நடத்தினாலும் களங்கம் கற்பிக்க முடியாது. காரணம் நானிருப்பது கலை உலகம். களங்கமற்றது. ஆனால் சரசுவின் நிலை முற்றிலும் வேறுபட்டது. அவள் குடும்பத்தின் விளக்கு. அந்தச் சுடர் விளக்கைத் திறந்தவெளியில் ஏற்றி வைக்க முடியாது. அந்த விளக்கு அணைந்து விடாமலிருக்க, அமைதி நிலவும் பாதுகாப்பான இடம் தேவை! இல்லாவிட்டால் சீறி எழும் காற்று அந்த விளக்கின் வாழ்வுக்கு அஸ்தமன கீதம் பாடி விடும்.

அந்தக் குடும்பத்தின் விளக்கு குன்றிலிட்ட தீபம்போல் ஒளி வீச வேண்டுமானால் என் பாதையை மாற்றிக் கொள்ளவேண்டும்.

பனியின் ஈரத்தால் கனத்து வளைந்துபோன மூங்கில் புதர் சூரியனின் சூடேறச் சூடேறத் தானே நிமிர்ந்துதானே ஆக வேண்டும். அப்படித்தான் சிவராஜுவுடன் என் சேர்க்கை பிளவுபட எத்தனையோ நிகழ்ச்சிகள் வெட்டுக் கருவிகளாகப் பயன்பட்டன.

என்னுடன் ஐந்தாறு பெண்கள் ஸ்டூடியோவில் வேலை பார்த்து வந்தார்கள். வாலிப வயதுப் பெண்கள் என்றாலும், வார்த்தை ஜாலம் செய்வதில் வல்லவர்கள். அவர்கள் நடத்தும் அந்தக் கலை உலக வாழ்வு அதைக் கூடவா கற்றுக் கொடுக்காது! தினசரி ஸ்டூடியோ வாரண்டாவில் எங்கள் படை எடுப்பு நடைபெறும். மலர்த் தோட்டத்திலே வட்டமிடும் வண்ணாத்திப் பூச்சிகள் போல் இச்சை போல் சுற்றித் திரிவோம்.

ராமசாமி ஸ்டூடியோ மானேஜர். சின்ன வயது. சிரித்த முகம். அவருடன் ஒருதரமாவது பேச மாட்டோமா என்று அத்தனை பெண்களும் துடியாகத் துடிப்பது எனக்குத் தெரியும். என் சக நடிகர்கள் அத்தனை பேரும் அந்தக் கண்



ணன் கருணைக்குக் காத்துக் கிடந்தார்கள். ஆனால் அந்தக் கண்ணனே ஏங்கித் தவிக்கும் கோபிகா ஸ்திரிகளைவிட்டு இந்த ராதையைத் தேடி ஓடி வருவார் என்று நான் கனவு காணவில்லை. ஆனால் இந்த ராதை, அந்தக் கண்ணனின் குழலோசைக்கேற்ப ஆட மாட்டாள் என்று அவர் புரிந்து கொள்ளவில்லை.

கைக்கும் கருத்துக்கும் எட்டாத ஒன்றைத்தானே தேடித் தேடி அலைவது, மனிதனின் தீராத வேட்கை ஆகிவிட்டது. ராமசாமி மட்டும் என்ன அதற்கு விதி விலக்கா?

செம்படவன் வலையிலே முத்துக்கள் அகப்படாது. என்னை முத்து என்று நான் பெருமைப்படுத்திக் கொள்ளவில்லை. சிப்பி நான். அந்தச் சிப்பிகூடச் சிக்காதே செம்படவன் வலையிலே!

வலை போடும் கலை அத்தனையும் பயன்படாமல் போகவே வலை வீசுவதை விட்டு ஆழ்கடலின் அடியிலே மூழ்கியாவது அள்ளி எடுத்து விடுவது முத்தை என்று முடிவு கட்டி விட்டார் அந்தப் புத்திசாலி.

ஒருநாள் ஷூட்டிங் முடிய இரவு பத்து மணி ஆகிவிட்டது. அன்று எனக்கு மட்டுந்தான் மேக்கப். மேக்கப்பைக் கலைத்து விட்டு எனக்காகக் காத்திருக்கும் காரில் வந்து ஏறினேன். டிரைவர் ஸ்தானத்தில் ராமசாமியைக் கண்டதும், எனக்கு என்னமோ ஒரு திகில் ஏற்படத்தான் செய்தது. மானேஜராயிற்றே மறுப்புக் கூற முடியுமா? அவருக்குப் பக்கத்தில் டிரைவர் இருக்கவே சற்று தைரியத்துடனிருந்தேன். கார் புறப்பட்டது.

கார் ஸ்டூடியோவை விட்டுப் புறப்பட்டு சிங்கநல்லூர் செல்லும் ரஸ்தாவைவிட்டு வேறு வழியில் செல்ல ஆரம்பித்ததும், நான் பயந்தது போலவே ஆகிவிட்டது.

கார் எங்கே போகுதுங்க என்றேன் திகிலுடன். "டவுன்லே கொஞ்சம் வேலையிருக்கு அதைப் பார்த்துட்டுப் போகலாம்" என்று சொல்லிக்கொண்டே காரை வேகமாகச் செலுத்தினான் ராமசாமி.

ஷண்முகா தியேட்டருக்குப் பக்கத்திலே கார் நின்றது. டிரைவர் காரைவிட்டு இறங்கிப்போக ஆரம்பித்தான். எனக்குக் கொஞ்சநஞ்சமிருந்த தைரியமும் பறந்து விட்டது. சரியான, தப்ப முடியாத வெறி நாயிடம் பிடிபட்டு விட்டோம் என்று தீர்மானித்து விட்டேன்.

கார் பேரூர் போகும் ரோட்டில் போய்க் கொண்டிருந்தது. நிலவொளி காருக்குள் வெள்ளித் துண்டுபோல் கிடந்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க முடியாதபடி அத்தனை இருள் காருக்குள்


**திருமணப் பரிசுக்குரிய அரிய நூல்கள்**

| | | | |
|---|---|---|---|
| தம்பதிகள் சுகமாய் வாழ்வதெப்படி? | 3 | 12 | 0 |
| திருக்குறள்—பரிமேலழகர் உரை | 5 | 0 | 0 |
| திருக்குறள் சிறப்புரை | 1 | 4 | 0 |
| முல்லைக்காடு | 0 | 8 | 0 |
| நல்ல பெண்மணி | 2 | 4 | 0 |
| இன்ப நிலா | 1 | 0 | 0 |
| புது வாழ்வு | 1 | 0 | 0 |
| வாழ்க்கை வாழ்வதற்கே | 0 | 12 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி,**
**சென்னை-1**

கவ்விக் கிடந்தது. கார் டாஸ் போர்ட் லைட் ஒளியில் அவன் உருவம் பயங்கரமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஆற்றங்கரை ஓரமாகக் கார் நின்றது. ராமசாமி மௌனமாகக் கீழே யிறங்கிக் கரையோரமாகக் கிடந்த பாறையின் மீது உட்கார்ந்தான். அவனுடைய செய்கை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. என்னதான் நடக்கிறது பார்ப்போம் என்று நானும் சற்று தைரியத்துடன் இருந்தேன். வெகு நேரம் வரை அந்த மௌன நாடகம் நடந்து கொண்டிருந்தது. காரிலுள்ள கடிகாரத்தின் டிக் டிக் சப்தம், ஆற்றுப் படுக்கையிலே தவளைகள் போடும் ஒலியுடனே போட்டியிட்டது. பூவரச மரங்கள் காற்றிலே அசைந்து சலசலப்பை ஏற்படுத்தின. அந்த அதிசயமான, அமைதியான நிலவில் ராமசாமி பாறைமீதமர்ந்து நிம்மதியாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். எவ்வளவு நாழிகைதான் சகித்துக் கொண்டிருப்பது.

காரை விட்டிறங்கி அவரிடம் சென்று, இதெல்லாம் உங்களுக்கே நன்றாயிருக்கா? என்றேன் ஆத்திரத்துடன்.

ராமசாமி என்னை நிமிர்ந்து பார்த்தார். சிகரெட் துண்டைக் கீழே போட்டு அதைச் செருப்புக் காலால் மிதித்துக்கொண்டே, "நன்றாக இல்லை தான்! பஞ்சணை மெத்தையிலே கொஞ்ச வேண்டியவளுக்கு, பாறாங்கல்லேயே படுக்கையாகச் செய்ய நினைத்தது நன்றாக இல்லைதான்! என்ன செய்வது! இது காட்டு ரோஜா வாயிற்றே! பண்பட்ட பூமியிலே சந்திக்க முடியாதே" என்று சொன்னார்.

"உங்கள் வர்ணனையைக் கேட்க நான் வரவில்லை" என்றேன் ஆத்திரத்துடன்.

ஆனால் அவரோ நிதானமாக, "சீ வரும் சூறாவளியால் சுழன்றிடும் தென்னை மரங்களிலே ஒரு தனி யழகு இருப்பதுபோல் கோபத்திலே ஒரு தனியழகு தென்றத்தான் செய்கிறது! அதிலும் உன் கன்னங்களிலே பிரகாசிக்கும் ஒளி"-என்று ஏதேதோ சொன்னார்.

எனக்கு ஆத்திரம் மீறியது. "அந்த ஒளி ஜொலிக்கும் வைர வெட்டு அல்ல! சுட்டெரிக்கும் நெருப்பின் ஒளி; மறந்து விடாதீர்கள்" என்றேன்.

"முள்ளை யணிந்த வண்ணக் காம்! எத்தனையோ நேரம் ஏத்தி நின்றாலும்மலர் தானாக வந்து விழுவதில்லை, எட்டிப் பறித்துத்தான் ஆகவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே என் கையைப் பிடித்திழுத்தான் அந்தக் காதகன்.

என் தொண்டை கிழியக் கூச்சல் போட்டேன். ஓடும் நீரில் எதிரொலி தோன்றியதுதான் மிச்சம்.

## பெரிய பைத்தியக்கார விடுதி

சில நாட்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருந்த பிறகு வந்ததும், சஆதத் கஸன் மிண்டோவை அவரது தோழர்கள் சூழ்ந்து கொண்டார்கள். மிண்டோ சோகமும், ஆர்வமும் கலந்த குரலிலே, எல்லோரையும் நோக்கி, 'தோழர்காள்! நான் சிறிய பைத்தியக்கார ஆஸ்பத்திரியை விட்டு பெரிய பைத்தியக்கார விடுதிக்கு வந்துவிட்டேன்', என்றார்.

—நரேஷ் குமார் ஷாத்

என் பலங் கொண்ட மட்டும் முயன்று தள்ளப் பார்த்தேன், தோல்வி! மலைப் பாம்பு இறுகப் பிடித்து எலும்புகளை நொறுக்கு வதுபோல், அந்த வெறியன் அப்படியே என் உடலைக் கசக்கிப் பிழிந்தான். துவண்டு கீழே சாய்ந்தேன்.

எனக்கு உணர்வு வந்தபோது, அந்த மனித மிருகம் காரின் மீது சாய்ந்து கொண்டிருந்தது. எனக்கு அவன் முகத்தைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. எப்படியோ உடைகளைச் சரி செய்து கொண்டு வந்து காரில் ஏறினேன்.

கார் திரும்பியது. எனக்கு ஏற்பட்ட அந்த அவமானம் என்னை என்னவோ செய்தது. அந்த வெறியனை—"நீ நாசமாகத்தான் போவே", என்று சபித்தேன்.

"ராணி அதிகமாக அலட்டிக் கொள்ளாதே. நீ என்ன சிவராஜ் தொட்டுத் தாலிகட்டிய மனைவியா கண்ணகிபோலக் கதற? சர்க்கார் புறம்போக்கு நிலம் நீ. வசதியுள்ளவர்கள் உபயோகித்துக் கொள்ளலாம் உசிதம்போல' என்றுன் அலட்சியமாக ராமசாமி.

"இப்படிப் பேசுவது உனக்கு வெட்கமாக இல்லை" என்று கத்தினேன்.

"வெட்கப்பட வேண்டியது, அவமானப் படவேண்டியது இனி நீ" என்று சொல்லிக்கொண்டே காரை வேகமாகச் செலுத்தினன்.

என்னையும் மீறி அழுகை பொத்துக் கொண்டு வந்தது. ஆயிரம் ரிஷிகளின் தவத்தைக் கெடுத்து அவர்களது பிரம்மச்சரியத்தைப் பங்கப் படுத்தினலும் ஊர்வசி, மேனகை ஆகியவர்களை எவரும் விபச்சாரிகள் என்று துணிந்து குற்றம் சாட்டவா செய்கிறார்கள் தேவ நடன மாதர்கள் என்று காதல் காவிய நாயகிகளாக அல்லவா ஆக்குகிறார்கள்.

எனக்கு ஏற்பட்ட அந்த அபூர்வ ஆபாச அனுபவம் வீட்டில் அம்மாவுக்கும், குமுதாவுக்கும் தெரியக் கூடாதே என்பதற்காக, என் உணர்ச்சியை அடக்கிக் கொண்டு கண்ணையும் துடைத்துக் கொண்டேன். நல்ல வேளை சிவராஜ் ஊரில் இல்லை. ஒரு வழியாக என்னை வீட்டில் கொண்டுவந்து சேர்த்துவிட்டார் அந்தப் பெரிய மனிதர்.

குளத்தில் ஒரு மூலையில் ஏற்பட்ட அசைவு, அந்தக் குளம் பூராவும் பரவுவதுபோல் அந்தச் சம்பவம் என் மனதிலே ஒரே எண்ண அலைகளை எழுப்பிவிட்டது ஏற்கனவே முடிவுகாண முடியாமல் தவிக்கும் எனக்கு மேலும் புதிய குழப்பம்.

அந்த வெற்றி வீரர் தமது மகத்தான வெற்றியை எப்படியும் வெளிப்படுத்தாமலிருக்க மாட்டார். சாதாரணமாகவே வாயரட்டை அடிக்கும் என் சக நடிகைகளுக்கும் என் விஷயம் கிடைத்து விட்டால் அவ்வளவுதான்! நான் தலை நிமிர்ந்தே நடக்க முடியாது. அந்த அவமானத்தை என்னல் சகிக்க முடியாது.

ஏற்கனவே சிவராஜைவிட்டு விலக வேண்டுமென்று தீர்மானித்த பிறகு, சென்னை ஸ்டுடியோவுக்கு, எனக்கும், குமுதாவுக்கும் வேலைகேட்டு எழுதியிருந்தேன். வரச்சொல்லி பதில் வந்திருந்தது. அதை பயன்படுத்திக் கொள்ள தீர்மானித்து விட்டேன். எப்படியும் இனி கோவையில் இருப்பதில்லை

என்று முடிவுகட்டி விட்டேன்.

நானும் குமுதாவும் சேர்ந்து சம்பாதித்தால், எங்கள் மூவருக்கும் அதுபோதும். பருவமடைந்த குமுதா என் தங்கைதானே. அழகில் என்ன குறைந்துவிடவா போகிறாள்? தாமரைத் தண்டில் தாமரைதான் பூக்கும்! அல்லி பூக்கும் புதுமை ஏற்படாதே!

அம்மாவும், குமுதாவும் என் முடிவை மாற்ற எவ்வளவோ பாடு பட்டார்கள். வற்புறுத் தினால் கிணற்றில் வீழ்ந்து உயிரை விட்டு விடுவேன் என்று ஒரே வார்த்தையிலே வாயடைக்கச் செய்தேன்.

சிவராஜிடம் சொல்லி விடை பெற வேண்டியதுதான் பாக்கி. மற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்டேன். வெளியூர் சென்றிருந்த சிவராஜ் வந்து சேர்ந்தார்.

மாடியில் சிவராஜ் தனியாக இருக்கும் சமயம், நான் மாடிக்குச் சென்றேன். இத்தனை நாள் என்னை எந்தக் கவலையும் படவிடாமல் கட்டிக் காத்துவந்த அந்த அபாக்கியவானைக் கவலைக் கடலில் ஆழ்த்தப் போகிறேன்.

மாடிப் படிகளிலே மெதுவாக ஏறினேன். மரப் படிகளின் மீது காலை வைக்கும்போது, தட், தட் என்று சப்தம் ஏற்பட்டது. ஒவ்வொரு சப்தமும் எனக்கு என்னவோ "துரோகி" "நன்றி கெட்டவளே" என்று என்னைக் குற்றம் சாட்டுவதுபோல் தோன்றியது. சூழ்நிலையின் காரணமாகப் பெற்றெடுத்த குழந்தையைத் தன் கையாலேயே கொன்று விட்ட தாயின் பாசத்தை எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? எந்தச் சூழ்நிலை அவளைத் தூண்டியது என்று பரிசீலனை செய்யத்தானே வேண்டும். பகுத்தறிவாளர்கள்; அவளை இரக்கமில்லா அரக்கி என்று சொன்னால் நானும் நன்றியில்லாத நாசக்காரிதான்.

சிவராஜ ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார். உள்ளே நுழைந்தேன். நான் வந்துங்கூட புத்தகத்திலே இருந்த கவனத்தை அவர் திருப்பவே யில்லை.

எப்படிச் சொல்வது என்று புரியவேயில்லை. என் மனதிலே என்னென்னமோ உணர்ச்சிகள் தோன்றின. என் தொண்டையை அடைத்துப் பேசவொட்டாமல் செய்தது. புகை மண்டலத்திலே சிக்கி மூச்சுத் திணறுவதுபோல் திணறினேன். எப்படியோ நான் சமாளித்துக்கொண்டு, "நான் மெட்ருஸ் போகிறேன்" என்றேன் தட்டுத்தடுமாறி.

சிவராஜ் நிமிர்ந்தார்! அவரது முகத்திலே எந்தவிதமான உணர்ச்சியும் வெளிப்படவில்லை. ஆத்திரத்தால் அலறுவார், கடுஞ் சொற்களை வாரி வீசுவார், சுழல் சுழன்றடிக்கும் என்றெல்லாம் எண்ணினேன். ஆனால், அங்கே எதிர்பாராதது நடந்துவிட்டது.

"எதிர்பார்த்த சம்பவந்தான் ராணி!" என்றார் அமைதியாக. பிறகு சிறிதுநேரம் மௌனமாகயிருந்தார்.

என்னைத் திட்டி யிருக்கலாம், அல்லது அடித்திருக்கலாம், அல்லது கோபமாக ஒரு பார்வையாவது பார்த்திருக்கலாம்! அப்படிச் செய்யாமல் அமைதியாக இருந்தாரே! அந்த அமைதிதான் என்னைக் கொன்றுவிட்டது.

"அவசரப் படாமல் நிதானமாக முடிவுகட்டு ராணி."

"நன்றாக யோசித்துத்தான் முடிவுசெய்தேன்" என்றேன் சற

னுக் கண்டிப்பான குரலில்.

"நிச்சயமாக போகணுமா?" என்றார் தயக்கத்துடன்.

"இந்த ஒரு விஷயத்திலே என்னை வற்புறுத்தாதீர்கள். உங்கள் இஷ்டப்படி இத்தனை நாள் ஆடிவிட்டேன். இனி என்னிஷ்டப்படி விடுங்கள்" என்றேன்.

சிவராஜ் தலை குனிந்து கொண்டிருந்தார். அவர் என்ன செய்கிறார் என்றே எனக்குத் தெரியவில்லை. சிறிதுநேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அய்யோ! என்ன சிவராஜா அழுகிறார்?

என் தைரிய மெல்லாம் தவிடு பொடியாகிவிட்டது. அவரது கண்ணீரைக் கண்டதும் என்னையும் மீறி அழுகை பொத்துக்கொண்டு வந்தது.

"ராணி என்னைக்கும் உன்னை நான் மறக்க மாட்டேன். உன்னைத் தவறாக உபயோகித்தேன் என்று நினைக்கலாம், என் நிலை அப்படி. உனக்காக எப்பவும் எதையும் செய்யத் தயார். செய்யவும் செய்தேன் என்று உனக்குத் தெரியும். உன் முடிவுக்குப்பின்னே நான் ஒன்றும் குறுக்கே பேசப் போவதில்லை உன் நிலையை நான் புரிந்து கொண்டேன். ஆனால், ஒன்றை மட்டும் மறந்துவிடு ராணி! உன்னை விலைகொடுத்து வாங்கினேன் என்று நினைப்பதை மட்டும் உன் நினைவிலிருந்து அகற்றிவிடு. வாழ்விலே சுடர்விடப்போகும் துல்லியமான துருவ நட்சத்திரம் நீ என்று எண்ணியிருந்தேன். ஆனால் நீ கணத்தில் பளிச்சிட்டு அறுந்துவிழும் எரி நட்சத்திரம் ஆகிவிட்டாய். என்னால் உன்னை மறக்கவே முடியாது! ஏன் உன்னாலுங்கூட நீ என்ன முயற்சி செய்தாலும் என்னை மறக்கமாட்டாய்! மறக்கவும் முடியாது!" என்று என்னென்னவோ பேசினார்.

என் இதயம் வெடித்துவிடும் போலாகிவிட்டது. உதிர்ந்த ரோஜா இதழ்களை, ஒன்றுசேர்த்து மலராக்க முடியுமா?

சிவராஜின் கால்களிலே விழுந்து கதறினேன். ஆத்திரம் தீர அழுது தீர்த்தேன். மனப்பூர்வமாக, அந்தக் கடைசி இரவு என்னையும் மீறி அவருடன் ஒத்துழைத்தேன். என் மனதார இன்ப வெறியூட்டினேன் அவ்வளவுதானே என்னால் முடியும்?

ஸ்டேஷனுக்கு அவரும் வந்திருந்தார். என்னை வழியனுப்பிய அந்தக் காட்சி, என் நினைவுத் திரையிலே சதா ஓடிக் கொண்டிருந்தது! என்னவோ மிகவும் வேண்டினவன் சவத்தை, தூக்கிவிட்டுத் துயரத்துடன் நிற்பது போல் நின்றார்! நான் எவ்வளவோ வற்புறுத்தியும் எனக்குப் போட்ட நகையை, திரும்பப் பெற்றுக் கொள்ளச் சம்மதிக்கவே யில்லை, "என் நினைவாக அதாவது இருக்கட்டும் உன்னிடம்" என்றார்.

வண்டி நகர ஆரம்பித்தது! என் கையிலே ஒரு கவரைத் திணித்துக் கொண்டே, "என்னை மறந்து விடாதே ராணி" என்றார். அவர் கண்களிலே நீர்வடிய ஆரம்பித்தது. எனக்கும் அழுகையை அடக்க முடியவில்லை. அம்மாவும் குமுதாவும் அதைக்காண சகிக்காமல் வேறுபக்கம் ஒதுங்கி விட்டார்கள். பிளாட்பாரத்திலே அவர் பரிதாபமாக நின்ற காட்சி என்னை என்னவோ செய்தது.

ரயில் வண்டியிலே கவரைப் பிரித்தேன். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு செக். விசித்திரமான மனிதர். என் நிலைக்கு எட்டாத வானவிளக்கு.

(வளரும்)



# தூக்கமே வாழ்க!

என். தேவாம்சம்

தயவு செய்து இக் கட்டுரையை இரவு வேளைகளில் படிக்கவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன் ஏனெனில் இதை வாசிப்பதற்குள் எங்கு தன்னையும் அறியாமல் தூங்கிப் போய்விடுவீர்களோ என்று அஞ்சுகிறேன்.

அப்பப்பா! இந்தத் தூக்கம் இருக்கிறதே அது மகா பொல்லாதது! அது மகா பொல்லாதது. இதுவும் பெண்களைப்போல் முடியுமென்றால் படியாது, படியுமென்றால் முடியாது, அர்த்தமே வேறுதான் இதற்கும் அகராதி வேறுதான். தூக்கம் வேண்டுமென்று நினைத்து இமைகளை இறுக மூடி, பெரிய மெத்தை தலையணைகளுடன் படுத்தாலும் தூக்கம் வரவே வராது. இது இப்படியென்றால், நாளைப் பரீட்சை! "மாடர்ன் ஹிஸ்டரி வாலியூம்" ஒன்றை இன்று இரவிலேயே முடித்துவிட வேண்டும் என்று எண்ணி அமர்ந்தோமானால் தூக்கம் துரத்திக் கொண்டு வந்து இமைக் கதவுகளை நம்மிடம் 'பெர்மிஷன்' வாங்காமலே அடைக்கும். எத்தனைமுறை முகத்தைக் கழுவினாலும், தம்ளர் தம்ளராக டீயை உள்ளே தள்ளினாலும் ஊஹூம் உன்னை விட்டுச் செல்வேனா என்று விடாக் கண்டனாகத் தொத்திக் கொண்டிருக்கும்.


தேர்வுக்காக மாணவர்கள் விழுந்து விழுந்து படிக்கும் காலங்களில் இரவில் அவர்களைப் போய்ப் பாருங்கள். உங்களையும் அறியாமல் சிரிப்பு பொத்துக்கொண்டு வரும். நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்திருப்பார். மேஜையில் புத்தகம் விரிந்து கிடக்கும். ஆனால் தலை மட்டும் 'டான்ஸ்' ஆடிக் கொண்டிருக்கும். அவர்கள் தலையை சடக் சடக்கென்று வெட்டிக் கொள்வதைப் பார்த்தால் எங்கு வலிப்பு நோய் வந்துவிட்டதோ என்று பயப்பட நேரிடும். அப்படி அவர்கள் ஆடும்போது சில வேளைகளில் மேஜையில் தலை சட்டென்று அடித்து நெற்றியில் பொட்டு வைத்ததுபோல் எலுமிச்சை அளவிற்கு வீங்கிப் புடைத்துக்கூட விடும். எண்ணெய்த் தீபம் வைத்துப் படிப்பவர்கள் பாடோ மிகப் பயங்கரமானது. தூக்க மயக்கத்தில் தன்னையும் அறியாமல் தலை விளக்கில் விழுந்து தலை மயிரெல்லாம் கருகிச் சாம்பலாகி, திருப்பதி மொட்டை எடுத்தவர்களாக மாறுகிறவர்களும் இருக்கிறார்கள்.

சினிமாவிற்குப் போனால், சில சமயங்களில் சிறுவர்கள் பக்கத்தில் உட்கார்ந்து விடுகிறார்கள் என்



பாடோ திண்டாட்டத்தில் திணற வேண்டியதாகி விடுகிறது. எச்சிலை அருவியாகக் கடைவாயில் ஒழுக விட்ட வண்ணமாக என்னருகில் உள்ள பையன் என்மீது திடீரென்று சாய்வான். நான் பலமாகத் தூக்கி அவனை நிறுத்துவேன். சில விநாடிகள்தான் நிமிர்ந்தபடி யிருப்பான். பழையபடி மீண்டும் என் மேலே விழுவான். பின்னும் தூக்கி விடுவேன். சிறுவர்கள்தான் இப்படி யென்ருல், பஸ்ஸில், ரயிலில் போகின்ற பெரிய சில மனிதர்களும் இப்படித் தஞ்சாவூர் பொம்மையாக ஆடுகிருர்கள். இதைப்பற்றி நான் குறைகூற வில்லை. பாவம், இரவெல்லாம் விழித்து வேலை செய்திருப்பார்கள். பகலில் இப்படிச் சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளிலெல்லாம் தூங்கிக் குறையை நிவர்த்திச் செய்கிருர்கள். அதோடு சில மனிதர்களுக்கு தூக்கம் என்ருலே சர்க்கரை வெல்லம்தான். படுக்கையில் விழுந்தவுடனே இவர்கள் தூங்கி விடுவார்கள். ஆனல் பொழுது உச்சிக்கு வந்திருந்தாலும் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதென்ருல் சிரமப்படுவார்கள். அலாரம் அடிக்கும்போது கடிகாரத்தையே நொறுக்கி விடலாமா என்று எண்ணுகிறவர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள்.

இவ்வளவு ஏன்? இந்தத் தூக்கப் பைத்தியம் உலகத்தையே பேயாட்டமாக ஆட்டி வைக்கிறது. சுறு சுறுப்பில்லாமல் திரிகின்றவனைப் பார்த்து "தூங்கி மூஞ்சி எந்நேரமும் தூங்கி வழிந்து கொண்டே திரிகிருன்" என்று சிலர் தூங்காமலே இருப்பவர்கள் கடிந்து கொள்கிருர்கள். அப்படிக் கடிந்து கொள்கிறவர்களைக் கண்டால் எனக்குச் சுத்தமாகப் பிடிக்காது. தூங்கு மூஞ்சியாக உலவுகிறவன்தான் மேதை. ஏது, அவர்களைப் போற்றுகிருனே இவனும் ஒரு தூங்கு மூஞ்சிதான் போலி




ருக்கிறது என்று நினைத்து விடாதீர்கள். அப்படி எண்ணினலும் தவறில்லைதான். சில சமயங்களில் நானும் தூங்கி வழிந்துகொண்டு தான் திரிகின்றேன்.

தூங்கி மூஞ்சி! அவன் பெரிய மேதாவி! அறிவாளி! உலகத்தைப் பற்றி, உலகிலுள்ள கஷ்ட நஷ்டங்களைப்பற்றி நினையாதவன். அவைகளைத் துச்சமென நினைப்பவன் என்ருலும் தகும்.

தூக்கம் என்று ஒன்று இல்லாமலே இருந்தால் மனிதனின் வாழ்க்கையே அட்டர் போராக இருக்கும்' 'கும்பகர்ணனை'ப் போல் ஆறுமாதம் சேர்ந்தபடி தூங்கியும் ஆறு மாதம் விழித்திருந்தாலும் அவ்வளவு நன்றாக இராது. ஒரு நாளில் பாதி நேரம் தூங்கு வதற்காகவே இரவை இயற்கை அளித்திருக்கிறது என்று சொன்னாலும் குற்றமில்லை.

"ரிப் வான் வின்கிள்" என்பவன் இருபது வருடகாலம் தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தானாம் ஒரு காட்டில். அவன் விழித்தெழுந்து நாட்டிற்குள் வந்த போது சகலமும் அவனுக்குப் புதுமையாகத் தோன்றினவாம். இதுதான் கட்டுக் கதையென்றால் இத்தாலி நாட்டில் ஒரு டாக்டர் வருடக் கணக்கில் தூங்காமலே யிருந்தாராம். இவர்



பெறக்கூடிய முறையைக் கண்டறிந்து அதன்படி நடந்து தூங்காமல் இருந்திருக்கலாம். ஆனால் சாதாரணமாக மனிதன் தூங்காமல் வாழ முடியாது. சிலருக்கு கொஞ்சநேரத் தூக்கம் போதுமானதாயும், சிலருக்கு அதிக டாக்டராகையால் தூங்காமல் ஓய்வு நேரத் தூக்கம் வேண்டியதாகவும் இருக்கிறது. ஆனால் அனைவரும் ஒரே அளவுதான் தூங்குகிறார்கள். பொதுவாக மனிதன் ஒருவன் விழித்திருப்பதென்றால் 80 மணியிலிருந்து 90 மணிக்குள்தான் முடியும். அதன் பிறகு ஓரளவாவது தூக்கம் மிகமிக அவசியம். இப்பொழுதுதான் தூங்காமலே பல நாள் சைக்கிள்விடும் சாம்பியன்கள் நாட்டில் பெருகிக்கொண்டு வருகிறார்களே. உண்மையில் இவர்களின் உடல்நிலை சீர்குலையத்தான் செய்கிறது. பச்சைக் குழந்தைகள் ஒரு நாளைக்கு 22 மணி நேரமும், பருத்த மனிதர்கள் 7 மணி நேரமும், மெலிந்த சரீரமுடையவர்கள் 9 மணி நேரமும் தூங்குவது அவசியம்.

தூக்கத்தின் பயனென்ன? முதலாவதாக தூங்குவதால் உள்ளம், உடல் இரண்டுக்கும் நல்ல ஓய்வு கிடைக்கிறது. இரண்டாவதாக ரத்தக் கொதிப்பு தணிவடைகிறது. மூன்றாவதாக மற்ற சமயங்களில் மூளைக்குள் பாய்கின்ற ரத்தம், தூங்குகின்ற நேரத்தில் சருமத்திற்குப் பாய்கிறது. நான்காவதாக இதன் மூலம்தான் உடலிலுள்ள 327 விதமான தசைநார்கள் ஓய்வுபெற்றுத் தளர்ச்சியை நீக்கிக் கொள்கின்றன. ஐந்தாவதாக உள் மூட்டுகள் அனைத்தும் விரிவடைகின்றன. ஆறாவதாக தூங்கும் காலை சுமார் 5 அவுன்ஸ் அளவுள்ள வியர்வை வெளியேறுகிறது. அதிகாலை சுமார் 3 மணிக்கு உஷ்ணம் 2 டிகிரி குறைகிறது. தூங்கும்போது நம்மையும் அறியாமல் அடிக்கடி புரண்டு புரண்டுப் படுக்கிறோம். அப்படிச் சாதாரணமாக 35 முறைகள் நாம் திரும்பிப் படுக்கிறோம். தசைச்

சேர்க்கைகளுக்கு மாறி மாறி அழுக்கமும், ஓய்வும் தரவேண்டி யிருப்பதால்தான் இது நேரிடு கிறது.

**தூக்கஉறுப்பு:** கடுகின் அளவிற்கு சற்று பெரிய ஒரு உறுப்பு நமது தலையின் பின்புறத்தில் இருக் கிறது. அந்த உறுப்புத்தான் நமக் குத் தூக்கமளிக்கும் பணியை ஒழுங்காக நிறைவேற்றுகிறது. இந்த உறுப்பினிடத்தில் உள்ள அதிசயக் குணம் என்னவென்றால் இவ்வுறுப்பு தூங்கினால் நாம் சுறு சுறுப்புடன் விழித்திருப்போம். இது தூக்கம் கலைந்து எழுந்து விட்டால் உடனே நாம் தூங்க ஆரம்பித்து விடுவோம். இன்னொரு கெட்ட குணம் வேறு இதனிடம் இருக்கிறது. நாம் தூங்கியவுடன் நமது ரத்தத்திலுள்ள பெரும் பகுதியை இது குடித்து ஆவி யாக்கி விடுகிறது. ஆகையால் நாம் அதிகம் தூங்கினால், நம்முடைய எடை குறைய ஆரம்பிக்கிறது.

அடேயப்பா! தூக்கத்தைப் பற்றி, தூங்காமல் இவ்வளவு எழுதி விட்டேனே. ஆனால் இதற் குள் நூறு கொட்டாவியாவது விட்டிருப்பேன். இதற்குமேல் ஒரு வரி எழுதுவதென்றால் இய லவே இயலாது. என்னையும் அறி யாமல்தான் பேனா நழுவி விழு கிறது. இதோ தூக்கம் வந்து விட் டது. தூக்கமே வாழ்க என வாழ்த் தித் தூங்குகிறேன்.

❀

புதிய பதிப்பு! சிறந்த தொகுப்பு!!

மாணவர்களுக்கேற்ற

இங்கிலீஷ்—தமிழ் பாக்கட் அகராதி

NEW METHOD

**POCKET DICTIONARY**

15,000-க்கு மேற்பட்ட ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் அர்த்தங்கள் நிறைந்த கையடக்கமான புத்தகம்

பலருக்கும் பயன்படத்தக்க முறையில் தொகுக்கப் பெற்ற அரிய நூல்

விலை ரூபாய் 1—8—0

(முன் பணம் அனுப்புவோர்களுக்குத் தபால் செலவு இனாம்)

இதர் விபரங்கட்கு:

ஸ்ரீமகள் கம்பெனி

சென்னை—1.




# வேண்டாம், விபரீதமாக்க வேண்டாம்!

[ தங்கம் ]

எனதன்பிற்குரிய தங்காய்,

உன் மடல் கண்டேன். கருத்தை நன்கு புரிந்து கொண்டேன். உன் முடங்கல் கண்டவுடன் எனக்கு உன்மேல் முதலில் பரிதாபம்தான் தோன்றிற்று. உன் பெயரிலிருந்தே உன்னைப் 'புதுமைப் பெண்' என்று எண்ணிவிடுவார்கள் அவசரக்காரர்கள். உன் முடங்கல் முழுவதையும் படித்தபின் 'புரட்சிப்பெண்' என்றுகூட எண்ணுவார்கள் சில ஏமாளிகள்.

முதற்கண் உன் சொல்லன்புகளை எடுத்து நீ எப்படிப் பெண்ணல்ல—அதாவது பெண்மையைப் பேணாதவள் என்று விளக்குகிறேன். தங்காய்! மற்றவர்களைப்போல வேற்றூர் அல்ல நான். உன்னை அடிக்கடி கண்டு, பேசி, ஆறுதலும், ஆலோசனையும் சொன்ன தோழியே நிற்க கைப்பிடித்த கணவனுக்கு—துணைவி வரையும் முடங்கல் — நிலை — பிணக்குற்ற நேரம்—காரணம் சில நன்றாகக் கவனி—

"**உம்போன்ற** ஆண்கள் பலர்..."

"பேதையர் கூட்டம் என்ற **இறுமாப்பினால்** தானே......"

"தவறு என்பதைத் **தெரிந்து கொள்ளுங்கள்**........"

"......**மலையேறிவிட்டது**......"

"தத்தாரிபோலத் திரியும் **பேயுமல்ல** நான்!"

"தாங்கள் **தவறாகப் புரிந்து கொண்டு**......"

"**தூற்றினீர்......இல்லை—சேற்றை வாரி யிறைத்தீர்**"

"**துணிந்து** செயலில் **காட்டுங்கள்**......"

"நம் வாழ்வை **விபரீதமாக்க வேண்டாம்**"

இது என்ன நாடகமா? அல்லது நடிப்பா? ஆண்—பெண் வேடமிட்ட அலங்கோலம்தான் காட்சியளிக்கிறதேதவிர, பெண்மையையே காணவில்லையே! ஏதோ அவசரப்பட்டு எழுதியிருக்கிறாய். மேலும் உன் அறிவின் திறனை வேறு துணைக்கு அழைத்திருக்கிறாய். அடுக்கு மொழியில் மோகம் வேறு. தவறம்மா தவறு. பெண்ணினத்தை வேறு துணைக்கு அழைக்கிறாய்—தாய்மையைக் கெடுத்துவிட்டாயே! உன்போன்ற சிலதுகளை நினைத்

தால் எனக்கு இதுதான் ஞாபகத்திற்கு வருகிறது.

சில நபர் 'புரட்சி' 'சீர்திருத்தம்' என்று பேசிவிட்டு, வயிற்றுக்காக திடீரெனக் கட்சி மாறி 'ஜே' 'ஜே' என்று கத்துகிறார்களே, அப்படிக் கட்சிமாறின காளான்களின் நிலை தான் உன் நிலையும். வேண்டாம் தங்காய், விபரீதமாக்க வேண்டாம் என்றே எடுத்துச் சொல்கிறேன்.

கணவனை இழந்தாள்—கைச் சிலம்பு கொண்டாள்—காவலனைக் கண்டாள்—கனலெனச் சொற்களை விரித்தாள்—அங்கேதான் பெண்ணினத்தின் வீரம் விலை பெற்றது—போற்றப் பட்டது—தேவைப் பட்டது. ஆயின் அக் கண்ணகி—தன் காதற் கொழுநன்-பண்புப் பைங்கொடியுடன், பண்ணிசைத்துக் கூடித்திரிந்த காலத்தே, மடல் விரித்து, விடல் வேண்டும் அவளை—வரல் வேண்டும்—தாழ்வுதரல் வேண்டும் என்றியம்பினள் என எடுத்துக்காட்டு ஏதாவது கூறமுடியுமா உன்னால்?

ஆத்திரத்திலே நீ ஆடலழகி, ஆனந்தவல்லி என இழிவு சிறப்பில் பேசுகிறாயே—இலக்கணம் தெரியுமா உனக்கு? பாவம் உன்னைச் சொல்லி என்னபயன்—வாழ்வின் இலக்கணமே தெரியாத நீ அகத்திணை அறிவாயோ? உரைத்துப் பார் எது தங்கமென்று—கணவன் கள்வனல்லன் என்று உலகு உணரச்செய்து பின் நெடுவரை சென்று சாவை அணைத்துக்கொண்ட கண்ணகி சிறந்தவளா?

பாடல் காரணமாய் காதலன் பிரிந்து பின் இறந்தனன் என்றவுடன், ஆடல் அகற்றி, ஊடல் ஒதுக்கி, உள்ளம் விரித்துத் துறவு பூண்ட விளக்காம் மாதவி சிறந்தவளா? இருவருமே சிறப்புடையவர்களல்லவா! இதனை மறந்து மாதவியை ஆனந்தவல்லி என்கிறாயே, அவசரப்பட்டு.

அமைதியாக, அடக்கமாக முழுவதும் கற்று, பின் பிதற்று. பெண்ணே! கோபம் வருகிறதா? வேண்டாம். நீ உன் கணவரை எந்த அளவில் மதிக்கிறாய் என்பதற்கு உன் வார்த்தைகள் இரண்டினைக் காட்டுகிறேன்—பார்.

"உம்போன்ற......" ..."தூற்றினீர்" எழுதலாமா இப்படி? யார் அவர்—துணைவர்தானே -- முன்னிலைக் கொண்டு எழுதலாமா? எச்சரிக்கை வேறு விடுகிறாய். "விபரீதமாக்க வேண்டாம்" என்ன இது? அடக்கம்—அன்பு—தாய்மை எங்கே? விலைக்கு விற்று விட்டாய்? அவைதானம்மா நமக்குச் சொத்து—முதலிலேயே நீ வார்த்தைகளை எடைபோட்டுப் பழகு—பின் எழுதப் பழகு—அவசரப்படாதே.

இனி உன் கருத்துக்கு வருகிறேன். "நீராழங் கண்டாலும் காணலாம், ஆனால் நேரிழையாள் நெஞ்சாழம் காணமுடியாது" இந்த வரிகளை சில பொறுக்கிகள் இந்த நாட்டிலே இடைக்காலத்தில் தூவிப் பரப்பி விட்டார்களே தவிர பண்டைத் தமிழனின் பண்பு வாழ்க்கையில் சான்றுகூற முடியுமா இவைகளுக்கு உன்னால்? தங்காய், நாம் தமிழர்கள். தன்மானத்தோடு வாழ்ந்தவர்கள். "தினைமுற்றிய வனத்திலே, பனையொத்த தோள் கொண்ட காளையினைக் காண்கிறாள் தலைவி. கண்கள் பேசுகின்றன—பின் ஊடல்—பல நாட்கள் கழிந்தன—களவு மணம்—பின்னர் திருமணம்—இது குறிஞ்



கோடீஸ்வரனில் சிவாஜிகணேசனும், ஸ்ரீராமும்.

பிக்சர்ஸாரின் மேற்பார்வையில், திருத்தம் கொண்டு வெளிவரப் போகிறது. படத்திற்கான கதை வசனத்தை ஏ. கே. வேலன் எழுதியிருக்கிறார். நரசிம்ம பாரதி, சக்ரபாணி, என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், ராஜம்மா ஆகியோர் நடிக்கின்றனர்.

## சென்னையில் கேவாகலர் லெபரட்ரி!

இன்னும் ஆறு மாதங்களுக்குள் சென்னையில் கேவாகலர் லெபரட்ரி நிறுவப்படும் என்ற செய்தி நம்மை மகிழ்விக்கிறது. இத்திட்டத்தை கேவாகலர் நிபுணர்கள், சென்னைப் பட முதலாளிகளைக் கலந்து உ வாக்குவர் என்று தெரிய வ கிறது. இந்த நிலைமை நமக்கு உ டாகுமானல், பம்பாய் சென் படமெடுக்கும் நம் முதலாளிகளி குறைபாடுகள் நீங்கும்.

## ஐரோப்பா பயணம் ஒத்தி வைக்கப்பட்

திருவாங்கூர் சகோதரி லலிதா, பத்மினி, ராகினி ஐரோ பாவிற்குப் பயணமாகவிருந்த டம் சில காரியங்களை முன்னி ஒத்திவைத்திருக்கிறார்களாம்.

# கலை அரங்கம்

★

(தென்னாட்டுத் திரைக்காவியம்)

## நீங்களும் கேட்கலாம்

கலை அரங்கத்தில் வரும் இப்பகுதியில்

ஜுலை மாதத்திலிருந்து,

பிரபல பின்னணிப் பாடகர் ஏ. எம். ராஜா

பதில் சொல்லுகிறார்.

கேள்வியைக் கேளுங்கள்;

பதிலை, 'கலைஅரங்கம்' வாங்கிப் பாருங்கள்.

அதிகப் பிரதிகள் தேவையான ஏஜெண்டுகள்

முன்கூட்டியே அறிவித்துவிட வேண்டும்.

கேள்வி கேட்கும் வாசகர்கள்;

**ஏ. எம். ராஜா**

**C/O கலைஅரங்கம்**

சென்னை—1.

என்று எழுதவும்:

இதர விபரங்களுக்கு:

மானேஜர்

**கலைஅரங்கம்**

**சென்னை—1**




# சிறைக் கோட்டம்

## மலர். ப. வண்ணன்

சிறையே! அறிவாயுதங்களை வடித்துத்தரும் சிந்தனையாளர் தம் சீர்மிகு பாசறையே! பணக்காரர்களின் பாதுகாப்புக் கவசமே! ஏகாதிபத்தியவாதிகள் நம்பித் தொழும் அரண் என்னும் கடவுளே! கெடுமதி படைத்தோரைக் கசக்கிப் பிழியும் ஆலையே! விடுதலை வீரரின் பூஞ்சோலையே!

இதோ! உன்னிடத்தினின்றும் விடுதலை பெற்றேகுகின்றேன் நான். சிலபல நாட்கள், என் உடலென்னும், தோல்போர்த்திய எலும்புக் கோர்வையைப் பாதுகாப்போடு வைத்துக் காப்பாற்றினாய். நன்றி.

இந்த உன் 'அடைக்கும் செயல்' கண்டு, ஏகாதிபத்திய வாதிகள் மகிழ்ந்தனர். இலட்சிய வீரன் இரும்புக் கோட்டைக்குள்ளே, என்று எக்காளச் சிந்து இசைத்தனர். ஆனால், அவர்களுக்குத் தெரியாது, கேவலம், இந்த உடலை மூடிவைக்கும் ஆற்றல்பெற்ற நீ, இதயத்தை—அதன் உணர்ச்சி மிக்க நரம்புத் துடிப்புகளை—அங்கு கொதித்துப் பாயும் குருதியோட்டத்தோடு இணைந்து, கொட்டும் புதிய எண்ணங்களென்னும் அருவியின் சக்தியைத் தடைப்படுத்தும் தகுதியற்ற 'ஜடம்' என்று.

குற்றம் புரிந்தோருக்குச் சட்டம் காட்டும் முடிவே! மனிதத் தன்மையற்றவர்களின் இதயம் போல் இருண்டுகிடக்கும் சாக்காடே! பயங்கர நோய்களை வழங்கும் 'சுரபி'யே! மக்களின் இதயபூர்வமான பேராதரவை இழந்துவிட்ட அரசாங்கம், அவர்களுக்குக் காட்டும் பூச்சாண்டியே! நியாயமான உரிமையை அடிப்படையாகக்கொண்ட விடுதலை வேட்கை படைத்த நேர்மையான வீரனை என்னை உன்னால் என்ன செய்துவிடமுடியும்?

---

* மணியடிச்ச சாப்பாடு-அச்சடிச்ச சோறு-அவுன்சுக் குழம்பு-அளவுமோரு வேளைதவறாமல் கிடைக்கும் ஒரே இடம் சிறைக் கோட்டம்... அடைக்கலம் புகுந்தாரை அன்புடன் ஏற்கும் இன்பக் கூடம்.........

* சாப்பிட மறுத்தால் விடமாட்டார்கள் அங்கே. 'பசிக்குதே சாப்பாடுதா' என்று கேட்டால் உதைப்பார்கள் வெளி உலகிலே. எனவே வள்ளல் தன்மைவாய்ந்தபுனிதமான சிறைக்கோட்டத்தை:வசன காவியமாக்கித் தருகிறார் எழுத்தாளர்.

கொள்ளை, கொலை புரிந்தோரை,
கற்பழித்த காதகரை, மோசடித்
தொழில் கொண்டோரை, பகல்
வேடக்காரரை, இருட்கால இன்ப
வேலரை, கள்ளச் சாராயப் பேர்
வழிகளை எல்லாம் ஆட்டு மந்தை
யென ஒன்றுசேர்த்துப் பூட்டி
யடைக்கும் தொழுவம் நீ! அவர்
கட்கெல்லாம் துன்பநீர் வழங்கு
கின்ற நச்சுக்கேணி! உணர்வேன்.

ஆனால், சிறையே! ஒருவகையில்
நீ பரோபகாரி! அன்னம் வழங்கும்
அறநிலையம்! கள்ளருக்கும், கய
வருக்கும், கருணை கொண்டு, மன
முவந்து 'உண்டி'யளிக்கிறாய், ஓய்
வளிக்கிறாய்! இன்னும் 'இட்ட அடி
நோக, எடுத்த அடி கொப்பளிக்க,
வட்டில் சுமந்து, மருங்கசைய, முக்
கனி மட்டுமின்றி, பிள்ளைக்கனி
விற்றுங்கூட, பிழைக்க முடியாத
அவலநிலையில், உடல்விற்க அஞ்சி,
வேறு வழியின்றி, காற்றோடு காற்
றாய்த் தன் ஆவியைக் கலக்கவிட்டு
அத் 'தீயுமிழ் தென்றலை' மாளிகை
வாசிகளுக்கு மரணப் பரிசாகத்
தந்து, மண்ணிலே தங்களின் எழில்
உடலைப் புதைத்திட எண்ணிய
இளம் விதவைகள், கடைசிநேரத்
தில் காருண்யமிக்க அரசாங்கத்தால்
காப்பாற்றப்பட்டு, தற்கொலைக்கு
முயன்றவள் என்னும் முத்திரை
யோடு சிறையே! உன்னிடத்திலே
கொண்டுவந்து ஒப்படைக்கப் படு
கின்றனர். பிள்ளையை விற்றும்
பெறமுடியாதுபோன உணவை,
எவ்விதத் தொல்லையுமின்றி, அவர்
களுக்கு நீ தருகிறாய். என்னே
உன் கருணை!

அந்தோ! சிறைக்கோட்டமே!
உன் எழிலான கரிய உருவினைக்
களைந்து, அங்கு ஒளி பாய்ச்ச எண்
ணுவோர் எத்தனைபேர்! சீர்திருத்
தம் செய்ய விழையும் 'சிற்பி'கள்
எத்தனைபேர்! இவைகளாவது
போகட்டும்! சிங்காரச் சிறையே'
உன்னையே சிதைத்திட வேண்டு
மென்று, நேர்மை முரசு தட்டி,
மனிதத்தன்மை என்னும் எஃகு
சம்மட்டி ஏந்தி, ஒரு ஆற்றல்படை
விரைகிறதே! அதன் விளைவு......?

'சிறையைச் சீர்திருத்தினாள்,
மேல்புலத்து மாதரசி ஒருத்தி'
பாஸ்டில் சிறையையே படுசூரண
மாக்கினர், பாரிஸ் நகரத்துப் பாட்
டாளிப் பட்டாளத்தினர், என்ற
இந்த "சிறைச் செய்தி"களையே
வரலாறு தருகிறது. ஆனால் முற்ற
முற்ற மனிதத் தன்மையும், பகுத்
தறிவும், நீதியும் நிரம்பப்பெற்ற
காரணத்தால், இன்ன நாட்டினர்
சிறைச்சாலைகளே இல்லாமல் வாழு
பின்றனர் என்ற செய்தியை அது
தரவில்லை. முழுச் சுதந்திரமும்,
பகுத்தறிவும், முதிர்ந்த நாகரிகமும்
படைத்தோர் யாம் என மார்தட்டும்
மக்கள், என்று உன்னை--சிறையை-
ஒழித்து, வரலாற்றேட்டில் புதிய-
புதுமையான அத்தியாயத்தைச்
சேர்க்கின்றனரோ அன்றே அவர்
"முழு மனிதர்கள்."

மனிதத் தன்மையின் களங்கமே!
நச்சரவச் செயலினரைப் பார்த்து
நீ சிரிக்கிறாய்! ஆனால், இலட்சிய
வாதிகள் உன்னைப் பார்த்துச் சிரிக்
கிறார்கள்! அந்தப் புகையும் உள்
ளத்து நகையின் விளைவு.........?
பொறுத்திருந்து பார்ப்போம்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

ப. அரங்கப்பன்,
காரமடை.

கே: புதுமை எங்கே பிறந்து, எங்கே அழிகிறது?

ப: பேச்சிலே பிறந்து, காற்றிலே அழிகிறது.

நாப. திராவிடச் செல்வன்,
கேடா.

கே: ஸ்வீடன் நாட்டிலுள்ள எனது பேனு நண்பர் "தமிழ் என்ருல் என்ன" என்று கேட்டிருக்கிருர். அவருக்கு என்ன பதில் எழுத?

ப: "ஸ்வீடன் என்ற ஒரு நாட்டை வரலாறு காணு முன்னே, நாகரிகமும், பண்பும் கொண்ட மக்கள் பேசிய செவிக்கினிய மொழி," என்று எழுதும்

உத்தரியநாதன்,
சாம்பியன், கே. ஜி. எப்.

கே: கலைஞர்களும், எழுத்தாளர்களும் படைப்பதும், எழுதுவதும், வயிற்றிற்காகவா? அல்லது மக்களுக்காகவா?

ப: வயிற்றிற்காகவே வாழும் மக்கள் இனத்துக்குத்தான்.

எம். ஆர். கந்தசாமி
கோவை.

கே: மலர் உண்மையில் எப்போது வாடுகிறது?

ப: சூடக்கூடியவர் எவருமில்லையே என்று காட்டிலே மலர்ந்து கிடக்கையில்.

ப. அ. ச. கோவேந்தன்
வேலூர்.

கே: உலகில் மிகமிக இனிமையானது எது?

ப: அடுத்தவர் மனமாரப் புகழும் வார்த்தைகள்.

வ. ஜெகதீசன்,
வேலப்பாடி.

கே: எது எழுத்து?

ப: நல்ல உள்ளத்தின் விளைவு.

சி, டி. பிரௌனிங்,
சாத்தூர்.

கே: உண்மைக் கலை எது?

ப: உங்கள் மனதிற்குப் படும் நல்ல படைப்பு.

ஆர். இராமசாமி,
மைசூர்.

கே: புலவர் குழந்தையின் "இராவண காவியம் எங்கே கிடைக்கும்?

ப: எங்குமே கிடைக்காது!

எம். செபஸ்தியான்
செங்கோட்டை.

கே: இசை, எதை எதையெல்லாம் உருக்க வல்லது?

ப: எதையென்று குறிப்பிட்டுக் கூறுவது. எதையும் உருக்க வல்லது இசை. அதன் அணைப்புக்கு இலக்கான எப்பொருளும் உலகில் இருக்கமுடியாது.

# காமிரா வைத்திருப்போர் கவனிக்க

அழகான இயற்கைத் தோற்றங்களை — மனதை மகிழ்விக்கும் காட்சிகளை — நீங்கள் புகைப்படங்களாக எடுத்து வைத்திருப்பின் உடனே எங்கட்கு அனுப்புக.

ஒவ்வொரு படமும் 'புல் சைஸ்' அளவில் இருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதல் தரமான புகைப்படத்திற்குப் பரிசு | ரூ. | 10— |
| இரண்டாம் பரிசு | ரூ. | 5— |

புகைப்படக் கலைப்பகுதி,

**கலைமன்றம் — சென்னை-1**

---

புகைப்படக் கலைப்பகுதி

நுழைவுச் சீட்டு

பெயர் ..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

காமிராவின் பெயர்: ..............................................

இணைத்துள்ள படங்களின் எண்ணிக்கை } ..............................................

..............................................

நாள்: ....................1955 கையெழுத்து

CONNEMARA PUBLIC LIBRARY
7 - AUG 1956
MADRAS

Edited, Printed and Published by S. Francis at his Srimagal Press, 122, Varadamuthiappan St., Madras-1. Phone No. 55332.